www.padippakam.com


# புதிய ஜனநாயகம்

மார்க்சிய - லெனினிய அரசியல் ஏடு
16-31 ஜூலை '91 6/17 விலை ரூ.2



கள்ளப்பணம்
கழிசடை
அரசியலில்
பூத்த ஆட்சி!

ண்ட வந்த பிடாரியே



ஈழத்தமிழரை விரட்டாதே!

படிப்பகம்

www.padippakam.com



# சிவந்த கண்கள் கவனிக்கட்டும்

வெறும் 5,000 ரூபாய்க்கு ஒரு பெண் விற்கப்பட்ட சம்பவம் அண்மையில் நடந்துள்ளது. குஜராத் - ராஜ்பைப்லா கிராமத்தில் அருணாபென் என்ற பெண்ணுக்கு நேர்ந்தது இது. இவளுடைய உறவினர்கள் தந்திரமாக ஏமாற்றி வற்புறுத்தி கோபால் என்பவனுக்கு 5,000 ரூபாய்க்காக மணமுடித்துக் கொடுத்துள்ளனர். திருமணத்திற்குப் பின் அவனுடைய காமவெறிக்கு இணங்காமல் மறுத்தவளையும் வற்புறுத்தி வாழவைத்துள்ளனர். இச்செய்தி அண்மையில் இவ்வூரில் நடந்த பஞ்சாயத்தில் அப்பெண்ணே வந்து சொன்ன பொழுதுதான் வெளிவந்தது.

பாகிஸ்தான் வசமுள்ள காஷ்மீர் பிரதேசத்திற்கு நடந்த தேர்தலில் ஆளும் நவாப் செரிப் தலைமையிலுள்ள கட்சி பல மோசடிகளை செய்து தனது ஆதரவு கோஷ்டியை வெற்றி பெற வைத்தது. எனவே, காபந்து பிரதமர் பொறுப்பேற்றிருந்த ராஜா மம் ஹுசைன் ரதோர் என்பவர் (இவர் 'பாக்கிஸ்தான் மக்கள் கட்சி'யைச் சேர்ந்தவர்) தனது பதவியை வெற்றி பெற்றவர்களுக்கு மாற்றிதர மறுத்தார். தேர்தல் வன்முறைகள் - மோசடிகள் மீது விசாரணை நடத்த வேண்டும் என கோரினார். இதனால் பாக்கிஸ்தான் அரசு இவரைக் கைது செய்து தனது அடிவருடிகளிடம் காஷ்மீர் பிரதேசத்தை ஒப்படைக்க முயற்சி செய்து வருகிறது. காஷ்மீர் பகுதியில் இவற்றைக் கண்டித்து போராட்டங்களும் கிளம்பியுள்ளன. இங்கே இந்தியா வசமுள்ள காஷ்மீரில் காங்கிரசுக் கட்சி தேர்தல் மோசடி செய்வதைப் போலவே, அங்கே பாகிஸ்தான் வசமுள்ள காஷ்மீரிலும் நடக்கிறது.

ஆளும் நவாப் செரிப் கும்பல், நடத்திய தேர்தல் மோசடி; கள்ள ஓட்டுச் சீட்டுகளை காண்பிக்கும் எதிர்க்கட்சித் தலைவர் ரதோர்.



மணிப்பூரில் போதை மருந்துக்கு எதிராக இயக்கம் நடத்தி வெற்றி பெற்ற மக்கள் விடுதலைப் படையினர் (PLA) அடுத்த கட்டமாக சாராயத்துக்கு எதிராகவும், பாலியல் வெறியர்களுக்கு எதிராகவும் இயக்கம் நடத்தி வருகின்றனர். சாராய உற்பத்தியோ விற்பனை செய்வதோ கூடாதென அவர்கள் எச்சரித்து மக்கள் ஆதரவுடன் கடைகளை மூடச் செய்ததன் விளைவாக மணிப்பூர் மாநில அரசே அதிகார பூர்வமாக மதுவுக்கு தடை விதித்துள்ளது. இதே போல ரகசிய விபச்சார விடுதி நடத்திவந்த ஒரு சமூக விரோத கும்பலை மக்கள் விடுதலைப் படையினர் அழித்தொழித்தனர். கற்பழிப்பு குற்றங்களில் ஈடுபட்டுவந்த ஒரு போலீஸ் அதிகாரியை எச்சரித்தும் திருந்தாததால் அவரது அலுவலகத்திலேயே சுட்டுக் கொன்றனர்.

இலங்கையைச் சேர்ந்த பல இளம் பெண்கள் இத்தாலியர்களுக்கு தலா 8000 டாலர் வீதம் விற்கப்பட்டுள்ள செய்தி அண்மையில் அம்பலத்திற்கு வந்தது. "40 வயதுக்கும் மேற்பட்ட இத்தாலி மாப்பிள்ளை ஒருவருக்கு 17 - 24 வயதுடைய இளம் பெண் தேவை" போன்ற விளம்பரங்களைப் பார்த்து பலர் ஏமாந்து விடுகிறார்கள்! வரதட்சணை கொடுமையில் பெண்களை மணம் முடிக்க முடியாத பெற்றோர்கள்தான் இவ்விளம்பரத்திற்கு பலியாகிறார்கள். இறுதியில் இப்பெண்கள் இத்தாலியில் இழிவான வேலைகளைச் செய்யும் அடிமைகளாகவும், விபச்சாரிகளாகவும் மாற்றப்படுகிறார்கள்.

ரஷ்ய பாராளுமன்றத்தில் கடந்த ஜூலை 1-ந் தேதி 70 சதவிகித அரசு நிறுவனங்களை 5 வருடத்திற்குள் தனியாருக்கு தாரைவார்க்கும் மசோதா ஒன்று நிறைவேறியது. இதன் விதிப்படி ரஷிய பிரஜையாக மட்டுமே (அவர் வெளிநாட்டவராக இருந்தாலும் கவலையில்லை) இருந்தால் போதும்; அரசு நிறுவனத்தை வாங்கிவிடலாம். ஏகாதிபத்தியங்கள் தங்கள் பினாமிகள் மூலம் வாங்குவதற்கான வழிவகைதான் இது. பின்னே! ரஷ்யாவின் பொருளாதார நெருக்கடியை தீர்க்க அந்நிய உதவிக்காக கையேந்தியுள்ள கோர்பி கும்பல் இப்படி ஏதாவது செய்தால் தானே ஏகாதிபத்தியங்கள் கருணை காட்டும்?

குஜராத்தில் ஜூன் 27-ந் தேதி விஷச்சாராயம் குடித்து 41 பேர் பலியானார்கள். 100க்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டனர். இது தொடர்பாக கள்ளச்சாராய விற்பனைக்கு மூன்று போலீசு இன்ஸ்பெக்டர்கள் உடந்தையாக இருந்தது அம்பலத்திற்கு வந்து தற்காலிக நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். மேலும் அகமதாபாத்தில் செல்வாக்குடன் 'தொழில்' நடத்திவரும் கிஷோர் சிங் என்பவனால் விநியோகிக்கப்பட்ட கள்ளச்சாராயம்தான் இது எனவும் கண்டுபிடிக்கப்பட்டது. இவன் அரசியல் வாதிகள், அதிகாரிகள் உதவியோடு தலைமறைவாகியுள்ளான். அரசியல்வாதிகளுக்கு மாதம் ஒரு லட்சம் ரூபாயும் அதிகாரிகளுக்கு 7,000 முதல் 25,000 ரூபாய் வரையும் 'மாமூலாக' கொடுத்தால் யாரும் பகிரங்கமாகவே தொழில் நடத்தலாம். ஏன் இச்சம்பவத்திற்கு பின் உள்துறை மந்திரி நார்ஹாரி அமின் கூறுவதையே கேளுங்கள்! "எங்காவது 10,000 ரூபாய்க்கு மேல் கள்ளச்சாராயம் விற்பவர் கண்டுபிடிக்கப்பட்டால் அப்பகுதி போலீசு இன்ஸ்பெக்டர் மீது நடவடிக்கை எடுக்கப்படும்" என்று போலீசுக்கு எச்சரித்துள்ளார்.(?).



சீனாவில் வருடத்திற்கு 5 லட்சம் பெண் சிசு படுகொலை நடக்கிறது. பெண்களைவிட ஆண்களுக்கே சமூகத்தில் பாதுகாப்பும், அந்தஸ்த்தும், அங்கீகாரமும் கிடைக்கிறது. பெண்கள் அடுத்த வீட்டிற்கு போகிறவள்; நமது வம்சா வழியை தொடர்வது ஆண்கள்தான் என்ற சிந்தனை மக்களிடையே பரவிக் கிடக்கிறது. ஆண்களே வயல் வேலைகளில் அதிகம் பயன்படுத்தப்படுவதாலும் ஆண் குழந்தைகளையே கிராம மக்கள் பெரிதும் விரும்புகிறார்கள். கடைசி காலத்தில் தங்கள் மகன்தான் தங்களை காப்பாற்றுவான் என்ற அடிப்படையிலும் பெண்குழந்தைகளை மக்கள் வெறுக்கிறார்கள். இவைதான் பெண் சிசு - படுகொலைக்கு இங்கு அடிப்படையாக இருக்கின்றன என ஓர் ஆய்வு கூறுகிறது. பழமை பிற்போக்கு சிந்தனையையும், பெண்ணடிமைத் தனத்தையும், பெண்களுக்கு சொத்து, சமூக உரிமை அற்ற முதலாளித்துவ முறையையும் மீட்டெடுத்து இச்சாதனை படைத்திருக்கிறது, திருத்தல்வாத டெங் கும்பல். ஆனால், மாவோவால் நடைமுறைப்படுத்தப்பட்ட "ஒரு குடும்பம் ஒரு குழந்தை" என்கிற திட்டம்தான் இதற்கு காரணம் என அவதூறு பரப்பி வருகிறது.



படிப்பகம்

www.padippakam.com

புதிய ஜனநாயகம்

மார்க்சிய - லெனினிய அரசியல் ஏடு

ஆறாம் ஆண்டு

17

16-31 ஜூலை '91

உள்நாடு :
தனி இதழ் : ரூ.2
ஆண்டு சந்தா : ரூ.48

வெளிநாடுகள் :
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா : US $ 11

படைப்புகள் அனுப்பவும் மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்:

இரா.சண்முகராசு
ஆசிரியர், புதிய ஜனநாயகம்
21, பாலாஜிசிங் தெரு,
சைதாப்பேட்டை,
சென்னை - 600 015.

# விநோதமான ஜனநாயகம் திவாலான பொருளாதாரம்

நரசிம்மராவ் தலைமையிலான காங்கிரசு அரசாங்கம் சமீபத்திய நாடாளுமன்றப் பலப்பரீட்சையில் தப்பிப் பிழைத்து விட்டது. நாடாளுமன்றத்தில் நம்பிக்கை வாக்குப் பெறுவதில் வெற்றி பெற்றுவிட்டது. நாடாளுமன்றத்தின் பெரும்பான்மை உறுப்பினர்கள் அதை ஆதரிப்பதினால் அல்ல. இரண்டு பெரிய எதிர்க்கட்சிக் கூட்டுகளில் ஒன்றான தேசிய முன்னணி - இடதுசாரி கூட்டணி வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாததால் காங்கிரசு அரசாங்கம் நீடிக்கிறது. அதாவது மொத்த எண்ணிக்கையில் கால் பங்குக்கும் மேலான உறுப்பினர்கள் இல்லாமலேயே முடிவெடுத்த நிலையில் இது சாத்தியமாகி உள்ளது. இதுதான் இந்திய ஜனநாயகத்தின் நிலைமை.

ஜனநாயக ஆட்சியின் உயிராதாரமான அம்சம் பெரும்பான்மையான மக்களது ஆதரவு பெற்றவர்களின் அரசாங்கம் அமைவது! ஏறக்குறைய பாதி வாக்காளர்களே ஓட்டுப் போடும் நிலையில் அங்கேயே பெரும்பான்மை அடிபட்டுப் போய்விடுகிறது. பதிவாகும் வாக்குகளில் 37 சதவீதமே பெற்றுள்ளதுதான் காங்கிரசு; அது ஒட்டு மொத்த வாக்காளர்களில் 20 சதவீதம் கூட இல்லை. அதாவது நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை பெறாதது மட்டுமல்ல; மொத்த வாக்காளர்களில் ஐந்தில் ஒரு பங்கினர் ஆதரவு பெற்ற கட்சிதான் நாட்டை ஆளுகிறது. இதற்கு முந்தைய சந்திரசேகர், வி.பி. சிங் தலைமையிலான அரசுகளின் நிலைமையோ இதைவிட மோசமானது.

இனிமேல் இந்த நிலைதான் நீடிக்கும்; இனி நாடாளுமன்றத்தில் எந்தவொரு கட்சியும் அறுதிப் பெரும்பான்மை பலம் பெறுவதற்கான வாய்ப்புக் கிடையாது என்று முதலாளித்துவ அரசியல் நோக்கர்களே கூறுகின்றனர். ஒரு கூட்டு அல்லது சிறுபான்மை அரசின் கீழ் நீடிப்பது வழக்கமாகி விட்டது என்கின்றனர். சிறுபான்மையாக ஆளும் தரப்பும் பெரும்பான்மையாக எதிர்த்தரப்பும் நீடிக்கும் விநோதமான ஜனநாயகம்! ஜனநாயகத்தின் இன்னொரு உயிராதாரமான அம்சம் எதிர்த்தரப்பு தனக்குரிய பங்காற்றுவது! அதாவது ஆளும் தரப்பினர் தவறுகளை எதிர்த்துப் போராடி, மக்கள் தேர்ந்தெடுப்பதற்கான மாற்றுத் தலைமையாகப் பணியாற்றுவது! ஆனால் இன்னொரு தேர்தலை எதிர்கொள்ள அஞ்சும் எதிர்க்கட்சிகள் அனைத்துமே இந்த அரசாங்கம் கவிழாமல் பாதுகாக்கும் பொறுப்பை ஏற்றுள்ளன. தேசிய உறுதிப்பாடு, ஒற்றுமை -ஐக்கியத்தைக் காப்பது, தேசிய நெருக்கடிகளுக்குத் தீர்வு காண்பது ஆகிய காரணங்களை முன் வைத்து இந்த அரசாங்கத்திடம் 'நேர்மறையான அணுகுமுறை' மேற்கொள்வதாக தேசிய முன்னணி - இடதுசாரி கூட்டணி கூறுகிறது. இதே காரணங்களோடு, இன்னொரு தேர்தலை நாடும் மக்களும் தாங்க மாட்டார்கள் எனக் கூறும் பாரதீய ஜனதா - சிவசேனா கூட்டணியோ பிரச்சினைகள் அடிப்படையில் காங்கிரசு அரசாங்கத்துக்கு ஆதரவு தெரிவிக்கிறது. பெரும்பான்மையாக இருந்தும் பல்லு பிடுங்கப்பட்ட நிலையில் எதிர்த்தரப்பினர் உள்ளனர்.

ஒரு ஜனநாயக அமைப்பில், ஒரு சிறுபான்மை அரசு தேசிய முக்கியத்துவமுடைய, கொள்கை பூர்வமான முடிவுகள் எடுப்பதற்கான அதிகாரம் கிடையாது என்று இதுவரை எல்லாத்தரப்புமே கூச்சலிட்டனர். ஆனால் இப்போதோ ஆட்சி கவிழ்ந்தால் நெருக்கடி ஏற்படும், நாட்டுக்கு ஆபத்து, நாட்டின் உறுதிப்பாடு குலையும், மீண்டும் தேர்தல் வரும் என்பதையே ஆதாரமாக வைத்து ஒரு சிறுபான்மை அரசு ஆளுவது என்றாகிவிட்டது.

இந்தச் சிறுபான்மை அரசு நாட்டையும் மக்களையும் பாதிக்கும் உயிராதாரமான பல முக்கிய முடிவுகளை எவ்விதத் தயக்கமும் தடையும் இல்லாமல் செயல்படுத்துகிறது. இராணுவம், துணை இராணுவத்தை ஏவி அரசு பயங்கரவாதத்தை விரிவுபடுத்துகிறது. நாட்டின் சுயாதிபத்தியம், தற்காப்பு மற்றும் பொருளாதார நலன்களை ஏகாதிபத்திய வல்லரசுகளிடம் மறு அடகு வைக்கிறது. ரூபாய் மதிப்புக் குறைப்பு, சேமிப்புத் தங்க விற்பனை போன்றவை ஐ.எம்.எஃப் மற்றும் உலக வங்கி உத்திரவுகளை ஏற்று வரவிருக்கும் பொருளாதாரக் கட்டுமான மாற்றங்களின் ஆரம்ப நடவடிக்கைகள்தாம். வட்டி, தவணை, காலக்கெடு ஆகிய நிபந்தனைகள் மட்டுமல்ல, வரி - வர்த்தக ஒப்பந்தங்கள், இராணுவ - வெளிவிவகார ஒப்பந்தங்கள், நாட்டின் அரசியல் - பொருளாதார அமைப்பு மாற்றங்கள் ஆகிய அனைத்துத் துறைகளிலும் ஏகாதிபத்திய உத்திரவுகளுக்குக் கீழ்ப்படிந்து போகிறது.

உலகிலேயே மிகவும் உத்தமமானது என்று கூறிக் கொள்ளும் முதலாளித்துவ நாடாளுமன்ற ஜனநாயகம்; உலகிலேயே மிகவும் உன்னதமானது என்று கூறிக் கொண்ட காந்தி நேரு பரம்பரையின் கூட்டுப் பொருளாதார அமைப்பு — இவை இரண்டுமே நெருக்கடிகளுக்குள் சிக்கித் திவாலாகிவிட்டன. இதைப் பயன்படுத்திக் கொண்டு ஒரு சிறுபான்மை அரசு இந்த நாட்டையும் மக்களையும் ஏறிச் சவாரி செய்கிறது. எதிர்க்கட்சிகள் அனைத்துமே அதற்குத் துணை போகின்றன. ●

படிப்பகம்

www.padippakam.com



# ஒண்ட வந்த பிடாரியே, ஈழத் தமிழரை விரட்டாதே!

"தான் சார்ந்திருக்கும் இனம், மதம் அல்லது சமூகக் குழுவின் காரணமாகவோ, தான் கொண்டிருக்கும் அரசியல் கருத்தின் காரணமாகவோ, தனது உயிருக்கும், சுதந்திரத்திற்கும் அபாயம் நேரக்கூடும் என்றால் அந்த அகதியை, தஞ்சமளித்த அரசு வெளியேற்றவோ, அத்தகைய அபாயம் உள்ள அவரது நாட்டுக்குத் திருப்பி அனுப்பவோ கூடாது"

— அகதிகள் குறித்த ஐ.நா.வின் ஜெனிவா மாநாட்டுத் தீர்மானம் எண் 33 - 1 ஜுலை 1951

அகதி ஒருவருக்குத் தஞ்சமளித்த நாடு அவரைத் திருப்பியனுப்பியே தீர வேண்டும் என்றால் அதற்கு ஒரு நிபந்தனை விதிக்கிறது ஐ.நா. தீர்மானம். தஞ்சம் புகுந்த நாட்டில் அந்த அகதி, பாரதூரமான குற்றமிழைத்திருந்தாலோ, தஞ்சம் புகுந்த நாட்டின் பாதுகாப்பிற்கே அபாயம் விளைவித்தாலோ அவரை வெளியேற்றலாம். ஆனால், இந்தக் குற்றங்கள் நிரூபிக்கப்பட்டு நாட்டின் அதி உயர் நீதிமன்றம் அவர்கள் குற்றவாளிகள் என்று தீர்ப்பு வழங்கியிருக்க வேண்டும்.

மனித உரிமைகள் குறித்த ஐ.நாவின் தீர்மானத்தையும், அகதிகள் பிரச்சினை பற்றிய தீர்மானங்களையும் இந்தியாவும் ஏற்றுக் கொண்டிருக்கிறது. அவற்றை மதிப்பது, அமல்படுத்துவதும் இந்திய அரசின் கடமை, பொறுப்பு.

ஆனால், தி.மு.க. ஆட்சியைக் கவிழ்ப்பதற்காகவும், பின்னர் தேர்தலில் ஓட்டுப் பொறுக்குவதற்காகவும் வாழப்பாடி - ஜெயலலிதா கும்பல் பேசிவரும் பேச்சுக்களும் எடுத்துவரும் நடவடிக்கைகளும் ஐ.நா. தீர்மானங்களுக்கும், சர்வதேச மரபுகளுக்கும் நேரெதிராகவே உள்ளன. "ஈழ அகதிகளை விருப்பப்பட்டால் முகாம்களில் அடைத்து வைக்கலாம். அல்லது வங்காள விரிகுடாவில் விசிறியடிக்கலாம்" என்பதே அகதிகள் விஷயத்தில் இக்கும்பல் வைக்கும் அணுகுமுறை.

ராஜீவ் கொலையுண்டானவுடனே ஈழத்தமிழ் அகதிகள் அனைவரையும் இலங்கைக்கே திருப்பி அனுப்பிவிட வேண்டுமென்று வாழப்பாடி, ஜெயலலிதா இருவருமே அறிக்கை விட்டனர். ஆனால், ஆட்சிக்கு வந்தபின் அகில இந்திய வானொலிக்கு அளித்த பேட்டியில் "புலிகளை வெளியேற்றுவோம்; சட்டத்தை மீறுபவர்களை வெளியேற்றுவோம்; டெலோ, ஈ.பி.ஆர்.எல்.எஃப் போன்ற குழுக்களை கருணையுடன் நடத்துவோம்" என்று கூறினார் ஜெயலலிதா. தமிழகத்திலிருந்து வெளியேற்றுபவர்களை எங்கே அனுப்புவீர்கள் என்று நிருபர்கள் கேட்டதற்கு "அதை முடிவு செய்வது மத்திய அரசின் வேலை" என்று நழுவிக் கொண்டார்.

அகதிகள் பல்வேறு முகாம்களிலும், முகாம்களுக்கு வெளியிலுமாக சிதறி இருப்பதனால் அவர்களை கண்காணிக்க இயலவில்லை என்றும், எல்லா அகதிகளையும் தமிழகக் கடலோரத்தில் மூன்று பெரும் முகாம்களை அமைத்து அவற்றில் அடைத்துவிட்டால் கண்காணிப்பது சுலபம் என்றும் கூறுகிறார் ப.சிதம்பரம்.

வாழப்பாடி, சிதம்பரம், ஜெயலலிதா ஆகியோரின் கருத்துக்கள் வெவ்வேறு போலத் தோன்றினாலும் இவர்கள் அனைவரின் நோக்கம் ஒன்றே - அது ஈழ அகதிகள் அனைவரையும் வெளியேற்றுவதுதான்.

இந்த நடவடிக்கைகளுக்கு ஆதாரவாகப் பொதுக்கருத்தை உருவாக்குவதற்கு தமிழகத்தின் தரகு முதலாளித்துவ, பார்ப்பனப் பத்திரிகைகள் துணை நிற்கின்றன. ஈழ அகதிகள் அனைவரின்மீதும் பொய்களையும் அவதூறுகளையும் பரப்புகின்றன. உண்ட வீட்டுக்கு இரண்டகம் நினைத்த துரோகிகளாக அவர்கள் சித்தரிக்கப்படுகின்றனர்.

ராஜீவ், 'கொலைக்குப்' பின் அகதி முகாம்கள் சிறைக்கூடங்களாக மாற்றப்பட்டிருக்கின்றன. முகாம்களிலிருந்து அகதிகள் வெளியே செல்ல அனுமதிக்கப்படுவதில்லை என்பதுடன் பார்வையாளர்களும் முகாம்களுக்குள்ளே அனுமதிக்கப்படுவதில்லை. முகாம்களுக்கு வெளியில் உள்ள அகதிகளின் உறவினர்களோ, நண்பர்களோ முகாமில் உள்ள அகதி ஒருவரைச் சந்திக்க விரும்பினால் அவர் மாவட்ட ஆட்சித் தலைவரின் அனுமதி பெற வேண்டும் என்றும், பிறகு அந்த அனுமதிச் சீட்டுடன் வந்தால் சம்பந்தப்பட்ட அகதியை முகாமின் வாயிலுக்கு அழைத்து அங்கே போலீசின் பார்வையில் 30 நிமிடங்கள் பேசலாம் என்றும் கெடுபிடிகள் தீவிரமாக்கப் பட்டுள்ளன. ஐ.நா. உத்திரவாதம் செய்துள்ள அகதிகளின் பேச்சுரிமை, எழுத்துரிமை, நடமாட்ட உரிமை ஆகிய அனைத்துமே மறுக்கப்பட்டு அகதிகள் சிறைக் கைதிகளைப் போல நடத்தப்படுகின்றனர்.

புலிகள் ராஜீவைக் கொலை செய்திருக்கக் கூடும் என்பது மட்டுமே இவையனைத்திற்கும் காரணம் அல்ல; சோற்றுக்கு விலையாக சுதந்திரத்தைக் கேட்டபோது ஈழ மக்கள் அதை ஏற்காததே அனைத்திற்கும் மூல காரணம். இந்தியாவின் தெற்காசிய பிராந்

## ஈழத்தமிழரை விரட்டாதே! அரங்குக் கூட்டம்

ஈழத் தமிழ் அகதிகளை வெளியேற்றாதே என்ற தலைப்பில் மக்கள் கலை இலக்கியக் கழகம் தமிழ்நாடு முழுவதும் கருத்தரங்கக் கூட்டங்களை நடத்தி வருகிறது. இதன் ஒரு பகுதியாக திருச்சி ஜாபர்ஷா தெரு - ஜெயின் பவனில் 10.7.91 அன்று கூட்டம் நடைபெற்றது. தோழர் தமிழ் மணி தலைமையில் தோழர் கதிரவன் உரை நிகழ்த்தினார். ஈழத்தமிழ் அகதிகளை வைத்து பிழைப்பு நடத்திய ஓட்டுக் கட்சிகள் இன்று ஜெயலலிதா - வாழப்பாடி கும்பலின் அகதிகளை வெளியேற்றும் நடவடிக்கையைப் பற்றி வாயே திறக்காத கோழைத்தனத்தை அம்பலப்படுத்தினார். மேலும் அகதிகளை வெளியேற்றுவது ஐ.நா. தீர்மான விதிமுறைக்குப் புறம்பானது என்பதை விளக்கியும், ஈழ அகதிகளுக்கு இங்கு தங்கவும் பிரச்சாரம் செய்யவும் முழு உரிமையுண்டு. இதை அமல்படுத்த ஜனநாயக - புரட்சிகர சக்திகள் முன்வர வேண்டும் என அறைகூவல் விடுத்தார்.



படிப்பகம்

www.padippakam.com

திய விரிவாக்க நோக்கத்தை விரிவு செய்வதற்காக ராஜீவால் போடப்பட்ட இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் தோல்வியும், அமைதிப்படையின் அவமானகரமான தோல்வியுமே ஈழமக்கள் மீது காங். - அ.தி.மு.க. கும்பலும், அதிகார வர்க்கமும் கொண்டிருக்கும் வெறுப்புக்குக் காரணம்.


தமது நாட்டில் தமது இனம் அல்லது தாம் கொண்டிருக்கும் அரசியல் கொள்கை காரணமாக அரசு அடக்குமுறையைச் சந்திக்கும் மக்கள் வேறுநாடுகளில் அரசியல் தஞ்சம் புகுவதும், அங்கே இருந்தபடியே தனது நாட்டின் விடுதலைக்காகப் போராடுவதும் உலக அரசியலரங்கில் அதிசயமானவை அல்ல.

பாகிஸ்தானின் ராணுவ ஆட்சிக்கெதிராக வங்காளதேசத்து மக்கள் போராடிய போது ஈழ அகதிகளைக் காட்டிலும் பன்மடங்கு அதிகமான அகதிகள் மேற்கு வங்கத்திலும், அஸ்ஸாமிலும் தஞ்சம் புகுந்தனர். அந்த அகதிகளை வங்காள தேசத்திற்கே திருப்பி அனுப்புமாறு பாகிஸ்தான் கூறிய போது ஐ.நா. தீர்மானங்களைக் காட்டி அவர்களுக்கு இந்தியாவில் தஞ்சமளித்ததுடன் ஒரு ஆக்கிரமிப்பு யுத்தம் நடத்தி, வங்காள தேசத்தில் முஜிபுர் ரகுமானின் தலைமையில் தனது கைப்பாவை ஆட்சியை உருவாக்கியது இந்திரா அரசு. பல லட்சக்கணக்கில் குடிபெயர்ந்த அகதிகளைப் பராமரிக்க நாடு முழுவதும் நிதிதிரட்டியது. பாகிஸ்தானிலிருந்து வங்காள தேசம் பிரிந்த பின்னரும் தஞ்சம் புகுந்த அகதிகளில் ஒரு பிரிவினரை அஸ்ஸாமிலேயே நிரந்தரமாகக் குடியமர்த்தி அவர்களைத் தனது ஓட்டு வங்கியாக்கிக் கொண்டது இந்திராவின் காங்கிரசு அரசு.

வங்காள தேச அரசைத் தன் கட்டுப்பாட்டில் வைப்பதற்கென்றே அங்குள்ள சக்மா பழங்குடியினருக்கு ஆயுதப் பயிற்சியளித்து அவர்களை வங்காள தேச அரசுக்கும், வட கிழக்கிந்திய தேசிய இனப் போராளிகளுக்கும் எதிராகத் தூண்டிவிட்டது ராஜீவ் அரசு. பிறகு இந்திய அரசால் நிர்க்கதியாக விடப்பட்ட சக்மா அகதிகள் இன்று ஏறத்தாழ நாடற்ற நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டனர்.

திபெத்திய மக்களால் விரட்டப்பட்ட தலாய்லாமாவுக்கும் அவரது விசுவாசிகளுக்கும் இந்தியாவில் அரசியல் தஞ்சமளித்ததுடன் இந்திய மண்ணில் ஒரு பகுதியை அவர்களுக்கு ஒதுக்கித் தந்து அங்கே லாமாவின் சுதந்திர திபெத் அரசு செயல்படவும் வழிவகை செய்தது இந்திய அரசு. திபெத்தை சீனத்தின் ஒரு பகுதியாக அங்கீகரித்துக் கொண்டே இந்திய அரசு செய்யும் இந்த அரசியல் மோசடி இன்றளவும் தொடர்கிறது.

1983 இல் ஜூலைப் படுகொலையை யொட்டி ஆயிரக்கணக்கான ஈழ மக்கள் தமிழகத்தில் தஞ்சம் புகுந்தபோது அவர்களைத் திருப்பி அனுப்புமாறு கோரினார் ஜெயவர்த்தனா. தனது மேலாதிக்க நோக்கத்துக்கு ஈழத் தமிழர் பிரச்சனையைப் பயன்படுத்தத் திட்டம்தீட்டிய இந்திரா, அகதிகளைத் திருப்பியனுப்பவியலாது என்று மிகப்பெரிய மனிதாபிமானியைப் போல் பேசினார்.



நன்றி: தூண்டில் (ஜெர்மனியிலிருந்து வெளியாகும் ஈழத்தமிழ் இதழ்)

இலங்கையின் தமிழ்ப்பகுதிகளிலுள்ள அகதிமுகாம்கள் இவை. இங்கிருக்கும் அகதிகளையும் அங்கு விரட்டினால் அவர்கள் நிலை?

போராளிகளைத் தங்களது கையாட்களாகவும், தமிழர்களைப் பகடைக்காய்களாகவும் பயன்படுத்தி இலங்கையின் ஒற்றுமையைத் தனது தயவின்கீழ் கொண்டுவர முனைந்த இந்திய ஆளும் வர்க்கங்கள் தங்களது கனவு நிறைவேறாததனால் ஆத்திரம் கொண்டுள்ளனர். அகதிகளை வெளியேற்றும் தங்கள் முடிவுக்கு ஆதரவு திரட்ட ராஜீவின் கொலையை ஒரு முகாந்திரமாகப் பயன்படுத்துகின்றனர்.

### வெளியேற்றினால் என்ன நேரிடும்?

ஈழ மக்களை இங்கிருந்து வெளியேற்றுவது என்பது அவர்கள் அனைவருக்கும் மரண தண்டனை நிறைவேற்றுவதற்கு ஒப்பானது. சிங்கள ராணுவத்திற்கும் புலிகளுக்குமிடையிலான போரில் தமிழ் சிவிலியன்கள் கொல்லப்படுவதும் சித்திரவதைக்குள்ளாவதும் தொடர்கிறது. சமீபத்தில் கிழக்கு மாகாணம் கொக்கடிச் சோலையில் ஒரு கிராமம் முழுவதையும் சிங்கள இனவெறி ராணுவம் படுகொலை செய்துள்ளது. இதை மறைக்கவோ, நியாயப்படுத்தவோ இயலாத பிரேமதாசா அரசு இச்சம்பவம் குறித்து விசாரணைக்கு உத்திரவிட வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டுள்ளது.

அகதி முகாம்களில் ஒளிந்துள்ள புலிகள்மீது தாக்குதல் தொடுக்கப் போவதாகவும், எனவே முகாம்களை விட்டு அகதிகளனைவரும் வெளியேற வேண்டும் என்றும் சிங்கள ராணுவம் கொடுத்த உத்தரவை கிறித்தவப் பாதிரியார்கள் எதிர்த்துள்ளனர். ''பல நாட்கள் சுத்தம் செய்யப் படாத மலக்கூடம் ஒன்றினுள் நுழைவதைப் போல இருந்தது'' என்று அகதிமுகாம்களின் அவலநிலை பற்றிக் குறிப்பிடுகிறார், ஒரு கிழக்குப் பகுதி பத்திரிக்கை நிருபர். ''இத்தனை அவலங்கள் நிறைந்த அகதி முகாமை நான் என் வாழ் நாளில் பார்த்ததில்லை'' என்கிறார் மட்டக்களப்பைச் சேர்ந்த ஒரு இலங்கை அரசு அதிகாரி.

ஜெயலலிதா - வாழப்பாடி கும்பலோ ஈழ மக்களை சிங்கள அரசின் அகதி முகாம்களுக்கு அனுப்பி வைக்கத் திட்டம் போடுகின்றன. அவ்வாறு அகதிகள் வெளியேற்றப்பட்டால் அவர்கள் பசியாலும், நோயாலும் மடிவார்கள் என்பது மட்டுமல்ல, பல ஆயிரக்கணக்கானோர் கைது செய்யப்பட்டு வெளிக்கடை, பூசா முகாம்களை நினைவு படுத்தும் வகையில் சித்திரவதை செய்து கொல்லப்படுவர்.

சிங்கள இனவெறி அரசின் பாசிச அடக்கு முறைகளுடன், புலிகளை ஆதரிக்காத சக்திகள் அவர்களது அடக்குமுறைக்கும், கட்டாய வசூலுக்கும் ஆளாக வேண்டி வரும்.

### உணவு எரிபொருள் ''கடத்தல்'' தவறா?

தமிழகக் கடற்கரையிலிருந்து உணவும், டீசல்-மண்ணெண்ணெய் போன்ற எரிபொருட்களும் ஈழத்துக்குக் கொண்டு செல்லப்படுவதுபோல வாழப்பாடி - ஜெயலலிதா கும்பல் கூச்சல் போடுகிறது. பாசிச பிரேமதாசா அரசின் முற்றுகையினால் அத்தியாவசியப் பண்டங்களின் போக்குவரத்து முற்றிலும் தடுக்கப்பட்டு அரிசி கிலோ 100 ரூபாய், சர்க்கரை கிலோ 100 ரூபாய், மண்ணெண்ணெய் லிட்டர் 150 ரூபாய், பெட்ரோல் லிட்டர் 650 ரூபாய் என்று பொருட்களின் விலை நினைத்தும் பார்க்க முடியாத அளவுக்கு ஈழத்தில் உயர்ந்திருக்கிறது. தொலைபேசி, செய்தித்தாள், மின்சாரம் வானொலி, அஞ்சல் போக்குவரத்து, மருந்து ஆகிய எதுவுமே இன்றி கடுமையான யுத்தத்தினூடே மக்கள் உயிர்வாழ போராடிக் கொண்டிருக்கின்றனர்.

இந்நிலையில் தமிழகக் கடற்கரையில் காவலை பலப்படுத்தி கடத்தலைத் தடுத்து விட்டதாக மார்தட்டுகிறது தமிழக அரசு. கிழக்கு - மேற்குக் கடற்கரைகளின் கடத்தல் சாம்ராச்சியத்தையும், பாகிஸ்தான் - நேபாள எல்லையில் எல்லைப் பாதுகாப்புப் படையின் கூட்டுடன் நடக்கும் கடத்தலையும் தடுக்க முடியாத அரசு அவற்றில் நூற்றிலொரு பங்குக்கும் காணாத புலிகளின் 'கடத்தல்' பற்றி கவலைப்படுகிறது. கடத்தல் காரர்



படிப்பகம்

www.padippakam.com



உயிர் பிழைக்கக் கடல்கடந்து ஓடிவரும் அகதிகளை மீண்டும் கொலையாளிகளி டமே ஒப்படைக்க முயல்கிறது இந்திய அரசு.

களுடன் கூட்டு வைத்த காலம்போய் கோவா காங்கிரஸ் முதல்வரின் குடும்பமே கடத்தல் தொழிலில் சம்பந்தப்பட்டிருப்பது வெளிவந்து சந்தி சிரிக்கும்போது, கடத்தல் பற்றிப் பேச இவர்களுக்கு ஏது அருகதை?

இந்திய அமைதிப்படைக்குச் சோறு போட தமிழகத்திலிருந்து உணவுப் பொருட் களை இந்திய அரசு கடத்தியதால் தமிழகம் கடும் விலை உயர்வை சந்திக்கவில்லையா? ஈழத்திலிருந்து திரும்பிய 'சிப்பாய்கள்' கடத்திக் கொண்டு வந்த எலக்ட்ரானிக் பொருட்களை வரியின்றி அனுமதிக்கவில் லையா? இப்போது மட்டும் கடத்தல்பற்றி என்ன அதீத அக்கறை?

கடத்தலையும், புலிகளின் போக்குவ ரத்தையும் தடுப்பதற்காக இந்திய அரசு மேற் கொண்டுள்ள நடவடிக்கைகள் அவர்கள் கூறுவது போல இந்தியாவின் எல்லையைக் காப்பதற்கு அல்ல; மாறாக புலிகளுக்கும், ஈழ மக்களுக்கும் எதிரான போரில் சிங்கள ராணுவத்தின் தரப்பில் நின்று அவர்களது முற்றுகைக்கும், படுகொலைக்கும் உதவும் நடவடிக்கைகளே. வேறு வகையில் சொன் னால் ஈழத் தமிழருக்கு எதிராக மீண்டும் இந்திய அரசு போர் தொடுத்துள்ளது.

போராளிகளைக் களையெடுக்கும் நட வடிக்கைக்காக 'தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சீர்குலைவு', 'ஆயுதக் கலாச்சாரம்' என்றெல்லாம் இந்திய அரசு பேசுவது நகைப்பிற்குரிய மோசடி. தமிழகத்தில் முகாம்கள் அமைத்து இந்திய உளவுப்படை 'ரா' போராளிகளுக்குப் பயிற்சியும் ஆயுத மும் அளித்ததும், போதை மருந்துக் கடத் தலை ஊக்குவித்ததும், எம்.ஜி.ஆர் பகிரங்க மாகக் கொடுத்த 4 கோடி ரூபாய் நன்கொ டையையும், புலிகளுடன் ராஜீவ் நடத்திய ரகசிய பேரங்களும் ஏற்கனவே அம்பல மாகி உலகமறிந்த உண்மைகள்.

போராளிகளின் சமூக விரோத நடவ டிக்கைகள் பற்றிப் பொதுவாக பேசும் தமி ழக அரசு, போதை மருந்த கடத்தல், கொள்ளை போன்ற நடவடிக்கைகளில் ஈடு பட்ட நபர்களைப் பற்றிய விவரங்களை மட் டும் திட்டமிட்டே மறைக்கிறது. அவற்றை வெளியிட்டால் இன்று எந்தக் குழுக்களை ஜெயலலிதா கருணையுடன் நடத்துவதாகக் கூறுகிறாரோ, அந்தத் துரோகக் குழுக்கள் தான் இத்தகைய குற்றங்களில் பெரிதும் ஈடு பட்டிருந்தவை என்ற உண்மை தெரியவரும்.

சட்டம் - ஒழுங்கு சீர்குலைவு குறித்தும் ஆயுதக் கலாச்சாரம் குறித்தும் பேசுவதற்கு காங்கிரசு - அதிமுக கும்பலுக்கு அருகதை இல்லை. பீகாரின் சாதிப்படுகொலை, உத்த ரப்பிரதேசத்தில் பாரதிய ஜனதா நடத்திய கொலைவெறியாட்டம், பெரு நகரங்களில் நீக்கமறப் பரவி வரும் மாஃபியா கும்பல்க ளின் ஆதிக்கம் - இவற்றுக் கெல்லாம் என்ன தீர்வு? தமிழகத்தில் சட்டம் ஒழுங்கைக்க காப்பாற்ற போராளிகளை வெளியேற்ற வேண்டும் என்றால் மேற்சொன்ன நிலமைக ளுக்காக, யாரை வெளியேற்றுவது?

'83 இல் தமிழகத்தில் எழுந்த ஈழ ஆத ரவு அலை ஏழே ஆண்டுகளில் ஈழ எதிர்ப்பு அலையாக மாறியிருக்கிறதென்றால் அதற் குக் காரணம் ஈழப் போராட்டத்தை தனது நோக்கத்துக்குத் திசை திருப்ப முயன்ற இந் திய அரசின் சதியும், ஈழப் போராளிகள் அதற்குப் பலியானதும்தான். இது ஈழத்தின் எதிரிகளுக்கும் சிங்கள இனவெறியர்களுக் கும் கிடைத்துள்ள வெற்றி. தமிழின விரோதி சோ, உளவு அதிகாரி மோகன்தாஸ், ஈழ எதிர்ப்புப் பார்ப்பனப் பத்திரிக்கைகள் ஆகி யோருக்குக் கிடைத்துள்ள வெற்றி.

ஈழ ஆதரவு அலை ஓங்கியிருந்த நேரத் திலும், எதிர்ப்புகள் இல்லாத நேரத்திலும் சவடாலடித்த தி.மு.க, தி.க. நெடுமாறன் மற் றும் ஈழ ஆதரவு குழுக்களின் தலைமைகள் இன்றைய நெருக்கடியான தருணத்தில் அஞ்சி ஒளிவது அவமானகரமானது. ராஜீவ் கொலையைக் காரணம் காட்டி புலிக ளையும், இந்திய ஆதிக்க எதிர்ப்பாளர்களை யும் நாடு கடத்த தமிழக அரசு முனைவதை இவர்கள் மவுனமாக வேடிக்கை பார்ப்பது வெட்கக் கேடானது.

## போராளிகளுக்கும் அரசியல் உரிமை வேண்டும்

'84-இல் இந்திராவின் கொலையை யொட்டி சீக்கிய வேட்டையும், சீக்கிய எதிர்ப்பும் தூண்டி விடப்பட்டது போல ராஜீவ் கொலையைக் காரணம் காட்டி ஈழ மக்கள் அனைவரின் மீதும் துவேசத்தைத் தூண்டும் முயற்சி நடக்கிறது. ராஜீவ் கொலையைப் புலிகள்தான் செய்தனர் என்று புலனாய்வுத்துறை அறுதியிட்டுக் கூறாத போதே, விசாரணை முடிந்து தீர்ப்பு வழங்கப்படுவதற்கு முன்பாகவே, ஊகத் தின் அடிப்படையிலேயே ஒரு இனத்துக்கு எதிராகப் பாசிச வெறியைத் தூண்டிவிடு வதை நாம் சகித்துக் கொள்ள முடியாது.

ராஜீவ் எப்படி, யாரால் கொலை செய் யப்பட்டார் என்று ஆய்வு நடந்ததேயொ ழிய, கொலைக்கான நோக்கம் (Motive) பற்றி புலனாய்வுத்துறை கிடக்கட்டும், பத்தி ரிகைகள் கூடப் பேச மறுக்கின்றன. இவர்க ளது குற்றவியல் சட்டப்படியேகூட கொலைக்கான நோக்கத்தையும் இவர்கள் நிரூபித்தாக வேண்டும்.

ராஜீவின் கொலை குறித்து விசாரணை நடத்தும் அரசு, இந்திய ராணுவம் இலங்கை யில் நடத்திய சிவிலியன் கொலைகள், கற்ப ழிப்புகள், கொள்ளைகள் குறித்தும் விசா ரணை நடத்தட்டும். இத்தகைய விசாரணை யொன்றைக் கோரும் உரிமை நமக்கு உண்டு.

அமைதிப்படை என்ற பெயரில் இந் திய ஆக்கிரமிப்பு ராணுவத்தை அனுப்பி ஈழ மக்களை அவர்களது சொந்த மண்ணில் அடி மைப்படுத்த முயன்று தோற்ற இந்திய அரசு தனது நோக்கத்தை இந்தியாவில் நிறைவேற் றிக் கொண்டது. ஈழப் போராட்டத்துக்கு ஆதரவாக அரசியல் பிரச்சாரம் செய்யும் உரிமையும், சட்டபூர்வமாக இயங்கும் உரி மையும் உலக நாடுகள் அனைத்தும் வழங்கி இருக்கும்போது அவ்வுரிமைகள் இந்தியா வில் மட்டும் பறிக்கப்பட்டன. ஈழ அகதிக ளின் சட்டபூர்வ உரிமைகளையெல்லாம் பறித்துவிட்டு இன்று சட்டபூர்வமாக அவர் கள் இயங்க அனுமதிக்கப்பட்டிருப்பது போலவும் சட்டவிரோத நடவடிக்கைக ளைத்தான் தாங்கள் கட்டுப்படுத்த முயல்வ தாகவும் இந்திய அரசு நாடகமாடுகிறது.

''புலிகளைத்தான் நாங்கள் வெளி யேற்ற முனைகிறோம்; அகதிகளை அல்ல'' என்று சமீபத்தில் ஜெயலலிதா பேசியிருப் பது நயவஞ்சகமானது. போராளிகளும் அர சியல் தஞ்சம் புகுந்த அகதிகள்தான். தஞ்சம் புகுந்த இடத்தில் இருந்து கொண்டு அவர் கள் தங்கள் லட்சியத்துக்கான போராட்டத் தில் ஈடுபடுவதைத் தடுக்க முயலும் சதி தான், அகதி வேறு - போராளி வேறு என்று வகைப்படுத்தும் தந்திரம்.

தனது அரசியல் உரிமையை அடகு வைத்துவிட்டு அடிமைத்தனத்தை சகித்துக் கொண்டு முகாமில் அடைபட்டுக் கிடக்க தயாராக இருப்பவர்களுக்கு மட்டுமே தங்க அனுமதி என்கிறது ஜெயலலிதா அரசு. ஈழ மக்களின் உரிமையை மீட்டுத்தரப் போராடு வது நம் கடமை.

● அஜித்



படிப்பகம்

www.padippakam.com

## பொருளாதார நெருக்கடி:

# மறு சீரமைப்பல்ல மறு அடகுவைப்பு

**ரூபாயின் மதிப்பைக் குறைத்தால் விலைவாசிகள் உயரும் என்பது பொருளாதார அரிச்சுவடி. அத்தியாவசியப் பொருட்கள் சாமானிய மக்களுக்கு மேலும் எட்டாக்கனியாகி விடும்.**

உலக வங்கியிடமும் சர்வதேச நாணய நிதியத் (IMF) திடமும் நாட்டை அடகு வைப்பதற்குப் பெயர் பொருளாதார சீர்திருத்தம்; ஐ.எம்.எப்.பின் நிபந்தனைக ளுக்குப் பணிந்து ரூபாயின் மதிப்பைக் குறைத்தால் அதற்கு தேக்க நிலையை உடைக்கும் முற்போக்கான நடவடிக்கை என்று பொருள்; கட்டுப்பாடுகள் ஏதுமின்றி அன்னிய முதலீட்டிற்கும் கொள்ளைக்கும் பச்சைக் கொடி காட்டினால், அதை நாட்டை முன்னேற்றும் நடவடிக்கையாக கருத வேண்டும்; மானியங்களைக் குறைத்து கடு மையாக வரி விதித்தால் அது முன்னேற்றத் தின் முதற்படி; — ஆட்சிப் பொறுப்பேற்ற அடுத்த சில நாட்களிலேயே காங்கிரசு இப் படி புதிய பொருளாதார அகராதியை எழு தத் தொடங்கிவிட்டது.

ஆட்சிக்கு வந்ததும் பொருளாதாரத் தைச் சீர்திருத்துவதுதான் எனது முதற்பணி என்றார் புதிய பிரதமர் நரசிம்மராவ். இதற் காக பிரபல 'பொருளாதார சிங்கம்' மன் மோகன் சிங்கை - அவர் தேர்தலில் போட்டி யிடா விட்டாலும் நிதியமைச்சராக்கினார். நாட்டின் நலன் கருதி பொருளாதார நிபுண ரையே நிதியமைச்சராக நியமித்ததை பத்திரி கைகளும் ஏன், எதிர்க்கட்சிகளும் கூட வர வேற்றனர். இந்தப் பொருளாதாரப் புலி நிதி யமைச்சராகப் பதவியேற்றதுமே, நெருக்கடி யில் சிக்கியுள்ள பொருளாதாரத்தை மீட்க கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்ப டும் என்றார். அடுத்த சில நாட்களுக்குள் ரூபாயின் மதிப்பை இரு தவணைகளில் 20% குறைத்து செல்லாக் காசாக்கியுள்ளார்.

### கடன் வாங்கும் முன்பே காலில் விழுந்த நிதியமைச்சர்

அன்னியச் செலாவணி பற்றாக்கு றையை ஈடுகட்டவும், ஏற்றுமதியைப் பெருக்கி பொருளாதாரத்தைச் சீர்படுத்தவும் ரூபாயின் மதிப்பைக் குறைப்பதைத் தவிர வேறு வழியில்லை என்று நியாயப் படுத்துகி றார் நிதியமைச்சர். இது மட்டுமல்ல; வரப் போகும் பட்ஜெட் சற்று கடுமையாகவே இருக்கும் என்கிறார். போக்குவரத்து - அஞ் சல் கட்டண உயர்வு, மானியங்கள் - விவசா யிகளுக்குக் கடன் முதலானவற்றை நிறுத்து தல், கடுமையான வரிச்சுமை ஆகியன பட் ஜெட்டில் இருக்கும் என்று முன்கூட்டியே எச்சரிக்கிறார்.

இதைத் தொடர்ந்து, வரப்போகும் ரயில்வே பட்ஜெட்டில் 15 முதல் 20% வரை கட்டண உயர்வு இருக்கும் என்று ரயில்வே அமைச்சகம் பீடிகை போட்டுள்ளது. ஒருபு றம் விலையேற்றம், வரிவிதிப்பு மூலம் மக் கள் முதுகில் மேலும் சுமையேற்றும் அதேச மயம், அன்னிய முதலீடுகளுக்கு விதிக்கப் பட்டிருந்த பெயரளவிலான தடைகள் அனைத்தையும் நீக்கிவிட்டு தாராள கொள் ளைக்கு கதவை அகலத் திறந்து விட்டுள் ளது காங்கிரசு அரசு. கூடவே ஐ.எம்.எப். நிதி நிறுவனத்தின் கடுமையான நிபந்தனை களை ஏற்று 10,000 கோடி ரூபாய்க்கு நாட்டை அடகு வைக்கவும் தீர்மானித்துள் ளது.

"ஐம்.எம்.எப்.பிடம் கடன் வாங்குவ தற்காகவே அதன் கடுமையான நிபந்தனை களை நிதியமைச்சர் ஏற்றுக் கொண்டுள் ளார்; அதன் விளைவுதான் ரூபாயின் மதிப்பு குறைப்பு" என்ற குற்றச் சாட்டுகள் எழத் தொடங்கியதும், இல்லவே இல்லை; ஐ.எம். எப். நிறுவனம் எந்த நிபந்தனையும் விதிக்க வில்லை. பொருளாதார நிலைமையைக் கணக்கில் கொண்டுதான் ரூபாயின் மதிப்பு குறைக்கப்பட்டுள்ளது என்றார் நிதியமைச் சர். உண்மைதான். ஐ.எம்.எப். நேரடியாக எந்த நிபந்தனையும் விதிக்கவில்லை. ஆனால், "எஜமானே, நீங்கள் என்ன எதிர் பார்க்கிறீர்களோ, அதை நீங்கள் ஆணையி டும் முன்பே நிறைவேற்றி விட்டோம்; கருணை காட்டுங்கள்!" என்று தனது செய லின் மூலம் ஐ.எம்.எப். பிடம் கூறியுள்ளார் நிதியமைச்சர்.

உண்மையில், கடந்த ஜனவரியிலேயே ரூபாயின் மதிப்பைக் குறைக்குமாறு உலக வங்கி உத்திரவிட்டது. அப்படிச் செய்தால் விலைவாசிகள் உயர்ந்து தேர்தலில் காங்கிர சுக்கு ஓட்டு குறையும் என்பதால், ராஜீவ் நிர்பந்தத்தால் சந்திரசேகர் அரசு இதை நிறை வேற்றாமல் பட்ஜெட்டை தள்ளிப்போட் டது. தமது குறுகிய அரசியல் ஆதாயத்துக் காக ராஜீவ் - சந்திரசேகர் கும்பல் செய்த பொருளாதார மோசடியின் விளைவாக நெருக்கடிகள் மேலும் முற்றத் தொடங்கி யது. எனவே, வேறு வழியின்றி உலக வங்கி யின் உத்திரவை இப்போது புதிய அரசு விசு வாசமாக செயல்படுத்துகிறது.



### தரகு முதலாளிகளுக்கு தாராள சலுகை

ரூபாயின் மதிப்பைக் குறைப்பது என பது ஐ.எம்.எப். நிபந்தனைகளில் ஒரு அம் சம்தான். இதர அம்சங்கள் என்ன என்பதை நிதியமைச்சரும் வர்த்தக அமைச்சரும் எடுத் துள்ள அவசர நடவடிக்கைகள் இப்போது தெளிவாக்கிவிட்டன.

பெருந்தொழில் நிறுவனங்களில் உரி மம் பெறாத முதலீட்டின் அளவு ரூ.100 கோடியாக இருந்ததை 200 கோடியாக பெரு முதலாளிகள் உயர்த்திக் கொள்ள அனுமதிக்கப் பட்டுள்ளது. ஏகபோக தடுப் புச் சட்டத்தின்படி (MRTP)ரூ.100 கோடிக்கு மேல் சொத்து மதிப்புடைய கம்பெனிகள் ஏகபோக நிறுவனங்களாக பட்டியலிட்டன. தற்போது ரூ.2000 கோடிவரை உயர்த்திக் கொள்ளும் வகையில் இச்சட்டம் தளர்த்தப் பட்டுள்ளது. அன்னியச் செலாவணி தடுப் புச் சட்டத்தின் கீழ் (FERA) இந்திய முதலா ளிகளுடன் கூட்டுச் சேர்ந்துள்ள அந்நிய நிறு வனங்கள் இந்தியாவில் அத்தொழிலில் 40% அளவுக்கே முதலீடு செய்ய முடியும். இப் போது நேரடியாக 51% அளவுக்கு அன்னிய நிறுவனங்கள் முதலீடு செய்ய உரிமை அளிக்கப்பட்டுள்ளது. இது தவிர ஏற்றும தியை ஊக்குவிக்கும் வகையில் ஏராளமான சலுகைகள் அளிக்கப்பட்டுள்ளன. இதனடிப் படையில் புதிய தொழிற் கொள்கையை வகுத்துள்ளதாக அரசு அறிவித்துள்ளது.

இவை தவிர, அரசுத்துறை நிறுவனங் களை தனியார் பொறுப்பில் விட வேண்டும்; பன்னாட்டு மற்றும் தேசங்கடந்த தொழிற்கழ கங்களுடன் சுதந்திரமான தொழிற்கூட்டு வைத்துக் கொள்ளும் வகையில் எல்லா தடைகளும் நீக்கப்பட வேண்டும்; அரசுடை மையாக்கப்பட்ட வங்கிகளின் பங்குகளை தனியார் முதலாளிகளுக்கு விற்க அனும திக்க வேண்டும். வணிக - வர்த்தகத்தில் அரசு தலையிட்டு விநியோகத்தையும் விற் பனை விலையையும் கட்டுப்படுத்துவது கூடாது; இவற்றை சுதந்திரமான சந்தை - போட்டிக்கு திறந்துவிட வேண்டும்; இலவச - கவர்ச்சித் திட்டங்கள் அனைத்தையும் நிறுத்திவிட வேண்டும்; பற்றாக்குறை பட் ஜெட் போடக்கூடாது. மானியங்களை வெட்டியும் விவசாயத்துக்கு வரி விதித்தும் இவற்றைச் சரி கட்ட வேண்டும்; பேருந்து - ரயில் - அஞ்சற் கட்டணங்களை மேலும் உயர்த்த வேண்டும் என்று பல நிபந்தனை களை ஐ.எம்.எப். மற்றும் உலக வங்கி வலியு றுத்தி வருகிறது.

இவையனைத்தையும் விசுவாசமாக ஏற்றுக்கொண்டு தென்கொரியா, தைவான் பாணியில் நாட்டை மாற்றியமைக்க ஆட்சி யாளர்கள் தீர்மானித்துள்ளனர். அதாவது

படிப்பகம்

www.padippakam.com



வறுமை உழலும் இம்மக்களைப் பார்த்து வயிற்றைச் சுருக்கி தியாகம் செய்யச் சொல்கிறது ஆளும் கும்பல்.

நாட்டில் கிடைக்கும் கச்சாப் பொருட்களைக் கொண்டு நமது நாட்டுக்கும் மக்களுக்கும் தேவையான பொருட்களை உற்பத்தி செய்வதற்குப் பதில், ஏகாதிபத்தியங்களிடமிருந்து கச்சாப் பொருட்களை இறக்குமதி செய்து ஏகாதிபத்தியங்களுக்குத் தேவையான பொருட்களை உற்பத்தி செய்து அவற்றை முழுக்கவும் ஏற்றுமதி செய்யும் வகையில் தொழிற்துறையை மாற்றியமைக்கும் திட்டம்தான் இது. இந்த அடிப்படையில் தான் - அதாவது ஏற்றுமதி மயமான உற்பத்தியை அடிப்படையாகக் கொண்டுதான் புதிய பொருளாதாரக் கொள்கைகளை ஆட்சியாளர்கள் வகுத்துக் கொண்டுள்ளனர்.

### முதுகை முறிக்கும் பொருளாதாரச் சுமை

இதன் விளைவாக நட்டத்தில் இயங்கும் அரசுத் துறை நிறுவனங்களுக்கு மானியம் நிறுத்தப்படும்; அல்லது தனியார் துறைக்கு தாரை வார்க்கப்படும். அரசுத் துறையில் பணியாற்றும் ஏறத்தாழ 20 லட்சம் தொழிலாளர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகி, தேவைக்கதிகமாக ஊழியர்கள் உள்ளதாகக் கூறி பலர் நிர்பந்தமாக வெளியேற்றப்படுவர். ஊதியமும் சலுகைகளும் உரிமைகளும் குறைக்கப்பட்டு வேலைப்பளு மேலும் கூடுதலாக திணிக்கப்படும். இதை எதிர்த்துப் போராடுவோர் தேச விரோதியாக முத்திரை குத்தப்பட்டு அவர்கள் மீது அடக்குமுறை ஏவப்படும்.

மானியங்களை முற்றாக நிறுத்துவது அல்லது குறைப்பதன் விளைவாக விவசாயப் பொருட்களின் விலை கடுமையாக உயரும். கூலி - ஏழை விவசாயிகள் வறுமைப் படுகுழியில் தள்ளப்படுவார்கள். ஏற்கனவே இயற்கையோடு சூதாட்டம் நடத்தி போண்டியாகிப் போன விவசாயிகள், மின் கட்டண சலுகை, விவசாயக் கடன், உரம் - பூச்சி மருந்துகளுக்கு தரப்படும் மானியம் முதலானவை நிறுத்தப்படுவதன் விளைவாக விவசாயம் செய்ய முடியாமல் நிலத்தை தரிசாகப் போட வேண்டிய நிலை ஏற்படும். இதனால், உணவுப் பற்றாக்குறை பெருகி ஏகாதிபத்தியங்களிடம் இந்தியா மீண்டும் கையேந்த நேரிடும்.

ஏற்றுமதி அடிப்படையிலான உற்பத்திக்கு முன்னுரிமை என்ற பெயரில் செயற்கை இழை துணி உற்பத்திக்கு சலுகைகளும் மானியமும் வழங்கப்படும். இதன் விளைவாக கைத்தறி துணி உற்பத்தி மேலும் நசிவடைந்து கோடானு கோடி நெசவாளர்கள் பட்டினிச் சாவுக்குத் தள்ளப்படுவார்கள்.

உணவு, மருத்துவம், முதலானவற்றுக்கான மானியங்கள் குறைக்கப்படுவதால், ரேஷன் கடைகளின் மூலம் வழங்கப்படும் உணவுப் பொருட்களின் அளவு குறைக்கப்படும். அரசு மருத்துவ மனைகளில் தனிச்சிறப்பான மருந்துப் பொருட்கள் இல்லாமல், பொதுவான வலி நிவாரணி மாத்திரைகளே அனைத்து நோய்களுக்கும் சர்வரோக நிவாரணியாக வழங்கப்படும். இதர மானியங்கள் வெட்டப்படுவதால், சாலை, குடிநீர், கழிப்பிட வசதி முதலான அடிப்படை வசதிகள் புறக்கணிக்கப்படும். அதே சமயம் இவை தனியார் முதலாளிகளின் பொறுப்பில் விடப்பட்டு வரிவசூல் செய்துகொள்ள அனுமதிக்கப்படும். இதேபோல் மின்சாரம், பேருந்து, தொலைபேசி முதலானவை தனியார் முதலாளிகளுக்கு தாரை வார்க்கப்படும்.

ரூபாயின் மதிப்பைக குறைத்தால் விலைவாசிகள் உயரும் என்பது பொருளாதார அரிச்சுவடி. ஏற்கனவே விலைவாசிகள் விண்ணை முட்டும்போது. இப்போதைய ரூபாய் மதிப்பு குறைப்பின் விளைவாக, விலைவாசிகள் மேலும் கிடுகிடுவென உயரும். அத்தியாவசியப் பொருட்கள் சாமானிய மக்களுக்கு எட்டாக்கனியாகி விடும்.

அன்னிய முதலீட்டிற்கு தாராள அனுமதி தருவதன் விளைவாக, குறிப்பாக மருந்து துறையில் ஏகாதிபத்தியங்களின் ஆதிக்கம் அதிகரிக்கும். சாதாரண தலைவலி மாத்திரைகள் கூட அநியாய விலையாகும். ஏகாதிபத்தியங்கள் ஒழிக என்று முழக்கமிட்டு ஊர்வலம் செல்வோர் தமது தொண்டை வறட்சியைப் போக்க, அதே ஏகாதிபத்தியம் தயாரிக்கும் மாத்திரையைத் தான் அதிக விலைக்கு வாங்க நோ!டும்.

ஏற்கனவே ஐ.எம்.எப்., உலக வங்கியிடம் கோடிக் கணக்கில் கடன் வாங்கி கடனையோ வட்டியையோ அடைக்க முடியாமல் தடுமாறி நிற்கும் நிலையில், மேலும் கடன் வாங்குவதன் விளைவாக இந்தியாவின் பொருளாதாரமே திவாலாகிப் போகும். சுருக்கமாகச் சொன்னால், இப்புதிய பொருளாதாரத் தாக்குதலின் விளைவாக, நடுத்தர மக்கள் ஏழைகளாக்கப் படுவார்கள். ஏழைகள் பட்டினிச் சாவுக்குத் தள்ளப்படுவார்கள்; நாடு சுடுகாடாகும். ஆனாலும், இதை முற்போக்கான நடவடிக்கை; தேக்க நிலையையும் மந்தத்தையும் உடைத்தெறியும் மாமருந்து என்று ஆளும் வர்க்கப் பொருளாதாரவாதிகளும், பத்திரிகைகளும் புகழ்மாலை சூட்டி ஆதரிக்கின்றனர். ஏனெனில், இதன் மூலம் ஆதாயமடையப் போவது ஏகாதிபத்தியங்களும் அவர்களைச் சார்ந்துள்ள தரகு முதலாளித்துவ, நிலப்பிரபுத்துவ ஆளும் கும்பல்கள்தான்.

இப்போதைய நடவடிக்கைகளினால் இன்னும் 3, 4 ஆண்டுகளுக்குள் நமது பொருளாதாரம் முன்னேறிவிடும் என்று நம்பச் சொல்கிறார் நிதியமைச்சர். ஆனால், புதைகுழியை நோக்கி பெரும்பாய்ச்சலில் இந்தியப் பொருளாதாரம் முன்னேறப் போவது மட்டும் நிச்சயம்.

### நேரு பரம்பரையின் மக்கள் விரோதக் கொள்கையின் விளைவு

1981ல் பாசிச இந்திராவும் அப்போது நிதியமைச்சராக இருந்த இன்றைய ஜனாதிபதி வெங்கட்ராமனும் ஐ.எம்.எப். நிதி நிறுவனத்திடம் நாட்டை அடகு வைத்து 5000 கோடி ரூபாய் கடன் வாங்கினர். ஐ.எம்.எப்.பின் நிபந்தனைகளின்படி பொருளாதார கட்டமைப்பில் பெரும் மாற்றங்களைச் செய்து ஏற்றுமதி அடிப்படையிலான உற்பத்திக்கு முன்னுரிமை கொடுத்தனர். அப்போது ரூபாயின் மதிப்பு குறைக்கப்படவில்லை என்றாலும், சேவைத் துறைகளுக்கான மானியங்கள் குறைக்கப்பட்டு பேருந்து, அஞ்சற் கட்டணங்கள் உயர்த்தப்பட்டன.

அதன்பிறகு ராஜீவ் ஆட்சிக் காலத்தில், இதே திசையில் பொருளாதாரம் திருப்பி விடப்பட்டது. நூறு சதவீத ஏற்றுமதியை நோக்கமாகக் கொண்ட சுதந்திர வர்த்தக வளையங்களும், ஏற்றுமதி அடிப்படையிலான உற்பத்திக்கு மானியங்களும் சலுகைகளும் வழங்கப்பட்டன. ஏகபோக தடுப்புச் சட்டத்தின்படி பெருந்தொழில் நிறுவனங்களின் சொத்து மதிப்பு ரூ.50 கோடியாக இருந்த உச்சவரம்பை நீக்கி ரூ.100 கோடியாக உயர்த்திக் கொள்ளவும், வெளிநாட்டில் வாழும் இந்தியர்களைப் பினாமியாகக் கொண்டு ஏகாதிபத்தியங்கள் மறைமுகமாக முதலீடு செய்யவும் தாராளமாக அனுமதிக்கப்பட்டது.

இத்தேசவிரோத கொள்கைகளின் விளைவாக இந்தியப் பொருளாதாரம் ஒருபுறம் பணவீக்கம், மறுபுறம் உற்பத்தித் தேக்கம் ஆகிய தீராத நோயில் சிக்கிக் கொண்டது. அந்நியக் கடனுக்கு தவணையும் வட்டியும் செலுத்தியதாலும் ஏற்றுமதியை விட இறக்குமதி பெருகியதாலும், அந்நியச் செலாவணி பற்றாக்குறையும் ஏற்பட்டு மீண்டும் ஐ.எம்.எப்.பிடம் கையேந்த வேண்டிய நிலைக்கு இந்திய அரசு தள்ளப்பட்டது.

இப்படி இந்திய பொருளாதாரம் தீராத நெருக்கடியில் சிக்கிக் கொண்டதற்கு நேரு - இந்திரா பரம்பரையினால் உருவாக்கப்பட்ட போலி சோசலிச, ஏகாதிபத்திய சார்பு பொருளாதார கட்டமைப்புதான் காரணம்.



படிப்பகம்

www.padippakam.com

# செல்லாக்காசாகிவிட்ட ரூபாயின் மதிப்பு

வெளிநாட்டிலிருந்து இறக்குமதியாகும் பொருட்களுக்கு அந்நாட்டு நாணய மதிப்பின் மாற்று வீதங்களில் தொகையைச் செலுத்த வைத்துள்ள இருப்பை அந்நியச் செலாவணி இருப்பு என்பர். இந்தியாவிலிருந்து ஏற்றுமதி அதிகமாகவும் இறக்குமதி குறைவாகவும் இருந்தால்தான் அந்நியச் செலாவணி பற்றாக்குறையின்றி இருக்கும். ஆனால் நமது நாட்டில் இறக்குமதி அதிகமாகவும் ஏற்றுமதி குறைவாகவும் இருப்பதால் அந்நியச் செலாவணி பற்றாக்குறை அதிகரித்து எதையுமே இறக்குமதி செய்ய முடியாத நெருக்கடியில் பொருளாதாரம் சிக்கியுள்ளது.

எனவே அந்நியச் செலாவணி பற்றாக்குறையை ஈடுகட்ட உலக வங்கியிடம் கடன் வாங்குவது, ரூபாயின் மதிப்பைக் குறைப்பது எனும் இரு நடவடிக்கைகளை ஆட்சியாளர்கள் மேற்கொள்கின்றனர். உதாரணமாக, சர்வதேச நாணய மதிப்பின்படி ஒரு அமெரிக்க டாலருக்கு ஈடாக இந்திய நாணயத்தின் மதிப்பு 10 ரூபாயாக உள்ளது என்று வைத்துக் கொள்வோம். ரூபாயின் மதிப்பைக் குறைப்பதன் விளைவாக டாலர் மற்றும் பிற நாணயங்களின் மதிப்பு அதிகமாகிறது. அதாவது ஏகாதிபத்தியங்களிடமிருந்து வாங்கும் ஒவ்வொரு பொருளுக்கும் முன்னை விட கூடுதலான ரூபாயைக் கொடுக்க வேண்டியுள்ளது. இதனால் ஏகாதிபத்தியங்களுக்குத்தான் ஆதாயம். பலமுறை ஏகாதிபத்திய நிர்பந்தம் காரணமாக ரூபாயின் மதிப்பு குறைக்கப்பட்டுள்ளது.

ரூபாயின் மதிப்பைக் குறைப்பதன் மூலம் சர்வதேச சந்தையின் இந்தியப் பொருட்களின் விலை மதிப்பு குறைவதால் விற்பனையும் அதனால் ஏற்றுமதியும் அதிகரிக்கும் என்று ஆட்சியாளர்கள் கூறுகின்றனர். ஆனால் 1988-ல் 13%, '89-ல் 10%, '90-ல் 8%, கடந்த ஆறு மாதங்களில் 10% என பலமுறை ரூபாயின் மதிப்பு குறைக்கப்பட்டும் கூட ஏற்றுமதி அதிகரிக்கவில்லை. நெருக்கடிதான் அதிகரித்தது.

இப்போது ரூபாயின் மதிப்பை மேலும் 20% குறைப்பதன் விளைவாக ஏற்கனவே உள்ளதைவிட வெளிநாட்டுக் கடன் மதிப்பு மேலும் அதிகரிக்கும். இந்தியாவின் வெளிநாட்டுக் கடன் 12,390 கோடி ரூபாயாக இருந்தது. ரூபாய் மதிப்பு குறைப்பின் விளைவாக இன்று அது 15,340 கோடி ரூபாயாகிவிட்டது. இதுதவிர, வெளிநாடுகளிலிருந்து இறக்குமதியாகும் அனைத்து பொருட்களுக்கும் கூடுதலாக ரூபாயைச் செலுத்த நேரிடுவதால் அனைத்து பொருட்களின் விலையும் அதிகரிக்கவே செய்யும்.

அந்நியச் செலாவணி பற்றாக்குறையாலும், வாங்கிய கடனுக்கு வட்டி கட்ட முடியாததாலும் முந்தைய சந்திரசேகர் அரசு கையிருப்பிலிருந்த 20 ஆயிரம் கிலோ தங்கத்தை வெளிநாட்டு வங்கி ஒன்றில் அடகு வைத்தது. இதைக் கடுமையாக எதிர்த்த காங்கிரசுக் கட்சி நாங்கள் ஆட்சிக்கு வந்தால் அந்த தங்கத்தை மீட்போர் என்று சவடால் அடித்தது. இப்போது ஆட்சிக்கு வந்தபின் அதை மீட்காதது மட்டுமல்ல; கூடுதலாக 25 ஆயிரம் கிலோ தங்கத்தை இங்கிலாந்து வங்கியில் இரகசியமாக அடகு வைத்துள்ளது. உலக வங்கியிடம் கடன் வாங்குவதற்கான ஏற்பாடுதான் இது. அரசே நடத்திய இந்த தங்கக் கடத்தல் விவகாரத்தை பத்திரிக்கையாளர்கள் அம்பலப்படுத்தியதும் "இது முந்தைய அரசு செய்த ஏற்பாடு" என்று சத்தியம் செய்கிறார் நிதியமைச்சர்.

யார் செய்தாலென்ன? கடைசியில் ரூபாயின் மதிப்பு செல்லாக்காசாகி விட்டதோடு உலக வங்கியிடம் நாடு அடகு வைக்கப்பட்டது தான் கண்ட பலன்!

பின்தங்கிய விவசாய நாடான இந்தியாவில், விவசாயத்துக்கு முதல் முக்கியத்துவம், இலகுரக உற்பத்திக்கு இரண்டாவது இடமும், கனரக உற்பத்திக்கு மூன்றாவது இடம் என்ற வரிசையில் சுய சார்புடன் பொருளாதாரம் கட்டியமைக்கப்படவில்லை. மாறாக, போலி சோசலிச பாணியில் கனரக உற்பத்திக்கு முன்னுரிமை அளித்து விவசாயம் புறக்கணிக்கப்பட்டது. இதன் விளைவாக நெருக்கடிகள் தீவிரமாகி இன்று பொருளாதாரமே திவாலாகும் நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டது. ஆனால் இவற்றை எல்லாம் மூடி மறைத்துவிட்டு முந்தைய ஆட்சியாளர்கள் மீது பழி சுமத்துவதை ஆட்சிக்கு வரும் ஒவ்வொரு அரசும் வாடிக்கையாகக் கொண்டுள்ளன.

### ஓட்டுக்கட்சிகளின் வெற்றுக்கூச்சல்

ஐ.எம்.எப். நிபந்தனைகளை , ஏற்று ஏகாதிபத்தியங்களிடம் நாட்டை முற்றாக அடகு வைக்கும் கொள்கைக்கு எதிராக பெருங்கூச்சல் போடும் போலிக் கம்யூனிஸ்டுகள் மற்றும் ஜனதாதளம் - தேசிய முன்னணியிடம் கூட இதற்கெதிராக மாற்றுப் பொருளாதாரத் திட்டம் இல்லை. நேரு - இந்திரா - ராஜீவின் பொருளாதாரக் கொள்கையைத்தான் தமது ஆட்சிக் காலத்தில் தேசிய முன்னணி செயல்படுத்தியது. போலிக் கம்யூனிஸ்டுகள் தமது ஆட்சிக் காலத்தில் கேரளா, மே.வங்க மாநிலங்களில் இதே கொள்கையைத்தான் தொடர்ந்தனர். கடும் நிபந்தனைகளை ஏற்று உலக வங்கி - ஐ.எம்.எப்.பிடம் கடன் வாங்கியதை, மாநிலத்தை முன்னேற்றும் நடவடிக்கை என்று மாய்மாலம் செய்தனர். இந்நிபந்தனைகளின்படி பேருந்துக் கட்டணங்களை உயர்த்தியதை எதிர்த்து மக்கள் போராடியபோது அடக்குமுறையை ஏவினர்.

இப்போது அதே போலிக் கம்யூனிஸ்டுகள்தான் ஐ.எம்.எப்.பின் கடுமையான நிபந்தனைகளை ஏற்று கடன் வாங்கும் காங்கிரசு அரசை எதிர்க்கின்றனர். குறிப்பாக, அரசுத்துறை நிறுவனங்களை தனியார் முதலாளிகளுக்கு தாரை வார்ப்பதற்கு எதிராகத் தொழிலாளர்களைத் திரட்டிப் போராடப் போவதாக அறிவித்துள்ளனர். போராடுவது நியாயமானதுதான். ஆனால், ஏகாதிபத்தியங்களிடம் நாட்டை அடகு வைப்பதற்கு மாற்றாக போலிக் கம்யூனிஸ்டுகள் முன்வைக்கும் மாற்றுப் பொருளாதாரத் திட்டம் என்ன என்பதுதான் கேள்வி.

போலிக் கம்யூனிஸ்டுகளிடமும் தேசிய முன்னணியிடமும், வெளிப்படையாக மக்கள் மீது சுமையேற்றாமல் ஐ.எம்.எப்.பின் நிபந்தனைகளை செயல்படுத்த வேண்டும் என்ற கொள்கைதான் உள்ளது. ஐ.எம்.எப். நிபந்தனைகளின்படி மக்கள் மீது நேரடியாக பொருளாதாரச் சுமைகளை ஏற்றினால், பாராளுமன்ற ஆட்சிமுறையின் மீதே மக்கள் வெறுப்படைந்து பெரும் புரட்சியில் இறங்கி விடுவார்கள் என்பதால் நைச்சியமான முறைகளின் மூலம் இதைச் செய்ய வேண்டும் என்பது தான் அவர்களின் மாற்றுக் கொள்கையாக உள்ளது. இதேபோல தமது அகண்ட பாரதக் கனவுகளுக்கு இடையூறாக ராணுவச் செலவுகளைக் குறைக்கக் கோரும் ஐ.எம்.எப். நிபந்தனையை மட்டும் பாரதீய ஜனதா எதிர்க்கிறது. மற்றபடி, இன்றைய ஆட்சியாளர்களின் பொருளாதாரக் கொள்கையை முழுமையாக ஆதரிக்கிறது.

இப்படி அனைத்து ஓட்டுக் கட்சிகளின் மறைமுக ஆதரவோடு ஏகாதிபத்தியங்கள் மற்றும் தரகுப் பெருமுதலாளிகளின் நலனுக்காக கோடானுகோடி மக்களைக் கசக்கிப் பிழிகிறது அரசு.

ஆட்சிக்கு வந்ததுமே, விலைவாசியைக் குறைப்பதற்கான மந்திரக் கோல் எதுவும் என்னிடம் இல்லை. நிலைமையை ஆராயாமல் காங்கிரசுக் கட்சி தனது தேர்தல் அறிக்கையில் விலைவாசியைக் குறைப்பதாகக் கூறியுள்ளது என்றார் நிதியமைச்சர். தம் மீது நம்பிக்கை வைத்து வாக்களித்த மக்களையே ஏய்த்த காங்கிரஸ் கயவாளிகள் இப்போது நாட்டு மக்கள் மீது தாங்க முடியாத பொருளாதாரச் சுமைகளை ஏற்றி தண்டிக்கவும் துணிந்து விட்டனர். அரசு புள்ளி விபரப்படியே 6 சதவீத மக்கட் தொகையைக் கொண்ட மேட்டுக்குடி கும்பலுக்குத்தான் இப்பொருளாதார நடவடிக்கைகளால் ஆதாயம். அதே சமயம் பெருகிவரும் வறுமை, வேலையின்மை, விலையேற்றத்தால் பாதிக்கப்படப் போவது கோடானுகோடி உழைக்கும் மக்கள்தான். ஆனால், இது நாட்டு நலனுக்கான நடவடிக்கை; வயிற்றைச் சுருக்கி தியாகம் செய்ய வேண்டும் என்கின்றனர் ஆட்சியாளர்கள்.

முடியாது; இனியும் பொறுத்துக் கொள்ளவே முடியாது. நாட்டின் நலன் கருதி தியாகத்திற்கு மக்கள் தயாராக வேண்டும். தம் மீது ஏற்றப்படும் பொருளாதாரச் சுமையை தாங்கிக் கொள்வதற்காக அல்ல; ஆளுங் கும்பலோடு சேர்த்து அவற்றைத் தூக்கியெறிவதற்கான பெரும் புரட்சியில் இறங்குவதற்காகத்தான் அந்தத் தியாகம்! ● பாலன்

படிப்பகம்

www.padippakam.com



# அமைந்திருப்பது அரசு பயங்கரவாத ஆட்சி பார்ப்பன–பாசிச ஒடுக்குமுறைக்கு அட்டிகை

திராவிட இயக்கத்தின் தனிச்சிறப்பான குணாம்சங்களாகிய கவர்ச்சிவாத -பிழைப்புவாத - பொறுக்கி அரசியலோடு பாசிசமும் பார்ப்பனீயமும் இணைந்த வீரிய ஒட்டுரகமாக உருவாகி உள்ளது ஜெயலலிதா கும்பலின் ஆட்சி.

கருணாநிதி தலைமையிலான தி.மு.க.வும் பிற எதிர்க்கட்சிகளும் ஜெயலலிதா -வாழப்பாடி கும்பல் அடைந்த வெற்றியின் அதிர்ச்சியில் செய்வதறியாது திகைத்துப் போயுள்ளன. ஜெயலலிதா ஆட்சி ஏதோ அனுதாப அலையில் கரையொதுங்கிய அசிங்கம்; ஏதோ தற்செயலாக நிகழ்ந்துவிட்ட விபத்து; அது நீடிப்பதற்கான அடிப்படை கிடையாது; ஜெயலலிதா மீது மக்களுக்கு ஏற்பட்டுள்ள மாயை, கவர்ச்சி நீங்கினால் இந்த ஆட்சி தானாகவே வீழ்ந்துவிடும் என்று கனவு காணுகின்றன.

ஆனால் அவ்வாறு கருதுவது எதிர்க்கட்சிகளின் கையாலாகாத்தனம், பொறுப்பின்மையைத்தான் குறிக்கிறது. எம்.ஜி.ஆர். ஆட்சியைப் பற்றிக் கூட இப்படித்தான் மெத்தனமாக, எளிதாக எண்ணினர். நடந்ததோ வேறுதான். நடமாடும் பிணமாக இருந்தும் அவரது ஆட்சியை இக்கட்சிகளால் வீழ்த்த முடியவில்லை.

எம்.ஜி.ஆர். ஆட்சியையும் விடப் பன்மடங்கு கொடியது, கேடானது, பாசிச வக்கிரம் நிறைந்தது ஜெயலலிதா ஆட்சி. அதனால் நாட்டுக்கும் மக்களுக்கும் ஏற்படும் கேடுகளை எண்ணும் போது அதை வீழ்த்த வேண்டியதன் அதீத முக்கியத்துவம் புரியும். ஜெயலலிதா கும்பலின் பின்னால் திரண்டுள்ள சக்திகளின் பலத்தைப் பார்க்கும் போது அதற்கெதிராக மேற்கொள்ள வேண்டிய கடும் முயற்சியின் அவசியம் புரியும்.

ஜெயலலிதா கும்பலின் இவ்வளவு பெரிய வெற்றிக்கான காரணங்களுள் தமிழக மக்களிடையே எம்.ஜி.ஆருக்குள்ள' பிடிப்பு, எம்.ஜி.ஆரின் வாரிசாக மக்கள் ஜெயலலிதாவை ஏற்றுக் கொண்டிருப்பது, கருணாநிதி மீது மக்களுக்குள்ள வெறுப்பு, அவர் ஜெயலலிதாவுக்கு கொடுமைகள் பல செய்து விட்டதாக மக்கள் நம்பியது, இதற்காக ஜெயலலிதா கும்பல் பரப்பிய அவதூறுகள், ராஜீவ் கொலையை ஒட்டி எழுப்பிய அனுதாப அலை ஆகியவை முக்கியமானவைதாம்.

ஆனால் இதையெல்லாம் ஜெயலலிதாவின் தேர்தல் வெற்றியாக மாற்றுவதில் பின்வரும் சக்திகள் பெரும் பங்காற்றியிருக்கின்றன:

★ அ.தி.மு.க. - காங்கிரசு கூட்டு உருவாகி ஜெயலலிதா ஆட்சியைப் பிடிப்பதற்கான வாய்ப்புகள் உறுதியானவுடன் தென்னாட்டின் பெரும் தரகு அதிகார முதலாளிகள் பலரும் கோடி கோடியாக ஜெயலலிதாவின் காலடியில் கொண்டு வந்து குவித்துவிட்டார்கள். சாராய உடையாரும் விஜய் மல்லையாவும் வெளியிலே தெரிந்த ஒரு சிலர்; இன்னும் முத்தைய செட்டியார், டி.வி.எஸ். அய்யங்கார் வரை பலரும் பெரும்பங்களித்துள்ளனர். பாரதீய ஜனதா - சிவசேனா கூட்டணி, காங்கிரசு போன்றவற்றோடு ஒப்பிடும் அளவுக்கு பணத்தை வாரி இறைத்து தேர்தல் வெற்றியை ஜெயலலிதா கும்பல் ஈட்டியது. பார்ப்பன ஏடுகளே இதை ஒப்புக் கொள்கின்றன. பதவியேற்றதும் முதல் வேளையாக அத்தரகு அதிகார முதலாளிகளுடன் ஐந்து நட்சத்திர ஓட்டலில் ஜெயலலிதா விருந்துண்டு களித்தபோது இது பகிரங்கமானது.

★ அரசுத் தலைவர் ஆர்.வெங்கிடராமன், சுப்பிரமணியசுவாமி, சேஷன் உட்பட அதிகாரத்தில் உள்ள ஒரு பெரிய பார்ப்பன கும்பலின் முழு ஆதரவையும் ஜெயலலிதா கும்பல் பெற்றிருந்தது. கருணாநிதி ஆட்சியைக் கலைப்பதென முடிவானதில் இருந்து அதிகார வர்க்கம், போலீசு - உளவுத்துறை, வானொலி - வானொளி ஆகிய அரசு பிரச்சார சாதனங்கள் அனைத்தும் ஜெயலலிதா கும்பலின் சேவைக்கு அமர்த்தப்பட்டன. தேர்தல் விதிமுறைகளை மீறவும், பதவியில் இல்லாதபோதே அதிகார முறைகேடுகளில் ஈடுபடவும் ஜெயலலிதா அனுமதிக்கப்பட்டார். ராஜீவ் கொலைக்குப் பிறகு தி.மு.க. மீது கொலைப் பழிசுமத்தவும், காங்கிரசு -அ.தி.மு.க. காலிகளை ஏவி போலீசு துணையுடன் வெறியாட்டம் நடத்தி எதிர்க்கட்சிகளை முடக்கவும் போலீசு - அதிகார வர்க்க பார்ப்பன கும்பல் முழுமூச்சில் செயல்பட்டது.

★ ஜெயலலிதாவுக்கு உறுதுணையாக சங்கராச்சாரி தலைமையில் பார்ப்பன சாதியே திரண்டது. முன்னாள் போலீசு டி.ஜி.பி. லட்சுமி நாராயணன், ஆடிட்டர் கிருஷ்ணமூர்த்தி, வக்கீல் ரங்காச்சாரி, சினிமா அதிபர் ஜீ.வி. போன்ற ஒரு கும்பல் தேர்தல் அமைப்புப் பணிகளைக் கவனித்துக் கொண்டது. துக்ளக் சோ, விகடன் பாலசுப்பிரமணியம், இதயம் மணியன், தினமணி ஐராவதம் உட்பட பார்ப்பனப் பத்திரிக்கையாளர்கள் ஜெயலலிதாவின் துதிபாடி, கருணாநிதிக்கு எதிராக அவதூறு பரப்பி, ராஜீவ் கொலைக்குப் பிறகு அனுதாப அலையை உருவாக்கினர். முற்போக்கு வேடதாரி இந்து ராம் கூட இதற்கு விதிவிலக்கல்ல. பார்ப்பன சங்கம், இந்து முன்னணி போன்ற அமைப்புகள் முதல் பார்ப்பனப் பெண்கள் வரை ஓரணியாய் திரண்டு வீதியில் இறங்கினர்.

இவை அனைத்தும்தான் ஜெயலலிதா கும்பலின் வெற்றியை முழுமையாக்கிவிட்டன.

மத்தியில் மீண்டும் காங்கிரசு ஆட்சி ஏற்பட்டிருப்பது; பாரதீய ஜனதா - சிவசேனா கூட்டணியின் பலம் கூடியிருப்பதோடு நாட்டின் மிகப்பெரிய மாநிலமான உத்திரப்பிரதேசத்தின் ஆட்சியை அது கைப்பற்றியது ஆகிய இரண்டு வெற்றிகளையும் விட தமிழ்நாட்டில் ஜெயலலிதா பதவியைப் பிடித்திருப்பதைத் தான் பார்ப்பன சாதியினர் முக்கியமாகக் கொண்டாடுகின்றனர்.

எம்.ஜி.ஆர். ஆட்சியும் பார்ப்பனருக்குச் சாதகமானதுதான். இருந்த போதும் ஜெயலலிதா வெற்றியால் தமது சொந்த ஆட்சி ஏற்பட்டிருப்பதாகவே கருதுகின்றனர்.

பார்ப்பனப் பத்திரிக்கைகள், வானொலி - வானொளி ஆகிய அச்சாதி ஆதிக்கப் பிரச்சார சாதனங்களில் இந்த மகிழ்ச்சி நிரம்பி வழிகிறது. பத்திரிக்கைச் செய்திகள், கட்டுரைகள், ஆய்வுரைகளில் மட்டுமல்ல, பார்ப்பன வாசகர் கடிதங்களும் வந்து குவிகின்றன.

அவற்றிலே ஜெயலலிதாவின் வெற்றியை, ஆட்சியை வானளாவப் புகழ்கிறார்கள் - வாழ்த்துகிறார்கள்; வாராது வந்த அந்த மாமணியை இழந்துவிடக் கூடாது என எச்சரிக்கிறார்கள். ராஜாஜியைப் பின்பற்றி எப்படி ஆட்சி நடத்த வேண்டும் எனவும் பல யோசனைகள் கூறுகிறார்கள்.

சிந்தனைச் செல்வி, புரட்சித் தலைவி, காவல் தெய்வம், ஆதிபராசக்தி என்று ஜெய



படிப்பகம்

www.padippakam.com

லலிதாவுக்குப் பிழைப்புவாத, பொறுக்கி அரசியல்வாதிகள் பட்டஞ் சூட்டியுள்ளனர். அவற்றுக்கெல்லாம் ஜெயலலிதா தகுதியானவர் மட்டுமல்ல, இலக்கணமாகத் திகழ்கிறார் என இப்போது பார்ப்பன ஏடுகள் ஏழுதுகின்றன. ஜெயலலிதா மிகச் சிறந்த படிப்பாளி, பண்பாளர், அறிவுச் சுடர்விடும் நிர்வாகப்புலி, விவசாயம் முதல் கலை இலக்கியம் - விஞ்ஞானத்திலும் ஆர்வம் மிக்கவர், விருப்பமின்றி சினிமாவுக்கு நிர்பந்தமாகத் தள்ளப்பட்டவர் என்றெல்லாம் அடுக்கடுக்காகப் புளுகுகின்றன.

தி.க.; தி.மு.க. - ஆகிய கட்சிகளை அடியோடு ஒழிக்க வேண்டும், தடை செய்ய வேண்டும்; அவற்றின் சொத்துக்களைப் பறிமுதல் செய்யவேண்டும்; ராஜீவ் கொலையில் சம்பந்தமுடைய தி.மு.க. தலைவர்களைத் தண்டிக்க வேண்டும்; இந்தியா மீண்டும் படையெடுத்துப்போய் விடுதலைப்புலிகளைப் பூண்டோடு ஒழிக்கவேண்டும்; ஈழ அகதிகள் அனைவரையும் உடனடியாக வெளியேற்ற வேண்டும்; கிழக்கு கடற்கரையில் மீன் பிடிப்பதையே தடை செய்ய வேண்டும் என்று பல கருத்துக்களை சாதி வெறி பொங்க வாசகர்கள் பார்ப்பன ஏடுகளுக்கு எழுதுகிறார்கள்.


அரசு நிர்வாகத்திற்கும், ஆலோசனைக்கும் அனுதாபமும், திறமையும், வாய்ந்த அதிகாரிகளையும் நிபுணர்களையும் தமிழக அரசாங்கம் நியமித்துக் கொள்ள வேண்டும் என்கிறார்கள் - இதன் பொருள் பார்ப்பன அதிகாரிகளையும் நிபுணர்களையும் கொண்டதாக இருக்க வேண்டும் என்பதுதான். கோவில்களை இந்து அமைப்புகளிடம் ஒப்படைக்க வேண்டும்; அவற்றின் நிர்வாகத்தை உரியவர்களிடம் தர வேண்டும் என்கிறார்கள் - இதன் பொருள் பார்ப்பனப் பண்டாரங்களிடம் அவற்றை ஒப்படைக்க வேண்டும் என்பதுதான்.

இப்படிப்பட்ட யோசனைகள், எச்சரிக்கைகளைத் தயக்கமின்றி வரவேற்று, அமுல்படுத்தத் துவங்கிவிட்டது ஜெயலலிதா அரசாங்கம் என்றுதான் சொல்ல வேண்டும்.

முந்தைய அரசின் முறைகேடுகளையோ, ராஜீவ் கொலை, புலிகளுடன் தொடர்பு ஆகியவற்றையோ விசாரித்து நடவடிக்கை எடுப்பது என்கிற பெயரில் தி.மு.க., தி.க., தன்னுரிமை மற்றும் ஈழ ஆதரவு அமைப்புகளை ஒடுக்குவது; எஞ்சிய எதிர்த்தரப்பைத் தாக்கியோ, மிரட்டியோ, விலை பேசியோ அடக்குவது என்கிற நடவடிக்கையில் இந்த அரசு இறங்கிவிட்டது.

ஜெயலலிதா பதவி ஏற்றதும் நிர்வாக மறு ஒழுங்கமைப்பு என்கிற பெயரில் தலைமைச் செயலர் உட்பட எல்லா அரசு உயர் பதவிகளுக்கும் பார்ப்பன மற்றும் விசுவாச அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர்.

தமிழ்நாட்டில் சட்டம் - ஒழுங்கை நிலை நாட்டுவதுதான் தனது பிரதானக் கடமை என்று அறிவித்த ஜெயலலிதா உண்மையில் அறிவிக்கப்படாத அவசரநிலை ஆட்சியை நிறுவியுள்ளார். சமூகவிரோத - கிரிமினல் குற்றவாளிகளை ஒடுக்குவதற்கு பதில் எதிர்த்தரப்பு அரசியல் வாதிகளைப் பழிவாங்கும் போலீசு ராஜ்ஜியத்தை, பாசிச






விஜய்மல்லைய்யா, சாராய உடையார் — ஜெயலலிதா ஆட்சியின் புரவலர்கள்.

அடக்கு முறையைக் கட்டவிழ்த்து விட்டுள்ளார். முக்கியமாக ராஜீவ் கொலை விசாரணை இதற்கான மூடுதிரையாகப் பயன்படுத்தப்படுகிறது.

முதல் வேலையாக ஈழத்தமிழரை வேட்டையாடுவது துவங்கியது. ஈழ அகதிகள் முகாம்கள் சிறைக் கூடங்களாக மாற்றப்பட்டன. வெளியில் தங்கியுள்ள ஈழ அகதிகள் போலீசு நிலையங்களில் பதிவு செய்யும்படி நிர்பந்திக்கும் உத்திரவு போட்டுள்ளனர். அவர்களுக்கு வாடகை வீடு தருவோர் கூட மிரட்டப்படுகின்றனர். அதிகளுக்குரிய வாழ்வியல், அரசியல் உரிமைகள் மறுக்கப்படுகின்றன; ஈழ ஆதரவு நடவடிக்கைகள் அனைத்தும் குற்றமாகக் கருதி ஒடுக்கப்படுகின்றன.

ஈழத்துக்கு எதிராக இராணுவ முற்றுகை அமைத்து ஈழ மக்களின் உயிராதாரமான தேவைகளை மறுத்து, சிங்கள இன ஒடுக்கு முறைக்கு ஒத்துழைப்புத் தருகிறது, ஜெயலலிதா அரசு. புலிகளின் கடத்தல், தேச விரோத நடவடிக்கைகளைத் தடுப்பது என்கிற பெயரில் ஏறக்குறைய ஒரு லட்சம் மீனவர்கள் மீன்பிடிக்கக் கடலுக்குப் போவதற்




குக் கூட தடை விதித்துள்ளது. நவீன ஆ
தங்களுடன் பல ஆயிரம் துணை இராணு
வத்தினரைக் கொண்டு வந்து நிறுத்தியிருப்ப
தோடு, தனியே தமிழ்நாடு போலீசு கட
பிரிவை உருவாக்குவதாக முடிவு செய்து
ளது.

எம்.ஜி.ஆரின் பத்தாண்டு கால ஆட்சி
யில் தொழிற்சங்க, விவசாயிகள் சங்க நட
டிக்கைகள் முற்றாக ஒடுக்கப்பட்ட நிலை
லேயே இருந்தன. அவரது வாரிசு ஜெய
லிதா ஆட்சியில் அவற்றோடு, அனைத்
எதிர்த்தரப்பு அரசியல் நடவடிக்கைகளு
கூட ஒடுக்கப்படும். போராட்டங்களா
''பொதுச் சொத்து''க்களுக்கு ஏற்படும் ந
டத்துக்கு அரசியல் கட்சிகள், அதன் தலை
வர்கள் மீதும் அபராதம் விதிக்கப்படும் என்
கிற அறிவிப்பு இத்தகையதுதான்.

எம்.ஜி.ஆர்., இந்திராவின் அரசிய
வாரிசு என ஜெயலலிதா கூறிக் கொள்வதற்
குப் பொருத்தமாகவே ஒருபுறம் கவர்ச்சி
வாத, இலவசத் திட்டங்களும், மறுபுறம்
பாசிச ஒடுக்குமுறைகளும் என்கிற முறை
யில் ஆட்சி நடத்தத் துவங்கி விட்டார்.
ஊழல் நாயகன் எம்ஜி.ஆரோ எதற்கெடுத்
தாலும் ''எனக்கென்ன பிள்ளையா, குட்டி
யா'' என்று கேட்டு அனுதாபம் தேடினார்.
கழிசடை அரசியல் நாயகி ஜெயலலி
தாவோ அவரது அட்டூழியங்களை எதிர்க்
கும் போதெல்லாம் ''நான் ஒரு பெண், அது
வும் அனாதை என்பதால் என்னைக் கொடு
மைப்படுத்துகிறார்கள்'' எனக் கூறி ஒப்பாரி
வைக்கிறார்.

ஜெயலலிதா இப்போது தனது அரசியல் எதிரிகள் மீது ஏவிவிட்டிருக்கும் இந்த அட்க்குமுறை ஆட்சியையே, பின்னர் மக்களது மிகச் சாதாரணக் கோரிக்கைகளுக்கான ஜனநாயக இயக்கங்கள் மீது திருப்பி விடுவார் என்பதில் சந்தேகமில்லை. ஆகவே அனைத்து ஜனநாயக சக்திகளும் ஒன்று திரண்டு ஜெயலவீதாவின் பார்ப்பன, அரசு பயங்கரவாத ஆட்சியை அம்பலப்படுத்தி முழு மூச்சுடன் எதிர்த்திடத் துணிய வேண்டும். இல்லையானால் கொஞ்ச நஞ்ச உரிமைகளையும் இழந்து அடிமை நிலைக்குத் தள்ளப்படுவோம்.

● ஆர்.கே.

படிப்பகம்

www.padippakam.com

பாட்டாளி மக்கள் கட்சியின் "சாதிவக் கூட்டணிக்கு முற்போக்குச் சாயம்" என்கிற நமது விமர்சனக் கட்டுரைக்கு, அக்கட்சியின் நாளேடான "தினப்புரட்சி", 'புதிய ஜனநாயகத்தின் புலம்பல்' என்ற தலைப்பில் தனது பதிலை எழுதியிருந்தது. பா.ம.க.வின் ஒட்டாண்டித்தனத்தை வெளிப்படுத்திய அதன் பதிலை அப்படியே வெளியிட்டதோடு வாசகர்களின் கருத்தையும் கோரியிருந்தோம்.

வாசகர்களிடம் இருந்து ஆதரித்தும் எதிர்த்தும் வந்துள்ள கடிதங்களைச் சுருக்கி இங்கே வெளியிடுகிறோம். நமக்கு வந்த கடிதங்களில் ஒன்று 'Dear தேவடியாப் பையா...' என்று தொடங்கும் மொட்டைக் கடிதம்; அச்சிட இயலாத வசவுகளை மட்டுமே கொண்டுள்ளது. பா.ம.க.வோ "தினப்புரட்சி"யோ கோருமானால் அனுப்பி வைக்கிறோம். தமது இயக்கம் எப்படிப்பட்ட அணியை உருவாக்குகிறது என்பதை அவர்கள் அறிந்துகொள்ளப் பயன்படும்.

● தினப்புரட்சி கட்டுரை மிக ஆழமாகவும் தக்க பதிலாகவுமே உள்ளது. என்னைப் போன்ற பாட்டாளி மக்களுக்கு நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கும் பா.ம.க.வும் அதன் தூய தலைவரும் நிகழ்கால சரியான நம்பிக்கைகள்.

*— கே.நாராயணசாமி, சென்னை - 35.*

● பாட்டாளி மக்கள் கட்சியை வன்னியர் கட்சி என்று விமர்சனம் செய்துள்ளீர்கள். உமக்குத் தெரியாத சில கருத்துக்கள்: 1. பா.ம.க.வின் தலைவர் தீரன் - ஒரு வன்னியர். 2. பொதுச் செயலாளர் தலித் எழில்மலை ஒரு தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்தவர். 3. பொருளாளர் குனங்குடி அனீபா ஒரு முஸ்லீம், 4. இளைஞர் அணித் தலைவர் ஜான் பாண்டியன் - தாழ்த்தப்பட்ட சமுதாயம். இன்னும் மாநில, மாவட்ட, ஒன்றியப் பொறுப்பாளர்கள், உறுப்பினர்கள் பல சமுதாயத்தை சார்ந்தவர்கள் என்று நீங்கள் புரிந்து கொள்ளவில்லை.

பழனிபாபா, பெ.மணிஅரசன் அவர்கள் தன்மானத்தை அடகு வைக்காமல் பா.ம.க.வில் இணைந்து பாடுபடுகிறார்கள். இன்னொரு முறை பா.ம.க.வையும் எங்கள் டாக்டர் ஐயா அவர்களையும் களங்கம் விளைவித்தால் எனது பதில் வேறுமாதிரியாக அமையும். ஆதி திராவிடரை முதலமைச்சர் ஆக்குவோம் என்று பாடுபட்டு வரும் கட்சி - பா.ம.க. உமது புலம்பலை நிறுத்திக் கொள்ளும். வளரும் கட்சிமேல் வீண் 'புலம்பல்' இதுவே கடைசியாக இருக்கட்டும்.

*— அக்னி வேந்தன், பா.ம.க. இளைஞரணி, வ.ஆ.அம்பேத்கார் மாவட்டம்.*

● இன்று ராமதாசு அவர்கள் ஆதிதிராவிடர், வன்னியர் மற்றும் ஒடுக்கப்பட்ட மக்களும் ஒன்றுதிரள வேண்டும் என்று ஒவ்வொரு மேடையிலும் பேசுகிறார் கம்யூனிஸ்ட் அறிஞர் மார்க்ஸ் நம் நாட்டில் பிறந்திருந்தால் முதலில் சாதியை ஒழிக்கத்தான் பாடுபடுவார். அதனால் பெரியார், அம்பேத்கார், மார்க்ஸ் ஆகியோரின் படங்களின் நடுவே ராமதாசு படத்தைப் போடுவதில் தவறில்லை. ஜான் பாண்டியனின் இனம் எப்படி நடத்தப்படுகிறது என்பதை நீங்கள் கிராமங்களில் வாழ்ந்து பார்த்தீர்களானால் அந்த இன மக்கள் படும் துன்பங்கள் தெரியும். பட்டணத்தில் இருந்துகொண்டு பத்திரிக்கை எழுதுவது ஒன்றும் பெரியதல்ல. நீங்கள் மார்க்ஸ் தந்த வழி என்று அவர் எழுதிய புத்தகத்தில் இருப்பதை மட்டும்தான் பின்பற்றுகிறீர்கள். அதனால், நீங்கள் ஆதிக்க சக்திகளுக்கு மறைமுக ஆதரவு தருவது போல ஆகிறது. இங்கு ஆயுதம் ஏந்திப் போராட்டம் நடத்துவதில் நம் மக்களிடம் கடந்த 58 ஆண்டுகளாக உங்கள் பிரச்சாரம் எடுபடவில்லை. உங்கள் கொள்கைகளைக் கேட்டு தீவிரவாதத்தில் முற்போக்கு எண்ணம் உடைய கம்யூனிஸ்டுகள் பல உயிர்களை இழந்ததுதான்! உங்களால் இந்த சாதி வெறியையும் வறுமையையும் ஒழிக்க என்ன செய்தீர்கள்? உங்கள் கொள்கையால் இந்தத் தலைமுறை பயன் அடையப் போவதில்லை. தனித்தமிழ், தன்னுரிமை இன்னும் சில முற்போக்குத் திட்டங்களை வைத்துப் போராடும் ராமதாசு கொள்கை சரியாகத்தான் உள்ளது.

*— பா.ம.க, என்.முருகானந்தம், திருமுக் கூடலூர்.*

● கி.மு.விலிருந்து கி.பி.வரை அழியாத தைத்தான் (சாதி) டாக்டர் ராமதாசு கையில் எடுத்தார். உழைக்கும் மக்களை ஒன்று சேர்ப்பதில் உமது உத்தியைவிட டாக்டரின் வழி எளிமையானதாக படவில்லையா உமக்கு? ஓட்டுக்காக கூட புரட்சி பேசாதவர்களுடன் பா.ம.க.வை ஒப்பிடுகிறீர்கள், நாங்கள் உங்களை போலிக் கம்யூனிஸ்டுகளோடு ஒப்பிடலாமா? உங்கள் கருத்துக்களை அப்படியே ஏற்று வன்னியர் சங்கம் வந்தால் ஏற்க மாட்டீரா! மனிதர்களை செயற்கையாக செய்யும் உத்தேசமா? மனமாற்றத்தின் விளைவு வேண்டாமா நமக்கு. அப்படி எனில் பண்ருட்டியாரின் வரவு இத்தகையதுதான்! நான்காண்டுகளுக்கு முன்பு கூட ஜாதி கலவரத்திற்கு காரணமானவர்கள் என்பதை எல்லா பார்ப்பன, கிசுகிசு பத்திரிகைகளும் கலர் படத்துடன் பிரசுரித்துள்ளன. இதில் நீங்கள் வேறு. பா.ம.க.வினரும் இதை மறுக்கவில்லையே. தவறுகளுக்குப் பிராயச்சித்தமாகத்தான் பொதுத் தொகுதியில் ஆதி திராவிடரை நிறுத்தி வன்னியரை ஓட்டுப் போட வைப்பது, வன்னியர்களின் டீ கடைகளில் தீண்டாமையை ஒழிப்பது போன்ற பல செயல்முறைகள் உண்டு. ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவோம், நம்முள் மனமாற்றம் ஏற்பட்டு சமூகமானதும் மனமாற்றம் செய்து கொள்ளுவோம் என்கின்றனரே. சாதியை ஒழிக்க இது சிறந்த வழியாகப் படவில்லையா? இப்படிப் பிரச்சினை தீர்ந்தால் நாட்டில் 50% பிரச்சினை தீர்ந்ததாக பொருள் இல்லையா?

எவன் எப்படி அடித்துக் கொண்டாலும் ஏங்கல்ஸ், லெனின், மார்க்ஸ் - இவர்கள் சொன்னதை நீங்கள் எழுதி இதற்கு நாலு பேர் எங்கு கிடைப்பான் என்றுதான் பார்க்கின்றீர். எவ்வளவு பெரிய புரட்சிக் கருத்துக்களைக் கொண்ட பத்திரிக்கைகளையும் நபர்களையும் பெற்றது எமது சாதி. ஆகையால் நாங்கள் தினப்புரட்சியையும் படிக்கிறோம். அந்துமணியையும் படிக்கிறோம். அனைத்துப் பார்ப்பன, ஆதித்தன், திராவிட பத்திரிக்கைகள் எல்லாம் வன்னியர் கட்சி என்று சொல்லுவதற்கும் நீங்கள் சொல்லுவதற்கும் என்ன வித்தியாசம். அவர்களைப் போலத்தான் நீங்களும். மாலனின் ஜீன்ஸ் சர்ட்டிற்குள் பூணூல் என்றால் உங்களது மார்க்சிய - லெனினிய கண்ணோட்டத்தினுள்ளும் பூணூல் பார்வை தான்! அவர்கள் அதிகாரம், அந்தஸ்து போய்விடும் என்று பயப்படுவதில் அர்த்தம் உண்டு. உங்களது முற்போக்கு சிந்தனை இங்கு இருக்கிறது, இவர்கள் ஆட்சியைப் பிடித்தால் நீங்கள் இயக்கம் நடத்த முடியாது என்று அஞ்சுகிறீர்களா? ஆதிதிராவிடரும் மீதி திராவிடரும் (வன்னியர் என்று வையுங்கள்) பாட்டாளி வர்க்கம் இல்லையா? உழைக்கவும் உருக்குலையவும் பிறந்த எங்களில் ஒருவர் ஆட்சியில் அமர உங்களைப் போன்ற முற்போக்குவாதிகளும் மறுப்பது கயமைத்தனம் அல்லவா?

*— வி.சின்னதுரை, பெண்ணாடம்.*

இந்த வாசகர்களின் பிரமைகள் அகலுமாறு டாக்டர் ராமதாசின் சாதி ஒழிப்பு மோசடி, தனிநபர் வழிபாடு, புரட்சிச் சவடால் ஆகியவற்றைத் தொடர்ந்து அம்பலப்படுத்தி புதிய ஜனநாயகம் எழுதும். — ஆசிரியர் குழு.

■ *பாட்டாளி மக்கள் கட்சியின் மீதான புதிய ஜனநாயகத்தின் எந்த விமர்சனத்திற்கும் - எந்தக் கருத்திற்கும் தினப்புரட்சியில் பதில் எதுவும் சொல்லவில்லை. 'பு.ஜ.வின் புலம்பல்' என எழுத எந்த நியாயமும் இல்லை. **தினப்புரட்சியின் புலம்பல்கள் தான் அதில் உள்ளன. பு.ஜ.வின் சந்து பொந்தையாவது தினப்புரட்சி அறிந்திருப்பது நல்லது. சந்து பொந்தில் இருந்துதான் சர்வதேச அளவில் பு.ஜ. சென்று அரசியல் நடத்துகி**றது. சாதிவெறியை வைத்து குண்டான் சட்டிக்குள் குதிரை ஓட்டுகிறது பா.ம.க.*

*சமூகத்தில் உழைப்பாளியும் பாட்டாளியும் என்றைக்கு உருவானார்களோ அன்றிலிருந்து அவர்கள் சுரண்டப்படுவது மட்டுமல்ல, அவர்கள் துரோகங்களுக்கு ஆட்படுவதும் **வரலாறு. 'பாட்டாளி'** என்ற வார்த்தையையும், **'ஒடுக்கப்பட்ட** மக்களே...' என்ற **முழக்கத்தையும் பிரபல**ப்படுத்தி விட்டதாக பேசுகிற தினப்புரட்சியே, வன்னியர்களையும் அரிசனங்களையும் மோதவிட்டு இரத்தம் குடித்த ஓநாய்களே பாட்டாளியைப் பற்றிப்-பேச உனக்கு என்ன யோக்கியதை உள்ளது? 'அதிகபட்சம் வன்னியனே பாட்டாளி, அதிகபட்ச பாட்டாளி வன்னியனே!' - இது எங்கிருந்து கண்டுபிடித்தாய்? சாதி வெறிக்கு இப்படி ஒரு வர்க்கப் பூச்சா?*

— ஜெயசீலன், வரகூர்.

■ *பாட்டாளி என்ற வார்த்தைக்குள் நுழைந்து விட்டால் மட்டும் ஒரு சாதீயக் கட்சி பாட்டாளி வர்க்கக் கட்சியாக மாறிவிட முடியாது. இது ஊரறிந்த விடயம். தினப்புரட்சி ஆசிரியர் அடிக்குறிப்பிட்டிருந்ததில் இருந்து ஒன்று புரிந்தது. தன் புலம்பலை வெளிக்காட்ட முடியாமல், அது முற்*



படிப்பகம்

# பா.ம.க. புலம்பலுக்கு வந்த பதிலடிகள்

றுப் பெறாமல் மீண்டும் மீண்டும் புலம்பி இருப்பது புரிகிறது.

— பரமசிவம், சென்னை - 50.

● தாங்கள் வன்னியர் சங்கத்தைத் துவங்கியபோது மார்க்சிய - லெனினிய ஆசான்களின் படங்களைப் பயன்படுத்தாத இவர்கள் பா.ம.க. தொடங்கியவுடன் பயன்படுத்திக் கொள்ளும்போது இவர்களின் நச்சுப்பற்கள் வெளியே தெரிந்து விடுகிறது. 5000 ஆண்டுகள் ஆனாலும் மார்க்சிய - லெனினியம் மக்களை சென்று அடையாது என மகிழ்ச்சியோடு சொல்லும் இவர்கள் வரலாற்றைத் திரும்பிப் பார்க்கும் திராணியும், உலக அளவில் அதன் வளர்ச்சி புரியாமல் இருப்பதும் வியப்பிற்குரியதல்ல!

கடந்த தேர்தலின்போது ஓட்டுக் கட்சிகளை இவர்கள் காரி உமிழ்ந்ததும் அதன் ஈரம் காயும் முன்பே ஒருமுறை வாய்ப்பளியுங்கள் என்று இப்போது ஓடிவந்ததும் மக்கள் நன்றாகவே அறிந்து வைத்திருக்கின்றார். சொந்த பணத்தில் செலவு செய்யும் இது போல பித்தலாட்டத் தலைவர்களை மக்கள் ஏற்கனவே அடையாளம் தெரிந்து வைத்துள்ளனர். நாட்டுக்காக வீட்டைக் கொடுத்த ஒரு குடும்பத்தில் இருந்து இன்றுவரை அவர்கள் கையாளும் வாபீச்சவடால் புதியதல்ல. பண்ருட்டியாரை அரசியல் வித்தகர் என்கிறார்கள். டெல்லியில் எம்.ஜி.ஆர்.- ஜெயலலிதா இருவரும் தனியறையில் இருந்தபோது வெளியில் நின்று காவல்காத்தவன் என்று அவர் அறிவு ததும்ப அறிக்கை விட்டதையும் மக்கள் மறந்து விடவில்லை.

சேந்தமங்கலம் பா.ம.க. ஒன்றிய செயலாளர் பாண்டுரங்கன் இரண்டு சாராயக் கடை நடத்துகிறார். கேட்டால் ராமதாசு அய்யாவே "நீ நடத்தாவிட்டால் வேறு ஒருவன் நடத்துவான், நீயே நடத்து" என்று சொன்னாராம். நாளை ஆட்சிக்கு வந்தால், "நீங்கள் லஞ்சம் வாங்காவிட்டால் வேறொருவன் வாங்குவான்; நீங்களே வாங்குங்கள்!" என்பதற்கு இது முன்மாதிரி. இதுதான் ஊழலை ஒழிக்கும் லட்சணம்.

— இராமகிருஷ்ணன், கரூர்.

**க்களத்தி சண்டையில் ரபலமான பண்ருட்டி .நா. சபையில் ாதிட்டால் றிவாளியா?**

பு.ஜ. கட்டுரைக்கு முறையான பதிலை ப்பது நடைமுறை நாகரீகம். ஆனால், 'கள் "வம்பு செய்வது", "கடிப்பது" தங்கள் நடைமுறையைக் காட்டுகிறார் பு.ஜ.வின் விமர்சனம் "கடிப்பது" என் மக்களை முதலில் எச்சரிக்கும் அக்கட யத் திரும்பவும் செய்வோம். சினிமா சிகாட்டி ஆட்சிக்கு வந்த ஊழல் பேர் எம்.ஜி.ஆர். ஆட்சியில் மந்திரியாகி, ர் - ஜெயலலிதா "சக்களத்தி" சண்டை பிரபலமாகிய "பண்பட்ட பண்ருட்டி ஐ.நா.சபையில் வாதிட்டால் 'பெரிய ாளியாம்? ஆளும் அரசிடம் "ஜால் பாட்டால் நீரும் வாதிடலாம். 'பாட்டாளி வர்க்கத் தலைவன்', 'டாக்டர் அய்யா' 'இனமானக் காவலர்', 'மக்கள் காவலர்', 'திண்டிவனம் பெரியார்' என பாட்டாளி மக்கள் அழைக்கிறார்களாம். அப்படியானால் 'புரட்சித் தலைவி', 'டாக்டர் கலைஞர்' 'தமிழினத் தலைவன்', 'இதய தெய்வம்' என 'மக்கள்' அழைப்பதை ஒப்புக் கொள்வீர்களா? இவை எல்லாமே அந்தக் "காலை நக்கும் கலை"தான்!

— சிங்காரவேலன், மதுரை - 20.

■ பா.ம.க. வின் புலம்பல் தினப்புரட்சியில் கண்டு திடுக்கிட்டேன். இன்றைய அரசியல் உலகில் பொய்யையும் புரட்டையும் அறைகூவல் விட்டே ஊரை ஏமாற்றி உலையில் போட வீதிக்கு வந்துவிட்ட இன்னொரு கும்பல் என்பதை அப்பட்டமாகவே படம் பிடித்துக் காட்டிவிட்டனர்.

— மகீபன், சீர்காழி.

■ கேள்விக்குரிய பதிலைக்
கொடுக்காமல்
கிண்டலும் கித்தாப்புமாய்
எழுத்துப்பட்டாசை
கொளுத்தி எறிந்திருக்கும்
கேலிக்குரிய தினப்புரட்சியே!
திண்டிவனம் பெரியாரின்
தியாகம்தான் என்ன?
சாதியப் பெயரால்
உழைப்போரை மோதவிட்டு
சாதிச் சங்கம்கண்ட
அக்கினிச் சட்டிக்கு
மறுபெயர்தான் பெரியாரா?
சாதிய சைனட்டை
கையிலேந்தி
சாகத் துடிக்கும் தினப்புரட்சியே!
மல்லய்யாவின் கூட்டாளி எதிர்கால
கள்ளச்சாராயத்தின் கதாநாயகி
ஜெ.லலிதாவின் பெயரும்
புரட்சி செல்விதான்.
புரட்சி என்ற பெயரை
சூடிக் கொள்வதால் - நீ
புரட்சித் தீயாய்
மாறிவிட முடியுமா?

— எம்.சுந்தர்,
மத்தியசிறை, கடலூர்.

■ தாழ்த்தப்பட்ட மக்களுக்காகப் பாடுபட்ட ஜோதிராவ் புலேவுக்குப் பல லட்சம் மக்கள் முன்பு வழங்கப்பட்டது 'மகாத்மா' என்கிற பட்டம். அதைப் பார்த்து பார்ப்பனக் கும்பல் காந்திக்கு "மகாத்மா" பட்டத்தை ஒட்டினர். சீரழிந்து போன திராவிட இயக்கத்தினர் சொல்லின் செல்வர், மாவீரன், பேரறிஞர், நடமாடும் பல்கலைக் கழகம், புரட்சித் தலைவர், புரட்சித் தலைவி, தமிழினத் தளபதி, மானமிகு போன்ற பல பட்டங்களைச் சூட்டிக் கொண்டு ஏமாற்றினர். இந்த நீண்ட வரலாற்றின் தாக்கமே ராமதாசுக்குத் துதிபாடும் வகையில் பல பட்டம் சூட்டியுள்ளது பா.ம.கட்சி.

தாங்களும் செய்வதில்லை, மற்றவர்கள் செய்கைக்குக் களங்கம் கற்பிப்பது என்ன இசம் என்று கேட்கிறார்கள். வந்தேறிகள், நாடோடிகள், கால் நக்கிகள் என்றெல்லாம் வீரவசனம் பேசித் தேர்தலிலே நிற்பது அந்த இசம்? மனநோயின் எழுத்து வடிவம் கூத்தாடி, மடியினிலே பிறந்தாள், சிறந்தாள் என்றெல்லாம் பா.ம.க. எழுதி நிரூபித்துக் கொண்டிருக்கும் பொழுது அதற்கு "இச" விளக்கம் தேவை இல்லை. அரசியல் வீரவசனம் பேசிய அண்ணாதுரைகூட தன்னை ஒரு கம்யூனிஸ்டு என்றவர்தான்! 'நாம் தமிழர்' இயக்கத்தை நடத்திய ஆதித்தனார் கூட தினத்தந்தி நாளிதழில் இராகுல்ஜியின் "பொதுவுடமை தான் என்ன?" என்கிற நூலை தமிழில் மொழி பெயர்த்து தொடராக வெளியிட்டார். ஆனால், ஒரு தலைமுறை ஏமாந்ததுதான் வரலாறு.

அதேபோல் பா.ம.க.வின் புரட்சிகர கோஷங்கள் மட்டுமே சிறுபான்மையினரின் சீற்றத்தையும் தாழ்த்தப்பட்டோரின் கொடுமைக்கும் எப்படி முடிவு கட்டும். கோஷங்களால் மட்டுமே முடிவு என்று சொன்னால் - அண்ணாதுரையே இந்நாட்டின் உயர்ந்த தலைவர். எனவேதான் விமர்சிக்க வேண்டியதாயிற்று.

தொண்டர்கள் தங்களுடைய தலைவனை புகழாரம் சூட்டுவது இயல்பு. ஒரு சரியான தலைவன் அதை மறுதலிப்பதே நியாயம். அதற்குப் பதிலாக அதை ஏற்றுக் கொண்டு மகிழ்ச்சியடைவதும், போஸ்டரில் போடுவதும் அவர்களது தலைமைப் பண்பை அடையாளம் காட்டுகிறது. இதைச் சொல்வதால் நாம் சிறுவனாகி விட முடியாது.

ஜூன் 15ந் தேதி வாக்குப் பதிவு. 13, 14 ஆகிய தேதிகளில் தினத்தந்தி நாளிதழில் "ஆண்டுக்காண்டு நபி பெருமானுடைய பிறந்த நாள் விழாவை பா.ம.க.வே கொண்டாடும்" என்று விளம்பரம் தந்தீர்களே. நோக்கம் என்ன? முஸ்லீம்களே எங்களுக்கு வோட்டு போடுங்கள் என்று கேட்க தைரியம் இல்லாததாலா? இந்த வழியினைப் பின்பற்றினீர்கள். நபியின் பிறந்த நாளைக் கொண்டாட வேண்டாமென உங்களைத் தடுத்தது யார்? அல்லது கொண்டாடினால் குற்றம் சொன்னது யார்?

சரியான தலைவனின் வழிகாட்டலின், சரியானப் பாதையில் பயணம் போவதன் அடையாளமா இது? இராமனைக் காட்டி வோட்டுக் கேட்கும் பிஜேபிக்கும், நபி விழாவினை நாங்கள் கொண்டாடுவோம் எனக் கூறி ஓட்டுக் கேட்கும் பா.ம.க.வுக்கும் என்ன வித்தியாசம்?

— செந்தாரகை, வங்கனூர்.

www.padippakam.com

# பீகாரை ஆளும் யுத்தப் பிரபுக்கள்

குதிரைகளில் துப்பாக்கி ஏந்திய படி வந்த அந்த கும்பல் நள்ளிரவில் அக்கிராமத்தைச் சூழ்ந்து கொண்டது. உழைத்துக் களைத்து உறங்கிக் கொண்டிருந்த மக்கள் மீது கொலைவெறித் தாக்குதல் நடத்தியதோடு குடிசைகளுக்குத் தீ வைத்துவிட்டு எக்காளச் சிரிப்புடன் அக்கும்பல் திரும்பியது. அக்கிராம மக்களில் பலர் ரத்த வெள்ளத்தில் மிதந்தனர். பலர் உயிருக்கு அஞ்சி ஊரைவிட்டே ஓடினர். இவை இந்தி சினிமாப் படங்களில் காணும் வில்லனின் அட்டகாசங்கள் அல்ல. பீகார் கிராமங்களில் தாழ்த்தப்பட்ட மக்கள் மீது மேல் சாதி வெறியர்களின் குண்டர் படைகள் அன்றாடம் நடத்தும் அட்டூழியங்கள்தான்.

பீகாரின் போஜ்வார் மாவட்டம், தியோசந்தா கிராமம். கடந்த ஜூன் 22ந் தேதியன்று நள்ளிரவில் இக்கிராமத்தில் புகுந்த மேல் சாதியினர் குண்டர்படை, குட்டையில் மீன் பிடித்துவிட்டு அங்கேயே உறங்கிக் கொண்டிருந்த 4 பேரை சுட்டுக் கொன்றது. பின்னர் அருகிலுள்ள சகியாரா கிராமத்தினுள் புகுந்து கடை வீதியில் உறங்கிக் கொண்டிருந்த 4 பேரை சுட்டுக் கொன்றது. இதே நேரத்தில் இக்கிராமத்தைச் சேர்ந்த சிலர் அருகிலுள்ள கிராமத்தில் கலை நிகழ்ச்சி நடத்திவிட்டு ஊருக்குத் திரும்பிக் கொண்டிருந்தனர். அவர்கள் மீது கண் மூடித்தனமாக துப்பாக்கிச் சூடு நடத்தி 6 பேரை இக்கும்பல் கொன்றொழித்தது. நள்ளிரவில் நடந்த இப் பயங்கரவாதத் தாக்குதலில் கொல்லப்பட்டோரில் ஒருவர் தவிர மற்ற அனைவரும் அரிசனங்கள். இதுதவிர பெண்கள், குழந்தைகள் உட்பட 20க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

இதேபோல, ஜூன் 21ந் தேதியன்று கச்வான், சக்லா என்னுமிரு கிராமங்களிலும் மேல் சாதிவெறியர்கள் தாழ்த்தப்பட்டோரைத் தாக்கினர். இதில் எவ்வளவு பேர் கொல்லப் பட்டனர் என்ற செய்தி இன்னமும் வெளிவரவில்லை.

இக்கிராமங்கள் ஆரா பாராளுமன்றத் தொகுதியில் அடங்கியுள்ளன. ராஜ்வார் எனப்படும் தாழ்த்தப்பட்ட மக்களைப் பெரும்பான்மையாகவும் ராஜபுத்திரர், பூமிகார் முதலான மேல்சாதி நிலப்பிரபுக்களை சிறுபான்மை ஆளும் வர்க்கமாகவும் கொண்ட பின்தங்கிய பகுதி இது. இந்திய மக்கள் முன்னணி எனும் போலியான முற்போக்கு அமைப்பு இப்பகுதிவாழ் மக்களைத் திரட்டி நிலப்பிரபுத்துவ சாதியக் கொடுமைக்கு எதிராகவும், குறைந்த பட்சக் கூலி மற்றும் பிற பொருளாதாரக் கோரிக்கைகளுக்காகவும் போராடி வருகிறது. 1989ல் நடந்த பாராளுமன்றத் தேர்தலில் ஆரா தொகுதியில் போட்டியிட்ட இந்திய மக்கள் முன்னணியின் வேட்பாளரான ரமேஷ்வர் பிரசாத் வெற்றி பெற்றார். தேர்தல் தில்லு முல்லுகள், கள்ள ஓட்டு, வாக்குச் சாவடியைக் கைப்பற்றுதல் முதலான மோசடிகளையும் வன்முறையையும் மேல்சாதி நிலப்பிரபுக்கள் கட்டவிழ்த்துவிட்ட போதிலும் அவர்களால் நிறுத்தப்பட்ட வேட்பாளர் வெற்றி பெற முடியவில்லை. இதனால், ஆத்திரமடைந்த நிலப்பிரபுக்கள் தேர்தல் முடிந்ததும் இ.ம.மு. ஆதரவாளர்களான 27 தாழ்த்தப்பட்ட மக்களை கொன்றொழித்தனர்.



தாழ்த்தப்பட்டடோர் கொலைக்கு எதிராக இந்திய மக்கள் முன்னணியினர் ஆர்ப்பாட்டம்.

இப்படுகொலைக்கு காரணமாக இருந்த ஜ்வாலா சிங் என்ற கொடிய நிலப்பிரபு இப்பகுதியின் அறிவிக்கப்படாத அரசனாக ஆண்டு வருகிறான். இப்பகுதியில் இவன் வைத்ததுதான் சட்டம். வெளிப்படையாகவே குண்டர் படை வைத்துக் கொண்டு அட்டூழியம் செய்துவரும் இவனுக்கு அரசு எந்திரமும் ஆளும் வர்க்க அரசியல் கட்சிகளும் நெருங்கி கூட்டாளிகள். இதனால், அவனது சாதிவெறி பயங்கரவாதம் கேள்வி முறையின்றி தொடர்ந்து வருகிறது. கடந்த ஹோலிப் பண்டிகையின்போது இவனது குண்டர் படை 15 தாழ்த்தப்பட்ட பெண்களை கும்பலாகக் கற்பழித்தது. ஆனாலும் இன்றுவரை அவன் கைது செய்யப்படவில்லை.

எனவே, கடந்த தேர்தலின்போது 27 தாழ்த்தப்பட்டோரின் கொலைக்கு காரணமாக இருந்த இவனது குண்டர் படையைச் சேர்ந்த மூவரை இ.ம.மு.வினர் அண்மையில் அழித்தொழித்தனர். இதற்குப் பழிக்குப் பழிவாங்கும் நடவடிக்கையாகவே ஜ்வாலா சிங்கின் குண்டர்படை இப்போது 14 பேரை கொன்றொழித்துள்ளது. இந்திய மக்கள் முன்னணி, பாரதீய ஜனதா, வலது கம்யூனிஸ்ட் கட்சி ஆகியன தனித்தனியே உண்மை அறியும் குழுக்களை நிறுவி பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு நேரில் சென்று விசாரணை நடத்தி ஜ்வாலா சிங் என்ற நிலப்பிரபுதான் இப்படுகொலைகளுக்கு காரணம் என பகிரங்கமாக அறிவித்துள்ளன. ஆனாலும், இக்கொலைவெறி பிடித்த நிலப்பிர இன்னமும் கைது செய்யப்படவில்லை.

ஏனெனில், சென்ற தேர்தலி ஜ்வாலா சிங் காங்கிரசு வேட்பாள ஆதரித்தான். இம்முறை ஜனதாதள வேட்பாளரும் கிரிமினல் பேர்வழியுமான ரா லகான் சிங்கை ஆதரித்து ஆரா தொகுதியி வெற்றிபெறச் செய்துள்ளான். அப்புறம் ஜ தாதள முதல்வர் லல்லு பிரசாத் யாதவ் நடடிக்கையா எடுப்பார்? வழக்கம் போல பாதிக்கப்பட்ட பகுதிக்கு நேரில் செ ஆறுதல் கூறி, கொல்லப் பட்டவர்க குடும்பத்தாருக்கு ஒரு லட்ச ரூபாய் வழ விட்டு, சிறப்பு கோர்ட்டில் விசார நடத்தி குற்றவாளிகளை தண்டிப்பதாக உ குறுதி அளித்துவிட்டு இந்த விவகாரத் கிடப்பில் போட்டுள்ளார்.

ஆரா தொகுதியில் நடந்த படுகொ கள் பீகாரில் நடந்து முடிந்த தேர்தலை ஒ தாழ்த்தப்பட்டோர் மீது நடத்தப்ப கொலை வெறித்தாக்குதலுக்கு ஒரு உ ணம்தான். அதே சமயம் இதேபோன்ற துக்கும் மேற்பட்ட தாக்குதல்கள் தாழ் பட்டோர் மீது நடத்தப்பட்டுள்ளது.

கடந்த ஜூன் மாதம் 4ம் தேதிய மல்பாரியா கிராமத்தில் புகுந்த ராஜபு சாதிவெறியர்களின் சூரிய ஒளி சே



படிப்பகம்

www.padippakam.com

எனப்படும் குண்டர்படை 11 தாழ்த்தப்பட்ட மக்களை சுட்டுக் கொன்று குடிசைகளைத் தீயிட்டுக் கொளுத்தியது. இப்பகுதியில் மார்க்சிய - லெனினியப் புரட்சியாளர்கள் தாழ்த்தப்பட்ட மக்களைத் திரட்டி போராடி வருவதே இப்படுகொலைக்குக் காரணம். இதே கிராமத்தில் போலீசு புறக்காவல் நிலையம் இருந்த போதிலும் தாக்குதலை தடுக்கவோ, சாட்சி சொல்லவோ கூட போலீசார் முன்வரவில்லை.

பீகாரின் முன்னாள் காங்கிரசு முதல்வரும் சாதிவெறி பிடித்த பயங்கரவாதியுமான ஜெகன்னாத் மிஸ்ராவின் குண்டர் படைகள், மதுபானி மாவட்டத்தில் தாழ்த்தப்பட்ட மக்களை ஓட்டுப்போட விடாமல் தாக்குதல் நடத்தி விரட்டின. ஜாலோ சட்டமன்றத் தொகுதியில் மிஸ்ராவின் மருமகன் விஜய்குமார் மிஸ்ரா, வலது கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த 8பேரை சுட்டுக் கொன்றான். மாகுலி எனுமிடத்தில் தாழ்த்தப்பட்ட வகுப்பினரான 4 பேர் கொல்லப்பட்டனர். நாகர்வாஸ் கிராமத்தில் சாம்ராட் அசோகர் படை எனப்படும் நிலப்பிரபுத்துவ குண்டர்படை தேர்தலின்போது 3 பேரை சுட்டுக் கொன்று 12 பேரை படுகாயப்படுத்தியது. காரணம், இக்கிராம மக்கள் தாழ்த்தப்பட்ட வகுப்பினர்.. வலது கம்யூனிஸ்ட் கட்சியை ஆதரிப்பவர்கள்.

சுருக்கமாகச் சொன்னால் நடந்து முடிந்த தேர்தலை ஒட்டி பீகாரில் 60க்கும் மேற்பட்ட தாழ்த்தப்பட்ட மக்கள் நிலப்பிரபுக்களால் கொல்லப் பட்டுள்ளனர். இவற்றை ஓட்டுக் கட்சிகளுக்கிடையே நடந்த தேர்தல் வன்முறையாக மட்டும் சித்தரித்து பத்திரிக்கைகள் இச்சாதிய படுகொலையை திசை திருப்பி விட்டன. அதுவும் ஆங்கில பத்திரிக்கைகளின் செய்தியாக இந்த விவகாரம் அடங்கிப் போய்விட்டது.

ஓட்டுக் கட்சிகளின் குண்டர் படைகள் மட்டுமல்ல; ஒவ்வொரு மேல் சாதிக்குமான குண்டர் படைகள் என்பதாக பீகாரில் சாதிவெறி நிலப்பிரபுக்களின் கொலைவெறி ஆட்சிதான் நிலவுகிறது. யாதவ சேனா, குர்மிசேனா, ராஜபுத்திர சேனா, லோரிக் சேனா, பூமி சேனா, குன்வர் சேனா, விசுவாமித்திர சேனா, பரசுராம் சேனா, சத்தியேந்திர சேனா, சூரிய ஒளி சேனா என்று ஏறத்தாழ 20க்கும் மேற்பட்ட நிலப்பிரபுத்துவ மேல் சாதி குண்டர் படைகள் நவீன ஆயுதங்களுடன் சுதந்திரமாக வலம் வருகின்றன. காங்கிரசு ஆட்சிபோய், தாழ்த்தப்பட்ட - பிற்பட்ட மக்களின் நண்பனாக காட்டிக் கொள்ளும் ஜனதா தளம் ஆட்சிக்கு வந்த பிறகும் கூட இந்த யுத்தப் பிரபுக்களின் கொட்டத்தை அடக்க முடியவில்லை.

பீகாரில் பெருகி வரும் யுத்தப் பிரபுக்களின் சேனையும் அவற்றின் தாக்குதல்களும் ஒரு உண்மையைத் தெளிவாக்கியுள்ளன. நிலப்பிரபுக்களுக்கும் கூலி - ஏழை விவசாயிகளுக்கும் இடையிலான வர்க்க முரண்பாடு மேலும் தீவிரமடைந்து வருகிறது. அதன் விளைவாக பீகார் குமுறும் எரிமலையாக கொந்தளித்துக் கொண்டிருக்கிறது. சாதிவெறி நிலப்பிரபுக்களின் சர்வாதிகாரத்திற்கு எதிராக விரைவில் அது பொங்கியெழப் போவது மட்டும் நிச்சயம்.

# அப்பாவி சிறுவன் மீது கொலை வெறித் தாக்குதல் தஞ்சை போலீசின் காட்டுமிராண்டித்தனம்



போலீசு - அப்பாவி மக்களை அடக்கி ஒடுக்கி வேட்டையாடுவதற்கென வளர்க்கப்பட்ட மிருகம். சாதாரண மிருகமில்லை; கேடுகெட்ட - கொடூரமான மிருக கூட்டம். அதிகாரவெறி, ஆதிக்கவெறி, காமவெறி, மக்களைத் துன்புறுத்தி இன்பம் காணும் வெறி... என அனைத்து வெறிகளுக்கும் சொந்தக்காரர்கள். காக்கிச் சட்டையின் கௌரவத்திற்கு மக்களால் சிறு ஊறு வந்தாலும் சும்மாவிடாது; பாய்ந்து குதறும்! இதன் வரைமுறையற்ற அதிகாரத் திமிரை எழுத்தால் வர்ணிக்க முடியாது.

தஞ்சை அண்ணாசாலையில் உள்ள தமிழ்மணி (வாடகை) சைக்கிள் கடைக்கு 13.6.91 அன்று தஞ்சை மேற்கு பகுதியைச் சேர்ந்த போலீசு ஆண்ட்ரூஸ் (P.C. 1355) என்பவனின் தம்பி அலெக்ஸ் சைக்கிள் எடுக்க சென்றான். அப்பொழுது கடையில் இருந்த சிறுவன் நரேந்திரன், ஆள் அடையாளம் தெரியாமல், பிறகு ஒருவரின் அடையாளம் காட்டுதலின் பேரில் சைக்கிள் கொடுத்துள்ளான். குறிப்பிட்டபடி அலெக்ஸ் சைக்கிளை திருப்பி ஒப்படைக்கவில்லை. எனவே அலெக்ஸ் சைக்கிள்கடை வழியாகச் சென்ற பொழுது நரேந்திரன் அவனை நிறுத்தி சைக்கிள் கேட்டான். ''என்னை ஆளைத் தெரியாது என்று சொல்லிவிட்டாய் அல்லவா? எனக்கு ஜாமீன் கொடுத்தவரிடமே கேட்டு வாங்கிக்கொள்'' என தகராறு பண்ணினான் அலெக்ஸ். பிறகு பக்கத்தில் உள்ளவர்களின் தலையீட்டினால் சைக்கிளை வாங்கி கடையில் வைத்தான் நரேந்திரன். சைக்கிளுக்குரிய வாடகை கேட்டதற்கு ''எங்கள் அண்ணன் போலீசு, அவரை அழைத்துக் கொண்டு வந்து தருகிறேன்'' எனக் கூறிவிட்டுப் போனான், அலெக்ஸ்.

சிறிது நேரத்தில் தம்பியுடன் வந்த போலீசு ஆண்ட்ரூஸ் நரேந்திரனை தமக்கே உரிய பாணியில் திட்டியதோடு, இழுத்துப் போட்டு அடிக்கவும் செய்தான். அதன் பிறகு தன்னுடன் வேலைபார்க்கும் சில போலீசுகாரர்களுடன் வந்து நரேந்திரனை பலமாக தாக்கி இழுத்துச் சென்றான்.

தஞ்சை கிழக்கு காவல் நிலையத்தில் எஸ்.ஐ. மனோகரனிடம் சிறுவன் நரேந்திரன் ஒப்படைக்கப்பட்டான். எஸ்.ஐ., எவ்வித விசாரணையுமின்றியும், சிறுவன் தன் மீது எந்த தவறும் இல்லை என எடுத்துக் கூறியதை பொருட்படுத்தாமலும் தன் வெறி தீற மட்டும் லத்தியால் தாக்கினான். பின்னர், ஆண்ட்ரூஸ் மற்றும் பிற போலீசுகளிடம், இவனை நிர்வணமாக்கி அடித்து லாக்கப்பில் போடுங்கள் எனக் கூறிவிட்டுப் போனான், எஸ்.ஐ. மனோகரன். ஆண்ட்ரூஸ் மற்றும் 12 போலீசு சேர்ந்து கொண்டு சிறுவன் நரேந்திரனை லாக்கப்பில் நிர்வாணமாக்கி தாக்கினர். சிறுவனை மயிரை பிடித்து அடித்தும் படுக்கவைத்து வயிற்றின் மீது ஏறி நின்று தாக்கியும் கண்முன் தெரியாமல் நரேந்திரன் மயக்கமுறும் வரை சித்ரவதை செய்தனர். ''சைக்கிள் கேட்டால் ஆள் தெரியாது என்று எப்படிடா சொல்லலாம்?'' எனக் கேட்டு இத்தாக்குதலை நடத்தியுள்ளனர்.

சிறுவன் நரேந்திரன் மனநிலை பாதிக்கப்பட்டு ஆர்.எம்.ஹெச் மருத்துவமனையில் கவலைக்கிடமான நிலையில் சேர்க்கப் பட்டான். சிகிச்சைப் பெற்று சற்று தேறியுள்ளான். உயர் போலீசு அதிகாரிகள் மற்றும் மாவட்ட ஆட்சியாளர், நீதிபதிகள், தமிழக உள்துறை செயலாளர் என பலருக்கு ஊர் பொதுமக்கள் புகார் மனு அனுப்பினார்கள். இன்று ஆர்.டி.ஓ. விசாரணையும், நீதிமன்றத்தில் வழக்கும் நடக்கிறது. போலீசுக்காரன் ஆண்ட்ரூஸ் மட்டும் அதிராம்பட்டினத்திற்கு மாற்றப்பட்டுள்ளான்.

ஆனாலும் என்ன? விசாரணையும் வழக்கும் அதிகாரவர்க்கத்தின் இழுத்தடிப்புக்குள் புதைக்கப் போகிறார்கள். தாக்குதல் நடத்திய எஸ்.ஐ. மனோகரன் உட்பட மற்ற போலீசுக்காரன்கள் தப்பித்துக்கொண்ட தைரியத்தில் அடுத்து எவன்மேல் பாய்ந்து குதறலாம் என அலையப் போகிறார்கள். போலீசு ஆண்ட்ரூஸ், அதிரையில் யாராவது ஒரு அப்பாவி மீது தாக்குதல் நடத்திவிட்டு மீண்டும் இதே பகுதிக்கு மாறியும் வரலாம். இதுதானே இதுவரை நடைமுறையாக இருக்கிறது?.

சிறுவன் நரேந்திரனின் தந்தை தீவிர தி.மு.க.காரர் உள்ளூர் தி.மு.க. தலைவர்கள் இப்பிரச்சினையில் தலையிட்டு உதவி செய்யாததோடு போலீசுக்கு ஆதரவாக வேறு செயல்பட்டனர். இதைக்கண்டு வெறுப்புற்ற நரேந்திரனின் தந்தை தி.மு.க-வைப்பற்றி நன்கு புரிந்து கொண்டுள்ளார். சிகிச்சைப் பெற்றுவரும் சிறுவன் நரேந்திரன், ''என்னை என் தந்தை கோழையாக வளர்த்தார். ஆனால் போலீசு எனக்கு தைரியத்தை வரவழைத்துவிட்டது'' என்கிறான். உண்மைதான்! பாதிக்கப்பட்டவர்கள் மட்டுமல்ல, பாதிக்கப் படுபவர்களைப் பார்த்து பிறரும் போலீசுக்கு எதிராக திரள்வதும், மக்கள் விரோத அவ்வமைப்பை தூக்கியெறிவதும் வெகுதொலைவில் இல்லை.

— தகவல்: ம.க.இ.க. தஞ்சை.



படிப்பகம்

www.padippakam.com




● *ஆயுள் காப்பீட்டுக் கழகம் (எல்.ஐ.சி.) மற்றும் பல சேமிப்பு நிறுவனங்கள் மக்களின் எதிர்கால வாழ்க்கைக்கு எந்த வகையில் உதவக் கூடியன? அவற்றின் பணி மக்களுக்கு எந்த வகையில் அவசியமானது?*

**— அக்னிகரன், கோவை - 1.**

★ இவை மக்களது எதிர்கால வாழ்க்கை நலனுக்கானவை என்று ஆசை வார்த்தைகள் கூறப்படுகின்றன. ஆனால், எல்.ஐ.சி. உட்பட எல்லாக் காப்பீட்டுக் கழகங்களும் பல சேமிப்பு நிறுவனங்களும் இலாபம் ஈட்டுவதற்காகவும் மூலதன சேகரிப்புக்காகவும் தொழில்களைக் கட்டுப்படுத்துவதற்காகவும் நடத்தப்படும் நிதித் தொழில்கள் தாம். இறுதியில் தமக்குக் கிடைக்கும் காப்பீட்டுத் தொகையையும் சேமிப்புத் தொகையையும் பெற்றுக் கொண்டு 'மனநிறைவு' அடையும் பெரும்பாலான வாடிக்கையாளர்கள் இந்தக் கழகங்கள், நிறுவனங்களின் நடவடிக்கைகளை ஊன்றிக் கவனிப்பதில்லை.

ஒவ்வொரு காப்பீட்டுத் திட்டத்தின் கீழும், ஒவ்வொரு தவணையிலும் வசூலிக்கப்படும் மொத்தத் தொகையில் ஒரு சிறு அளவு தொகையைத்தான், ஒரு சில பாலிசிதாரர்களுக்குத் தான் காப்பீட்டுக் கழகங்கள் ஒரே சமயத்தில் தர வேண்டி வருகிறது. அதே போல வங்கிகள் உட்பட பல சேமிப்பு நிறுவனங்கள் ஒரு குறிப்பிட்ட சமயத்தில் வசூலிக்கும் தொகையில் ஒரு சிறு அளவைத்தான் ஒரு சில வாடிக்கையாளர்களுக்குத்தான் தரவேண்டி வருகிறது. ஆகவே பல ஆயிரம் கோடி ரூபாய் தொகை இந்தக் கழகங்கள், நிறுவனங்களின் கைகளில் 'இருப்பு' வைத்துக் கொள்ள வாய்ப்பு ஏற்படுகிறது. இந்தத் தொகை வெறுமனே பெட்டிகளில் வைத்துப் பூட்டப்படுவதில்லை. அரசு மற்றும் தனியார் தரகு அதிகார முதலாளிகளின் தொழில் வியாபாரத்துக்கான முதலீடுகளாக்கப்படுகிறது. நேரடி வட்டி - கடனாகவும், ஆலை முதலீடாகவும், பங்குச் சந்தையிலும் இத்தொகை புகுந்து விளையாடுகிறது. இதனால் ஆலை உற்பத்தி, வர்த்தகம், பங்குச் சந்தை ஆகிய மூன்றும் பற்றிய முழு விவரங்களை அறிந்து கொள்வதோடு அவற்றைக் கட்டுப்படுத்தும் நிதி ஆதிக்கம வகிக்கவும் முடிகிறது.

காப்பீட்டுக் கழகங்களையும், பல சேமிப்பு நிறுவனங்களையும் அரசே நடத்தினால், "மோசடிகள் இருக்காது, உத்திரவாதம் இருக்கும், தேசிய நலன்களுக்குப் பயன்படுமே தவிர தனியார் கொள்ளை இருக்காது" என்று கூறப்படுகிறது. ஆனால் இவற்றை அரசே நடத்துவதற்கும் தனியார் நடத்துவதற்கும் பெரிதும் வேறுபாடில்லை. அரசே நடத்தினாலும்,, தனியாரைப் போலவே பல மோசடிகள் உள்ளன. பல சமயங்களில் அதிகார வர்க்க சிகப்பு நாடாவுக்குள் சிக்கிக் கொண்டு ஆலைவாயில் சிக்கிய கரும்பாகி விடுகிறது. தேசிய நலனுக்குப் பயன்படுவதாகக் கூறுவதும் உண்மையல்ல. லார்சன் அண்டு டூப்ரோ விவகாரத்தில் திருபாய் அம்பானிக்கு அந்நிறுவனத்தைத் தாரை வார்ப்பதில் எல்.ஐ.சி.யும் பரோடா வங்கியும் துணை போனதைப் பார்த்தோம். பெரும்பாலான பங்குகளை ஸ்டேட் வங்கி வைத்திருப்பினும் பின்னி ஆலை விவகாரத்தில் சிறுபான்மை பங்குகளே பெற்றுள்ள சாராய ராமசாமி உடையார் தொழிலாளர் விரோதமாக ஆலையை மூடுவதற்கு உடந்தையாக இருப்பதைப் பார்க்கிறோம். ஆகவே அரசு மற்றும் தனியார் தரகு அதிகார முதலாளிகளின் நலன்களுக்காகத்தான் காப்பீட்டுக் கழகங்களும் சேமிப்பு நிறுவனங்களும் பயன்படுகின்றன. புதிய ஜனநாயகம் மற்றும் சோசலிச அமைப்புகளின் கீழ்தான் இவை மக்களுக்கும், தேசத்துக்கும் பயன்பட முடியும்.

● *மார்க்சிய - லெனினிய இயக்கத்தைச் சார்ந்த அமைப்பு (நக்சலைட்டுகள்) ஒருசில மாநிலங்களில் (ஆந்திரா, ஒரிசா, கேரளா, பீகார், மேற்கு வங்கம்) வரும் தேர்தல்களில் நிற்பதாக அறிந்தேன். தேர்தல் பாதை திருடர் பாதை என்று சொல்லிவிட்டு இப்போது அந்தப் பாதையில் செல்வது சந்தர்ப்பவாதம் ஆகாதா?*

**— ஏ.கனகரத்தினம், துவாக்குடிமலை.**

☆ நமது நாட்டிலுள்ள மார்க்சிய - லெனினிய இயக்கம் ஒரே அமைப்பாக இல்லை. சில குழுக்களாகப் பிளவுபட்டுள்ளன. இவை தவிர மார்க்சிய - லெனினிய இயக்கத்தின் அடிப்படை நிலைப்பாடுகளில் இருந்து மாறுபடும் வேறு சில குழுக்களும் இருக்கின்றன. இந்திய சமுதாயத்தின் அரசியல், பொருளாதார, சமூகத்தன்மை; இந்தியப் புரட்சியின் எதிரிகள் - இலக்கு; புரட்சியின் கடமை - சாராம்சம்; புரட்சியின் அரசியல், இராணுவ யுத்த தந்திரம்; தீர்க்கப்பட வேண்டிய அடிப்படை, பிரதான முரண்பாடுகள் போன்றவற்றையே நாம் அடிப்படை நிலைப்பாடுகள் என்கிறோம். இந்த அடிப்படை நிலைப்பாடுகளையும், மக்களைத் திரட்டும்முறை, அமைப்பு முறை, போராட்ட வடிவங்கள் போன்ற அடிப்படை அல்லாத நிலைப்பாடுகள் - கொள்கைகளையும் குழப்புவதன் மூலம் அந்த வேறு சில குழுக்கள் தம்மையும் மார்க்சிய - லெனினியக் குழுக்கள் என்று ஏமாற்றுகின்றன. அதாவது மேற்சொன்ன அடிப்படை நிலைப்பாடுகளில் மாறுபட்டுப் போய்விட்ட பின்னும் அதை வெளிப்படையாகவும், நேர்மையாகவும், தைரியமாகவும் ஒப்புக்கொண்டு, வேறு இயக்கம், அமைப்புப் பெயராக மாற்றிக் கொள்ளாது புரட்சிகர அணிகளிடம் மோசடி செய்கின்றனர். புரட்சிகர இயக்கத்தை இழிவுபடுத்தும் நோக்கத்தோடு முதலாளித்துவப் பத்திரிக்கைகளும் இவ்வாறே குழப்புகின்றன. இந்த வகைக் குழுக்கள் தாம் தேர்தல்களிலும் பங்கேற்கின்றன. "தேர்தல் பாதை திருடர் பாதை" என்பது போன்ற முழக்கங்களை முன் வைத்துத் தேர்தலைப் புறக்கணிக்கும் மார்க்சிய - லெனினியக் குழுக்களும் இந்த வகையான குழுக்களும் வேறுவேறானவை.

● *"கொசுவை ஒழிக்க முடியாத அரசு எயிட்சை ஒழிக்க முடியுமா?" என்று எழுதினீர்கள். ஒரு விபச்சாரி மூலம் ஒரு நாளைக்கு 50 பேர்களுக்கும், அவர்களது மனைவிகள், மகன்களுக்கும் பரவுகிறது. ஒரு நோயாளிக்கு வருடம் ஒரு லட்சம் ரூபாய் செலவாகிறது. மற்ற திட்டத்திற்கு அரசாங்கம் என்ன செய்யும். இதை, இந்த விபச்சாரியை அரசாங்கம் எப்படித் தடுக்க முடியும். இப்படிக் கூறும் என் நண்பர், மற்றவரைக் குற்றம் சொல்லவே இந்தப் பத்திரிக்கை செயல்படுகிறது என்கிறார்.*

**— தேவநாதன், தென்சிறுவள்ளூர்.**

★ எயிட்ஸ் நோய் பரவுவதற்கான பல்வேறு காரணங்களில் முக்கியமான ஒன்றுதான் விபச்சாரம். விபச்சாரத்தினால் பரவுவது மட்டுமல்ல. விபச்சாரிகளுடன் தொடர்பே இல்லாத ஆண்கள், பெண்கள் குழந்தைகளுக்கும் கூட எயிட்ஸ் நோய் வேகமாகப் பரவும் வாய்ப்பிருக்கிறது. அதைத் தடுப்பதற்கு இந்த அரசு எவ்வித முயற்சியும் எடுப்பதில்லை; மாறாக, அந்தப் பிற வழிகளிலும் எயிட்ஸ் நோய் பரவுவதற்கு இந்த அரசு காரணமாக இருக்கிறது என்பதுதான் அதிர்ச்சியூட்டும் உண்மையாகும்.

உதாரணமாக, எயிட்ஸ் நோயாளிகளின் எச்சில், இரத்தம் மூலமாகவும் பரவும். அவர்கள் பயன்படுத்திய பாத்திரங்களை வேறு யாரும் பயன்படுத்தக்கூடாது. நன்கு சுத்தப்படுத்தப்படாத ஊசி மற்றும் பிற மருத்துவக் கருவிகள் பலரும், குறிப்பாக எயிட்ஸ் நோயாளிகளுக்குப் பயன்படுத்தியவை — மற்றவர்களுக்கும் உபயோகிப்பதால் இந்நோய் பரவும். நமது நாட்டில் இரத்தம் விற்பதையே வருமானத்துக்குரிய தொழிலாகப் பலர் கொண்டுள்ளனர். அவர்களில் எயிட்ஸ் நோயாளிகள் பலர். இவர்களின் இரத்தம் தனியார் மற்றும் அரசு மருத்துவமனை மூலம் ஒரு வியாபாரமாகவே நடக்கிறது. பலர் மாறிமாறி ஒரே ஊசிமூலம் போதை மருந்து ஏற்றிக் கொள்வது, ஓரின உறவு கொள்வது ஆகியவற்றாலும் எயிட்ஸ் நோய் பரவுகிறது.



படிப்பகம்

www.padippakam.com

ஆகவே, அரசு செய்ய வேண்டிய முதற்காரியம் நாட்டிலுள்ள எயிட்ஸ் நோயாளிகளை அடையாளங்கண்டு தனிமைப்படுத்தி சிகிச்சை அளிக்க வேண்டும். இந்தப் பொறுப்பைப் பல மருத்துவ நிபுணர்கள் பலமுறை வலியுறுத்தியும் அரசு செய்ய மறுக்கிறது. அதோடு எயிட்ஸ் நோயாளிகள் என்று தெரிந்த பலரையும் மருத்துவ மனைகள், காப்பகங்களில் இருந்து விரட்டிவிடுகிறது. போதிய வசதி சிகிச்சை இல்லாததால் பலர் தப்பியோடி, மேலும் நோய் பரப்புகின்றனர். முதலில் சொன்ன பொறுப்பற்ற நடவடிக்கைகளாலும் ஐந்து நட்சத்திர - ''பாப்'' கலாச்சாரம், உல்லாச வாழ்க்கை முறைகளையும் அரசே திட்டமிட்டுப் பரப்புவதைப் பலசான்றுகளுடன் எழுதியுள்ளோம். இதனால் போதை மருந்து - விபச்சாரம், ஓரின உறவு ஆகிய சீரழிவுப் போக்குகள் பரவுகின்றன. போதை மருந்து விபச்சாரத் தொழில்களை நடத்தும் சமூக விரோத - கிரிமினல் மஃபியா கும்பல்களுடன் அரசியல்வாதிகளும் - போலீசும் கூட்டு வைத்திருப்பது யாவரும் அறிந்த இரகசியம். ''ஆட்டோ'' சங்கரில் இருந்து சந்திரா சாமிவரை பல உதாரணங்கள் தர முடியும். ஈழத் தமிழ்ச் சிறுவர்களை ஓரின உறவுக்கு நிர்ப்பந்தித்த இந்திய இராணுவத்தினர் மீது இந்த அரசு என்ன நடவடிக்கை எடுத்தது?

மேலும் விபச்சாரத்தைத் தடைசெய்து அதற்கான அதிகாரத்தைக் கையிலெடுத்துள்ள அரசு அதைத் தடுத்துள்ளதா? பெண்களின் சமூக, வாழ்க்கைக்கு உத்திரவாதமளித்து விபச்சாரத்தில் தள்ளப்படுவதைத் தடுக்க வேண்டிய் இந்த அரசே பொறுப்பின்றி விபச்சாரத்தைப் பரப்புவதற்குப் பல சான்றுகள் கூறமுடியும். ஆந்திரா, கர்நாடகாவில் சில சாதிப் பெண்கள் தேவதாசி முறைக்குப் பகிரங்கமாகவே நிர்ப்பந்திக்கப்படுவது; நிர்வாண பூசை நடத்தி விபச்சார விடுதிகளுக்கு விற்கப்படுவது — உ.பி, ம.பி, ராஜஸ்தான் பீகார், ஒரிசா பெண்கள் பகிரங்கமாக விபச்சாரச் சந்தையில் விற்கப்படுவது இதெல்லாம் தெரிந்தும், நிரூபித்தும் அரசு தடுக்கவில்லை. பம்பாய், கல்கத்தா, டெல்லியில் அரசே 'லைசென்சு' கொடுத்து விபச்சாரத் தெருக்களை அனுமதிக்கிறது. வெளிநாட்டுச் சுற்றுலா வளர்ச்சி - ஐந்து நட்சத்திர விடுதிகள் என்ற பெயரில் வெளிநாட்டிலிருந்து எயிட்ஸ் நோய் இறக்குமதி செய்கிறது. அழகு நிலையங்கள், ''மஸாஜ் பார்லர்கள்'' என விபச்சாரக் கடைகளுக்கு லைசென்சு வழங்குகிறது. இப்படிப் பல சான்றுகள் கூறமுடியும். உயிர்க்கொல்லி நோய் பரவி மக்களே மாண்டு போகும் நிலையில் மற்ற திட்டங்களால் மட்டும் என்ன பயன்? தமிழ்நாட்டிலேயே வேலூர் தனியார் மருத்துவமனையில்தான் எயிட்ஸ்நோய் பரிசோதனை உள்ளது. இதுதான் அரசுக்குள்ள அக்கறை!

**எயிட்ஸ்: அரசாங்கம் என்ன செய்ய முடியும்?**
**புலிகள் நடத்துவது சுயநிர்ணய போராட்டம் இல்லையா?**
**நக்சலைட்டுகள் தேர்தலில் நிற்பது சந்தர்ப்பவாதம் ஆகாதா?**
**அசாம் தீவிரவாதிகளை (உல்பா) நீங்கள் ஆதரிப்பது ஏன்?**

★ ***தங்களது ('91 ஏப்ரல் 1-30) புதிய ஜனநாயகம் இதழில், ''ஒடுக்கப்பட்ட தேசிய இனம் அதன் முதலாளிகள், குட்டி முதலாளிகள், பாட்டாளிகள் ஆகிய எந்த வர்க்கத்தின் கீழ் திரண்டு சுயநிர்ணய உரிமைக்காகப் போராடினாலும் நியாயமானதுதான். வர்க்க சிந்தனையுடன் கூடிய உழைப்பாளி அரசையோ, நிலையான ஜனநாயக அரசையோ ஏற்படுத்த மாட்டார்கள் என்பதற்காக பாட்டாளிகள் அல்லாதோர் தலைமையிலான சுயநிர்ணய உரிமைப் போராட்டங்கள் அநியாயமாகிவிட முடியாது'' என்று கூறியிருக்கிறீர்கள். இது அப்படியே விடுதலைப் புலிகள் போராட்டத்திற்கும் பொருந்துமல்லவா? போராட்டத்தின் இடையே சிறுசிறு தவறுகள் ஏற்படுவதை வைத்து மறைந்து நின்று தம் உயிரையே தியாகம் செய்யும் - அவர்களின் போராட்டத்தைத் தாங்கள் ஏற்க மறுப்பது ஏன்? அவர்களின் போராட்டம் தேசிய இனப் போராட்டம் இல்லையா?***

***— அறத்தரசன், ச.சா.குளம்.***

☆ சுயநிர்ணய உரிமைப் போராட்டம் குறித்து பு.ஜ. எழுதிய மேற்படி நிலைப்பாடு விடுதலைப் புலிகள் இயக்கத்துக்குப் பொருந்தாது. காரணம் அவர்கள் செய்வது போராட்டத்தின் இடையே ஏற்படும் சிறுசிறு தவறுகள் அல்ல; நன்கு தெரிந்து செய்யப்படும் பாசிச நடவடிக்கைகள் தாம். அவற்றை நாம் பலமுறை பட்டியலிட்டுக் கூறியுள்ளோம். அவற்றுக்கு இதுவரை யாருமே பதில் கூற முயன்றது கூடக் கிடையாது. தமிழ்நாட்டிலுள்ள புலிகளின் துதிபாடிகளோ, ''ஆமாம்! பாசிஸ்டுகள் தான்! அதில் ஒன்றும் தவறில்லை! அதற்கு நீங்கள் என்ன செய்துவிட முடியும்!'' என்று ஆத்திரமாகக் கூச்சல் போடுகிறார்கள். நமக்கு ஏதாவது முத்திரை குத்துகிறார்கள். புரட்சியாளர்கள் மத்தியிலுள்ள புலிகள் ஆதரவாளர்களோ முதலில் புலிகளின் பாசிசத் தன்மையை அடியோடு ஏற்க மறுத்தார்கள்; இப்போது புலிகளிடம் சர்வாதிகார, பாசிசப் போக்குகள் இருப்பதாக ஒப்புக் கொள்கிறார்கள். ஆனால் அவற்றை விமர்சிக்கக் கூடாது; என்ன இருந்தாலும் களத்தில் நின்று உறுதியாகப் போரிடுவது புலிகள் தாம், ஆகவே ஆதரிக்க வேண்டும் என்று கூறுகிறார்கள். புலிகள் மீதான நமது குற்றச்சாட்டுகளுக்குப் பதிலளிக்காது, பொதுவில் ஏதோ சில தவறுகள் என்றும் அவர்களது ''தியாகம்'', போரிடும் உறுதி என்றும் மழுப்பித் திசை திருப்புவதை நாம் ஏற்கவில்லை. தேசிய இனத்துக்கான சுயநிர்ணய உரிமை என்பது ஒரு பாசிச அமைப்புக்கான சுயநிர்ணய உரிமை என்பதாக ஏற்று ஆதரிக்க முடியாது. மாற்றானது பேரினவாத பயங்கரத்தைக் காட்டிலும், சொந்த இனத்தானது பாசிச பயங்கரம் எந்த வகையிலும் மேலானதாக ஏற்க முடியாது.

● **குட்டி முதலாளித்துவ சக்திகளாக இருக்கும் காஷ்மீர் ஜ.கா.வி.மு. மற்றும் அசாம் ''உல்ஃபா'' ஆகியவற்றின் முறைகேடுகளை அம்பலப்படுத்தி ஏன் ''பு.ஜ'' எழுதவில்லை.**

***— சூர்யா, மதுரை.***

● **விடுதலைப் புலிகளை அவர்களின் சீரழிவுகளை அம்பலப்படுத்தி எதிர்க்கும் தாங்கள் அசாம் தீவிரவாதிகளை (உல்ஃபா) கண்ணை மூடிக் கொண்டு ஆதரிப்பது ஏன்?**

***— பாசு, ஆலங்குடி.***

★ ''உல்ஃபா'' போராளிகளைக் கண்ணை மூடிக்கொண்டு ஆதரிப்பதாகக் கூறுவது சரியல்ல. அசாம் கண பரிக்சத்துடன் அது வைத்துக் கொண்டுள்ள ''ஊடலும் கூடலுமான'' உறவு குறித்து விமர்சிக்கிறோம். மக்கள் திரள் போராட்டங்களின்றித் தனி நபர் பயங்கரவாதச் செல்களையே சார்ந்து நிற்பது குறித்து விமர்சிக்கிறோம். தவிரவும் ''உல்ஃபா'' போராளிகளை விடுதலைப் புலிகளுடன் ஒப்பிட முடியாது என்று கருதுகிறோம். சக போராளிகளையும், சிறுபான்மை சமூகமான முஸ்லீம் மக்களையும், சிங்கள சிவிலியன்களையும் தாக்கிக் கொல்லுகிறார்கள், விடுதலைப்புலிகள். ஆனால், பல்வேறு மலைவாழ் பழங்குடி தேசிய சிறுபான்மை இன மக்கள் இணைவதற்கும், ஐக்கிய அசாமின் சுய நிர்ணய உரிமைக்கும் போராடும் ''உல்ஃபா'' போராளிகள் அவ்வாறு செய்வதாக இதுவரைத் தகவல் இல்லை.

அதேபோல விடுதலைப் புலிகள் அளவுக்கு அம்பலப்படுத்தி எதிர்க்க வேண்டிய பாரதூரமான தவறுகளை ஜம்மு - காஷ்மீர் விடுதலை முன்னணி செய்வதாகத் தகவல்கள் இல்லை. இசுலாமிய மதவாதிகளாலும், பாக். உளவாளிகளாலும் நிறுவி இயக்கப்படும் ஜமாத் - ஈ - இசுலாமி, அல்லா புலிகள் போன்ற அமைப்புகள் பல தவறான இசுலாமிய மதவெறி - வகுப்புவாத, பயங்கரவாதச் செயல்களில் ஈடுபடுகின்றன. ஆனால், அவற்றுக்கான பழியை நியாயமான கோரிக்கைகளுக்காகப் போராடும் ஜ.கா.வி.மு.மீது சுமத்துகின்றன. ஆகவே ''உல்ஃபா''வோ, ஜ.கா.வி.மு.வோ அம்பலப்படுத்தி எதிர்க்க வேண்டிய பாரிய தவறுகள், முறைகேடுகள் செய்வதாகத் தகவல் இருப்பின் பு.ஜ. அவற்றை எழுதத் தயங்காது.



படிப்பகம்

www.padippakam.com

## ‘மார்க்சிஸ்ட்’ கட்சிப் பொதுச் செயலாளர்

# நம்பூதிரிபாடுக்கு கட்டாய ஓய்வு

***அரசியல் - சித்தாந்த வேறுபாடுகளை ஜனநாயக முறையிலான போராட்டம் மூலமாகத் தீர்ப்பதற்குப் பதில் அரண்மனை ஆட்சிக் கவிழ்ப்புகளைப் போல கட்டாய ஓய்வு, ''கல்தா'' முறையில் தீர்ப்பதே போலிக் கம்யூனிஸ்டு கட்சிகளின் வழக்கமாகி விட்டது.***

இந்தியாவிலுள்ள போலிக் கம்யூனிஸ்ட் கட்சிகளில் ஒப்பீட்டளவில் பெரிய கட்சியாக இருப்பது 'மார்க்சிஸ்ட்' கட்சி. 1977 முதல் அக்கட்சியின் பொதுச் செயலாளராக பொறுப்பில் இருந்து வரும் திருவாளர் ஈ.எம்.எஸ். நம்பூதிரிபாடு தற்போது அப்பொறுப்பிலிருந்து கழட்டிவிடப்பட உள்ளார். வருமாண்டு ஜனவரியில் சென்னையில் நடைபெறவுள்ள அக்கட்சியின் 14-வது மாநாட்டில் மூப்பு காரணமாக அவரை ஓய்வெடுத்துக் கொள்ளுமாறு கட்சி கேட்டுக் கொள்ளும்; புதிய செயலாளராக அநேகமாக ஹரிகிஷன்சிங் சுர்ஜித் தேர்ந்தெடுக்கப்படுவார் என்று முதலாளித்துவப் பத்திரிக்கைகளில் செய்திகள் வெளிவந்துள்ளன.

இச்செய்தி வெளியாகி பல நாட்களாகியும் 'மார்க்சிஸ்ட்' கட்சியின் தலைமை இதற்கு மறுப்பு ஏதும் தெரிவிக்கவில்லை. தனது மௌனத்தின் மூலம் இச்செய்தியை அது உறுதிப்படுத்தியுள்ளது.

கேரளாவைச் சேர்ந்த 83 வயதாகும் நம்பூதிரிபாடு போலிக் கம்யூனிஸ்டுகளின் மூப்படைந்த தலைவர் என்பது உண்மைதான். ஆனால், இதுநாள்வரை அவரை ஓய்வெடுத்துக் கொள்ளுமாறு வலியுறுத்தாத கட்சி இப்போது திடீரென அவ்வாறு கோருவது ஏன்? இத்தனைக்கும் நம்பூதிரிபாடு நடமாட முடியாமல் படுக்கையில் வீழ்ந்து கிடக்கவில்லை. அப்படியிருக்க தேர்தல் முடிவுகளுக்குப் பிறகு அவரை ஓய்வெடுத்துக் கொள்ளுமாறு கட்சித் தலைமை நிர்பந்திப்பது ஏன்? இந்த முடிவைக் கூட அதிகார பூர்வமாக பகிரங்கமாக அறிவிக்காமல் முதலாளித்துவப் பத்திரிகைகளில் செய்தியைக் கசியவிட்டு நம்பூதிரிபாடை மிரட்டிப் பணியவைக்க முயற்சிப்பது ஏன்?

ராஜீவின் சாவுக்குப் பிறகு கடந்த ஜூன் மாதத்தில் நடநத இரண்டாவது கட்டத் தேர்தல் முடிவதற்கு முன்னரே காங்கிரசின் புதிய தலைவர் நரசிம்மராவுக்கு நம்பூதிரிபாடு ஒரு திறந்த மடல் எழுதினார். அதில் ''ராஜீவின் மரணத்திற்குப் பிறகு இந்திய அரசியல் ஒரு திருப்பு முனையை அடைந்துள்ள இவ்வேளையில், இடதுசாரிகள் குறித்த உங்கள் கட்சியின் அணுகுமுறையை மறுபரிசீலனை செய்ய வேண்டாமா? மே.வங்கம், திரிபுரா, கேரளா ஆகிய மாநிலங்களில் இடது சாரி கூட்டணி மற்றும் தேசிய முன்னணிமீது காழ்ப்புணர்ச்சியுடன் வகுக்கப்பட்டுள்ள உங்கள் கட்சியின் தேர்தல் அணுகுமுறை மாற்றப்பட வேண்டாமா? அதுவும் ஜூன் 12-ந் தேதி தேர்தலுக்கு முன்னரே இது செய்யப்பட வேண்டாமா?'' என்று பணிவுடன் கேட்டுக் கொண்டார்.

காங்கிரசு எதிர்ப்புதான் தமது கட்சியின் கொள்கை என்று நம்பியிருந்த 'மார்க்சிஸ்ட்' கட்சி அணிகள், நம்பூதிரிபாடின் இக்கடிதத்தைக் கண்டு குழம்பிப் போனார்கள். நம்பூதிரியின் பச்சையான சந்தர்ப்பவாதம் அக்கட்சிக்குள் அதிருப்தியையும் புகைச்சலையும் கிளப்பியது. ''பொதுச் செயலாளர் நம்பூதிரிபாடின் இக்கடிதம் குழப்பத்தை ஏற்படுத்திவிட்டது; இக்கடிதம் காலப் பொருத்தமற்றது'' என்று மே.வங்க முதல்வர் ஜோதிபாசு வெளிப்படையாகவே சாடினார். இதர முதலாளித்துவ நாளேடுகளில் நம்பூதிரியின் கடிதம் வெளியான போதிலும், மே.வங்க மாநில 'மார்க்சிஸ்ட்' கட்சியின் நாளேடான ''ஜனசக்தி'' இக்கடிதத்தை வெளியிடாமல் இருட்டடிப்பு செய்தது.

சுர்ஜித் - திரிபுவாதத்துக்கு புதிய தலைமை!



கேரளாவில் அனைத்து தொகுதிகளிலும் காங்கிரசும் பாரதீய ஜனதாவும் ரகசிய உடன்பாடு செய்து கொண்டதாலும், ராஜீவின் சாவுக்குப் பிறகு வீசிய அனுதாப அலையாலும், இடதுசாரி கூட்டணி தோல்வியடையும் என்று பீதியடைந்து நம்பூதிரிபாடு தன்னிச்சையாக இவ்வாறு கடிதம் எழுதியது தவறு. மேலும் தேர்தல் நேரத்தில் இடதுசாரி கூட்டணியின் நம்பகமான ஓட்டு வங்கியான பிற்பட்ட ஈழவா சமூகத்தின் தலைவர்களை ''முன்னாளில் பிரிட்டிஷ் காலனியவாதிகளுக்கும் மன்னர்களுக்கும் விசுவாசமாக அடிமைத்தனமாக செயல்பட்டனர்'' என்று தான்தோன்றித்தனமாக நம்பூதிரிபாடு பேசியது தவறு. அவரது தாறுமாறான நடவடிக்கைகளால் கேரளத்தில் மார்க்சிஸ்ட் கட்சி தோல்வியடைந்து விட்டது என்று மே.வங்க கோஷ்டி குற்றம் சாட்டுகிறது.

ஏற்கனவே 'மார்க்சிஸ்ட்' கட்சியில் நம்பூதிரிபாடு தலைமையிலான கேரள கோஷ்டி என்றும் ஜோதிபாசுவின் மே.வங்க கோஷ்டி என்றும் இரண்டு கோஷ்டிகள் முரண்பட்டு நிற்கின்றன. நம்பூதிரியின் கடிதம் மற்றும் அவரது தேர்தல் உத்தியின் தோல்வி ஆகியவற்றைக் காட்டி கேரள கோஷ்டியை ஜோதிபாசு கோஷ்டி சாடுகிறது. அதே சமயம் தொடர்ந்து நான்காவது முறையாக 'மார்க்சிஸ்டுகள்' மே.வங்கத்தில் வெற்றி பெற்றதற்கு ஜோதிபாசுவின் தேர்தல் உத்தியும் அரசியல் சாணக்கியத்தனமும் தான் காரணம் என்று மே.வங்க கோஷ்டி நியாயப்படுத்துகிறது. இதைத் தொடர்ந்து கட்சியில் ஆதிக்கம் செலுத்தும் நம்பூதிபாடு மற்றும் அவரது கேரள கோஷ்டியைத் தனிமைப்படுத்தி ஓரங்கட்ட மே.வங்க கோஷ்டி தொடர்ந்து முயற்சித்து வருகிறது. அதன் விளைவாகவே இப்போது நம்பூதிரிபாடு பொதுச் செயலாளர் பொறுப்பிலிருந்து விலக்கப்பட உள்ளார்.

— இப்படி நம்பூதிரி␣␣டுக்கு கட்டாய ஓய்வு கொடுக்கபபட்டதற்கான காரணங்களையும் ஊகங்களையும் சில ஆங்கில பத்திரிகைகள் கட்டுரையாக வெளியிட்டுள்ளன. இவற்றையும் 'மார்க்சிஸ்ட்' கட்சித்தலைமை மறுத்து செய்தி எதையும் வெளியிடவில்லை. இதன் மூலம், நம்பூதிரிபாடு பொறுப்பிலிருந்து விலக்கப்படுவதற்கு காங்கிரசுக்கு வால்பிடித்துச் சென்ற அவரது சந்தர்ப்பவாதம்தான் காரணம் என்று 'மார்க்சிஸ்ட்' கட்சித் தலைமை மறைமுகமாக குற்றம் சாட்டுகிறது. இதுதான் காரணமா அல்லது வேறு ஏதாவது காரணங்களா என்று அக்கட்சி வெளிப்படையாக எதையும் அறிவிக்கவில்லை. சுருக்கமாகச் சொன்னால் திடீர் ராணுவ ஆட்சிக் கவிழ்ப்பு நடந்ததைப் போல, திருவாளர் நம்பூதிரிபாடு வீட்டுக் கைதியாக்கப் பட்டுள்ளார்.



படிப்பகம்

www.padippakam.com



'வீட்டுக் காவலில்' 'மார்க்சிஸ்ட்' கட்சி பொதுச் செயலாளர் நம்பூதிரிபாடு.

**கா**வுத்ஸ்கி, டிராட்ஸ்கி, வியூசோஷி, டெங்சியாவோபிங், குருச்சேவ், பிரஷ்னேவ், கோர்பச்சேவ் என்று ஏராளமான திருத்தல்வாதிகளை - பாட்டாளி வர்க்க விரோதிகளை மார்க்சிய - லெனினியம் இனங்காட்டி இருக்கிறது. ஊக்கமான சித்தாந்தப் போராட்டமும் ஜனநாயக பூர்வமான விவாதங்களும்தான் இத்திருத்தல்வாதிகளின் பாதைக்கும் மார்க்சிய - லெனினிய பாதைக்குமான தெளிவான எல்லைக் கோட்டை வகுத்தளிக்க உதவியது.

கம்யூனிஸ்டு கட்சிக்குள் நிலவும் கருத்து வேறுபாடுகளை மூடி மறைக்காமல் ஆரோக்கியமாக விவாதிப்பது. இரு வேறுபாதைகளுக்கு இடையிலான வேறுபாட்டை ஜனநாயக முறையில் சித்தாந்தப் போராட்டம் நடத்தி தீர்வு காண்பது, தலைமை மட்டத்தில் சுருக்கிவிடாமல் அணிகள் - ஆதரவாளர் மட்டம் வரை இச்சித்தாந்தப் போராட்டத்தை விளக்கி அவர்களையும் ஊக்கமாகப் பங்கேற்கச் செய்வது என்கிற சரியான அமைப்புமுறை வழுவாமல் பின்பற்றப் பட்டதால்தான் இக்கம்யூனிசத் துரோகிகளை' இனங்கண்டு முறியடிக்க முடிந்தது.

ஆனால், எவ்வித சித்தாந்தப் போராட்டமும் நடத்தாமல், தற்போது நம்பூதிரிபாடு பாதைக்கும் கட்சியிலுள்ள மற்றவர்களுக்கும் என்ன வேறுபாடு? நம்பூதிரியின் வழிகாட்டுதல் தவறானது என்றால் அதற்கு மாற்றாக மற்றவர்கள் முன்வைக்கும் பாதை என்ன? - இப்படி எதையுமே தெளிவுபடுத்தாமல், கட்சி அணிகளுக்கு இக்கருத்து வேறுபாடுகளை இருட்டடிப்பு செய்துவிட்டு, கௌரவமான முறையில் நம்பூதிரிபாடுக்கு கட்டாய ஓய்வு கொடுத்து முடக்கியுள்ளனர்.

போலிக் கம்யூனிஸ்டுகளின் குருபீடமான ரஷியாவில் புதிதாக ஆட்சிக்கு வரும் ஒவ்வொரு அதிபரும், முன்னாள் அதிபர்கள் மீது நாட்டை தவறான திசையில் வழிநடத்தியதாக குற்றம் சாட்டுவதைப் போலவே, 'மார்க்சிஸ்ட்' கட்சியும் அதே பாணியில் அடியொற்றிச் செல்கிறது. சித்தாந்தப் போராட்டமோ, மாற்றுப் பாதையோ - ஒரு புடலங்காயும் கிடையாது. தலைமை - அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான பதவிப் போட்டிதான் அவர்களுக்கிடையிலான வேறுபாடு. எனவேதான் கருத்து வேறுபாடுகளை மூடி மறைத்து, அதிகாரத்துக்குப் போட்டியிடும் சிறுபான்மை மீது ஏதாவது முத்திரை குத்தி முடக்கி வைப்பதை போலிக் கம்யூனிஸ்டுகள் வழமையாகக் கொண்டுள்ளனர்.

நம்பூதிரிபாடு மட்டுமல்ல; இதற்கு முன்பு சுந்தரய்யாவும் இதேபோல உடல் நிலையைக் காரணம் காட்டி கட்டாய ஓய்வில் விரட்டப்பட்டார். எம்.பி.பதவிக்காக இந்திராவுடன் ரகசிய பேரம் நடத்தினார் என்று பி.ராமமூர்த்தி முடக்கி வைக்கப்பட்டார். அதேபோல மூப்பு காரணமாக பசவப்புன்னையா கட்சி அரசியலிலிருந்தே ஒதுக்கி வைக்கப்பட்டார். இப்படி கருத்து வேறுபாடு கொண்டவர்களை 'ஜனநாயக விரோதமான முறை'யில் முடக்கி வைப்பதை நம்பூதிரிபாடு அங்கீகரித்து ஆதரித்தே வந்துள்ளார். இத்தகைய சர்வாதிகாரப் போக்கு இப்போது வளர்த்த கடாவாக நம்பூதிரியின் மார்பிலேயே பாய்கிறது.

சித்தாந்தப் போராட்டத்தை ஊக்கமாக நடத்தாமல் கருத்து வேறுபாடுகளை இப்போலிக் கம்யூனிஸ்டுகள் மூடி மறைப்பதற்கு இன்னொரு காரணமும் இருக்கிறது. ஒருவரது சந்தர்ப்பவாதப் பாதையை மறுதளித்தால் மாற்றுப் பாதையை முன்வைக்க வேண்டும். ஆனால், எல்லோருமே சந்தர்ப்பவாதிகளாக இருக்கும்போது எப்படி மாற்றுப் பாதையை முன்வைக்க முடியும்?

இன்று காங்கிரசுக்கு வால் பிடிக்கும் நம்பூதிரியின் சந்தர்ப்பவாதப் பாதைக்கு மாற்றாக சுர்ஜித் - ஜோதிபாசு கோஷ்டி முன்வைக்கும் பாதை என்ன? நம்பூதிரியைப் போலவே காங்கிரசுக்கும் ஆளும் வர்க்க கட்சிகளுக்கும் வால் பிடித்துச் செல்வதுதான் இவர்களது கொள்கையுமாகும். தேர்தல் அறிவிக்கப் பட்டவுடனேயே ராஜீவை ஜோதிபாசு அடிக்கடி சந்தித்து தனது ஆதரவைத் தெரிவித்தார். ஒருவேளை எந்தக் கட்சியும் அறுதிப் பெரும்பான்மை பெறாவிட்டால் மத்தியில் காங்கிரஸூம் - போலிக் கம்யூனிஸ்டுகளும் கூட்டு மந்திரிசபை அமைக்கலாம் என்றும் ஜோதிபாசு பிரதமராக்கப்படுவார் என்றும் காங்கிரசுப் பத்திரிகைகளே எழுதின. இப்போது தேர்தலுக்குப் பிறகு, சிறுபான்மை காங்கிரசு அரசுக்கு இப்போலிகள் ஆதரவு தெரிவித்து, ''நாட்டுக்கு இப்போது நிலையான ஆட்சிதான் தேவை; எந்தக் கட்சியும் மக்களும் இன்னொரு தேர்தலை விரும்பவில்லை'' என்று தமது சந்தர்ப்பவாத பல்டிக்கு நியாயம் கற்பித்துள்ளனர். ''வகுப்புவாத சக்தியான பாரதீய ஜனதாதான் இன்றைய பிரதான எதிரி; மதச்சார்பற்ற சக்திகளான காங்கிரசும் இடதுசாரிகளும் இதை எதிர்த்து இணைந்து நின்று போராட வேண்டும்'' என்று 'மார்க்சிஸ்டுகள்' பாசிச காங்கிரசுக்கு முற்போக்கு முலாம் பூசுகின்றனர். காங்கிரசுக்கு விமர்சன பூர்வமான ஆதரவு, காங்கிரசில் முற்போக்கு சக்திகள் உள்ளன என்ற பெயரில் தொடர்ந்து காங்கிரசை ஆதரிப்பதுதான் போலிக் கம்யூனிஸ்டுகளின் யுத்த தந்திரக் கொள்கையாக உள்ளது. அதிலும் அதிகாரத் தரகரான சுர்ஜித், பொதுச் செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்டால் நம்பூதிரிபாடை விட திறமையாகவும் வெளிப்படையாகவும் காங்கிரசுக்கு காவடி தூக்குவார்.

இன்னும் சொல்லப்போனால் காங்கிரசு, பாரதீய ஜனதா, போலிக் கம்யூனிஸ்டுகளுக்கிடையே நாட்டைக் கவ்வியுள்ள முக்கியமான பிரச்சினைகளில் கருத்து வேறுபாடு எதுவும் கிடையாது. பஞ்சாப், அசாம், காஷ்மீர் விவகாரங்களிலும் ஐ.எம்.எப் - உலக வங்கியிடம் கடன் வாங்குவது, அந்நிய ஏகாதிபத்தியங்களின் மூலதனத்துக்கு தாராள சலுகை அளிப்பது முதலான பொருளாதார விவகாரங்களிலும் இக்கட்சிகள் ஒத்த நிலைப்பாட்டையே கொண்டுள்ளன. எனவே தேச ஒற்றுமை, பிரிவினைவாத எதிர்ப்பு, நாட்டு நலன் என்ற முகாந்திரங்களைக் காட்டி இப்போலிகள் ஆளும் வர்க்க கட்சிகளின் பின்னே அணிவகுத்துச் செல்வார்கள் என்பதில் சந்தேகமே இல்லை.

வலது கம்யூனிஸ்டுகள் திரிபுவாதிகள்; நக்சல்பாரி புரட்சியாளர்களோ தீவிரவாதிகள்; நாங்கள்தான் உண்மையான கம்யூனிஸ்டு என்று அடிக்கடி மார்தட்டிக் கொள்கிறது 'மார்க்சிஸ்ட்' கட்சி. ஆனால் அதன் 27 ஆண்டுகால நடைமுறை, அதை இன்னுமொரு வலது கம்யூனிஸ்ட் கட்சி என்றே நிரூபித்துள்ளது. காங்கிரசுக்கு காவடி தூக்க தனிக்கட்சி தொடங்கிய கம்யூனிச துரோகிகளான டாங்கேயும் கல்யாண சுந்தரமும் இன்று உயிரோடு இருந்திருந்தால், 'மார்க்சிஸ்டு'களின் சந்தர்ப்பவாதத்தைப் பார்த்து, தமது கட்சியைக் கலைத்துவிட்டு அவர்களுடன் ஐக்கியப்பட்டிருப்பார்கள்!

● மனோகரன்



படிப்பகம்

www.padippakam.com

# மரணத்துக்குப் பிறகும் போராட்டத்தைத் தொடர்ந்த தோழர் ரெங்கநாதனுக்கு வீர வணக்கம்!

இந்தியப் பொதுவுடமைக் கட்சி (மார்க்சிஸ்ட் - லெனினிஸ்ட்)யைச் சேர்ந்த புரட்சியாளரும், விவசாயிகள் விடுதலை முன்னணியின் முதுபெரும் தோழரும் அதன் திருவெண்ணெய் நல்லூர் வட்டார அமைப்பாளருமான தோழர் ரெங்கநாதன் தனது 73வது வயதில் கடந்த 4ந் தேதி மரண மடைந்தார்.

தோழர் ரெங்கநாதன் தென் ஆற்காடு மாவட்டம், திருவெண்ணெய் நல்லூர் வட்டாரம், காரப்பட்டு கிராமத்தில் வசதியுள்ள, மேல்சாதி விவசாயக் குடும்பத்தில் பிறந்தவர்; என்றாலும் இளம் வயதிலேயே கம்யூனிச இயக்கத்தில் இணைந்து, தாழ்த்தப்பட்ட மக்களுடன் இரண்டறக் கலந்து சுரண்டல், அடக்குமுறை, சாதி கொடுமைகளுக்கு எதிராக துணிந்து போராடிய வீரராக விளங்கியவர்.

1952-இல் இருந்து ஒன்றுபட்ட கம்யூனிச இயக்கத்தில் சேர்ந்து போராடிய அவர், 1969-இல் தமிழகத்தில் நக்சல்பாரிக் கட்சியின் துவக்கத்திலேயே அதனுடன் இணைத்துக் கொண்டவர். அதன் வளர்ச்சிக்கேற்ப தனது இறுதி மூச்சுவரை முன்னணி செயல் வீரராக விளங்கியவர்.



தோழர் ரெங்கநாதன்

தோழர் ரெங்கநாதன் வாழ்ந்தபோது மட்டுமல்ல, இறந்த பிறகும் சாதியக் கொடுமைகளுக்கு எதிரான போராட்டத்திற்கு உரம் ஊட்டிய சிறந்த புரட்சியாளராக ஒளி வீசுகிறார். இறந்த பிறகு தனது உடல் தாழ்த்தப்பட்டவர் காலனியில் மரியாதைக்காக வைக்கப்பட்டு, ஊர் மேல்சாதி வழக்கத்துக்கு மாறாக வீதி வழியே மேற்குப் புறமாக எடுத்துச் சென்று, தாழ்த்தப்பட்டவர்க்கென உள்ள தனி இடுகாட்டில்தான் புதைக்கப்பட வேண்டும் என உயிருடன் இருந்தபோதே தோழர் ரெங்கநாதன் கோரியிருந்தார். ஆனால் ஊர் மேல் சாதியினர் திரண்டு இறுதி ஊர்வலத்தைத் தடுத்து, தோழரது இறுதி விருப்பத்தை முறியடிக்க முயன்று பார்த்தனர். கடும் சாதி எதிர்ப்புக்கு எதிராக தோழரது வயதான துணைவியாரும் பிற குடும்பத்தினரும் துணிந்து நின்று சாதிக் கட்டுப்பாடுகளைத் தகர்த்தனர். அவரது விருப்பப்படியே எவ்வித சாதி - மதச்சடங்குகளும் இல்லாமல் மேல்சாதியினரது எதிர்ப்புக்குப் பணியாமல் அவரது உடல் தாழ்த்தப் பட்டவருக்கான தனி இடுகாட்டில் புதைக்கப்பட்டது. அது உண்மையில் சாதீய எதிர்ப்புப் போராட்டமாகவே அமைந்தது.

ஆயிரக்கணக்கான கூலி, ஏழை விவசாயிகளும் தமிழகத்தின் பல பகுதிகளில் இருந்தும் வந்திருந்த தோழமை அமைப்புப் பிரதிநிதிகளும் தியாகத் தோழருக்கு இறுதி அஞ்சலி செலுத்தினர். தோழர் ரெங்கநாதனின் வீரஞ்செறிந்த புரட்சிப்பாதையில் முன்னேறுவோம் என்று சூளுரைத்தனர்.

# அதிரையில் மதக்கலவரம் இந்துவெறியர்களின் கைவரிசை

மத நல்லிணக்கத்திற்கு எடுத்துக்காட்டாக விளங்கிவந்த அதிராம்பட்டினம், ஆர்.எஸ்.எஸ் - இந்துமுன்னணி மதவெறி கும்பலால் 25.6.91 அன்று மதக்கலவரம் வெடித்து துப்பாக்கிச் சூடு நடக்கும் அளவிற்கு உருமாறிப்போனது. ஏற்கனவே இப்பகுதியிலுள்ள செல்லியம்மன் கோவில் நிலத்தகராறு பிரச்சினை (பார்க்க: சென்ற புதிய ஜனநாயகம் இதழ்) தொடர்பாக மதவெறியைத் தூண்டி வந்தது இந்து முன்னணி கும்பல். 25.6.91 அன்று "கோயிலின் நிலத்தை ஆக்கிரமித்து விட்டார்கள். இந்துக்களே இறுதி கட்ட முடிவெடுக்க ஒன்று திரளுங்கள்" என ஆட்டோவில் பிரச்சாரம் செய்தனர். இதுதொடர்பாக அன்று பாதுகாப்பிற்கென 10 போலீசு வேறு அதிரையை சுற்றிவந்தனர்.

இந்நிலையில் மதுக்கூரைச் சேர்ந்த வட்டிக்காரர் ராமச்சந்திரன் செட்டியார் என்பவர் அதிரையில் வட்டி வசூலிக்க வந்தார். மேலத்தெருவைச் சேர்ந்த வகாப் என்பவரிம் வட்டி வசூலித்தபோது தகராறு ஏற்பட்டு செட்டியார் ஆட்கள் வகாப் குடும்பத்தினரை தாக்கினர். அக்கம்பக்கத்தில் உள்ளவர்கள் கூடி தடுத்து பிடித்து செட்டியாரையும் அவரது ஆட்களையும் அங்குள்ள சங்க அலுவலகத்தில் வைத்தனர். தப்பிச் சென்ற மற்றவர்கள் ஆட்டோ பிரச்சாரம் செய்து கொண்டிருந்த இந்து முன்னணியினரிடம் தகவல் கூறினர். மதவெறியர்கள் உடன் அதே ஆட்டோவில் "முஸ்லீம்கள் இந்துக்களை கட்டி வைத்து தாக்கி, ரத்தவெள்ளத்தில் மிதக்க வைத்துள்ளனர்; அனைத்து இந்துக்களும் திரண்டு வாருங்கள்" என விஷமப் பிரச்சாரத்தை செய்தனர். கரையூரில் 40, 50 பேரை திரட்டிக் கொண்டு மார்க்கெட்டை மூடச் சொல்லி தாக்கினர். முஸ்லீம்களையும் அவர்கள் வீடுகளையும் தாக்க முற்பட்டனர். எனவே முஸ்லீம் தெருவைச் சேர்ந்தவர்கள் கூடி அவர்களை துரத்தினர். ரோந்து சுற்றி வந்த போலீசு தலையிட்டு முன்னறிவிப்பின்றி திடீரென துப்பாக்கிச்சூடு நடத்தியது. இதில் கடைக்கு புத்தகம் வாங்கப்போன சிறுவன் நூருல்ஹாசன் கொல்லப்பட்டான்.

இதற்குப்பின் ஆத்திரமடைந்த முஸ்லீம் இளைஞர்கள் சில கடைகளைத் தாக்கினர். மதியம் டி.ஐ.ஜி. சரவணபெருமாள் வந்ததும் தைரியம் கொண்ட இந்துமுன்னணி கும்பல் மதவேளிற்காடு, வண்டிப்பேட்டை ஆகிய முஸ்லீம் குடியிருப்பு பகுதியில் நுழைந்து தாக்கினர். பள்ளிவாசல்களுக்குள் நுழைந்தும் தாக்குதல் நடத்தினர். முஸ்லீம்களையும் அவர்களது உடமைகளையும் சேதப்படுத்தினர். முஸ்லிம்களின் புனித நூலான குரானை கிழித்து அதன்மீது சிறுநீர் கழித்தும் கோரத் தாண்டவம் ஆடியது இந்து முன்னணி கும்பல். வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த போலீசு பின்னர் இருதரப்பிலும் 73 பேரை கைது செய்தது.

மறுநாள் மாவட்ட கலெக்டர் தலைமையில் இரு தரப்பினரையும் கூட்டி பேசினர். ஆனால் ஒத்தக் கருத்தைக் கொண்டு வந்து அமைதிக்குழு ஏற்படுத்த முடியவில்லை. பின்னர் 5 நாட்களுக்கு பகுதியெங்கும் போலீசு குவிக்கப்பட்டிருந்தது. தற்போது அமைதி ஏற்பட்டிருந்தாலும் இரு மதத்தினரிடையேயும் பகைமை நீறு பூத்த நெருப்பாக உள்ளது.

இந்து வெறி கும்பல் இருக்கும் பகுதியிலெல்லாம் இதுவே நடைமுறையாக இருக்கிறது. சாதாரண பிரச்சினையைக்கூட இப்படி பூதாகரப்படுத்தி உழைக்கும் மக்களை மத அடிப்படையில் மோதவிட்டு பலரை பலியாக்கி ஆதாயமடைய வெறிகொண்டு அலைகிறது இக்கும்பல். எனவே உழைக்கும் மக்கள் மதவேறுபாட்டை தூக்கியெறிந்து ஒன்றுபட்டு தற்காப்பு - பாதுகாப்பு கமிட்டி அமைக்க வேண்டும். மதவெறியர்களை இனங்கண்டு தனிமைப்படுத்தி அடித்து துரத்த வேண்டும்.

— தகவல்: வி.வி.மு.
அதிராம்பட்டினம்.



படிப்பகம்

www.padippakam.com

# அரசு ஆலைகள் தனியாருக்கு ஏலம்!



உத்திரப்பிரதேசம் சிமிண்ட் கார்ப்பரேசனுக்குச் சொந்தமான டாலா, சர்க், சுனார் ஆகிய பகுதிகளில் உள்ள மூன்று சிமிண்ட் ஆலைகள் கடந்த மே மாதம் தனியாருக்கு (DIL - டால்மியா இண்டஸ்ட்ரி லிமிடெட்) விற்கப்பட்டன. ஆலைகள் 155 கோடி ரூபாய் நட்டத்திலும் வருடம் 30 கோடி ரூபாய் நட்டத்தை அதிகரித்துக் கொண்டு ஓடும் என எதிர்பார்க்கப் பட்டதாலும் தனியாருக்கு விற்கப்பட்டது என காரணம் கூறியது அரசு. ஆலையை வாங்கிய டால்மியா நிர்வாகம், 6000 அரசு தொழிலாளர்களை ''உபரி'' என வெளியேற்ற முயற்சித்தது. இதற்கெதிராக தொழிலாளர்கள் கிளர்ந்தெழுந்து போராடினார்கள். டாலா பகுதி ஆலைவாயில் முன்பு தொழிலாளர்கள் ஆர்ப்பாட்ட கூட்டம் நடத்திய பொழுது அரசு போலீசை ஏவி துப்பாக்கிச் சூடு நடத்தி 12 பேரை அநியாயமாக கொன்றது. 50 தொழிலாளர்களுக்கு மேல் படுகாயமுன்றனர்.

அரியலூர் சிமிண்ட் தொழிற்சாலை, விருத்தாச்சலம் பீங்கான் தொழிற்சாலை, மாயனூர் ஆஸ்பெஸ்டாஸ் பைப்ஸ் நிறுவனம், ஆலங்குளம் ஆஸ்பெஸ்டாஸ் ஷீட் மற்றும் சிமிண்ட் நிறுவனம் ஆகிய அரசுத்துறை நிறுவனங்கள் தனியாருக்கு விற்பதற்கான அறிவிப்பை 2.5.91 அன்று தமிழக அரசு வெளியிட்டது. தமிழக அரசும் ஆலைகள் நட்டத்தில் ஓடுவதையே காரணம் கூறியது. இதனால் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் பாதிக்கப்பட இருப்பதால் அனைத்து ஆலை தொழிற்சங்கங்களும் அரசு உத்தரவுக்கு எதிராக தடை உத்தரவு வாங்க தீர்மானித்தன. இதற்கெதிராக பல வழிகளில் போராடவும் முடிவெடுத்தன. ஆனால் அரசு எதையும் சட்டை செய்யாமல் தனியாருக்கு விற்பதை மும்முரமாக நடைமுறைப்படுத்தி வருகிறது. இதில் மாயனூர் ஆஸ்பெஸ்டாஸ் ஆலையை வாங்க ஒப்பந்தகாரர்கள் 30.6.91 அன்று ஆலையை சுற்றிப் பார்த்தும் விட்டார்கள். நிர்வாகமோ, ''ஆலையை தனியாருக்கு விற்பது அல்லது தனியாருடன் இணைந்த கூட்டுத்துறை நிறுவனமாக்குவது என்பது உறுதியாகி விட்டது'' என மிரட்டி வருகிறது.

இவை ஒரு சில உதாரணங்கள்தான். ஏறக்குறைய அரசின் அனைத்து நிறுவனங்களும் இந்நிலையிலேயே உள்ளன. இரும்பு, எஃகு, நிலக்கரி, ரசாயன உரம், மருந்து, சிமிண்ட், மின்னணு, தொலைபேசி, தொலைகாட்சி, புகைப்படச் சுருள், மீன், முட்டை, பால், ரொட்டி... என அனைத்தையும் அரசுத்துறை உற்பத்தி செய்து வருகிறது. இந்நிறுவனங்கள் உற்பத்திக் குறைவு, விற்பனை தேக்கம், இயந்திர கோளாறு, கச்சாப்பொருள் இன்மை, மூலதன பற்றாக்குறை, பின்தங்கிய தொழில்நுட்பம், நிர்வாகச் சீர்குலைவு, விலை சரிவு, வரியேற்றம் என ஏதாவது ஒன்றால் பீடிக்கப்பட்டு நட்டத்திலும் நட்டத்தை நோக்கியும் இயங்குகின்றன. இவையும் விரைவில் இழுத்து மூடப்படும் அல்லது தனியாருக்கு தாரை வார்க்கப்படும்!

ஏற்கனவே என்.டி.சி ஆலைகள் மூடப்பட்டு ஏராளமான தொழிலாளர்கள் வீதியில் வீசப்பட்டார்கள். நிலக்கரி சுரங்கங்களோ ஏறக்குறைய மூடு விழாவை நெருங்கிவிட்டன. பொக்காரோ இரும்பு எஃகு ஆலை, பிலாய் இரும்பாலை என பல இரும்பு, எஃகு ஆலைகள் நட்டத்தில் ஓடுகின்றன. கல்பாக்கம் அணுஉலை இயந்திரக் கோளாறில் முடங்கி முடங்கி ஓடுகிறது. கழகங்களின் ஆட்சியில் தெருவோரங்களில் முளைத்த மலிவு விலை மீன், முட்டை, பால், கறி கடைகள் விலாசமில்லாமல் போய்விட்டன.

அரசுத்துறை நிறுவனங்கள் 'முதல்' இல்லையென மீண்டும் மக்களிடமே பங்கு பத்திரங்கள் மூலம் நிதியை பெறும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன. தற்போது 15 பொதுத்துறை நிறுவனங்கள் 40 சதவிகிதம் 'முதலை' அதாவது 15,550 கோடி ரூபாயை பொது மக்களிடமிருந்து பங்கு பத்திரங்கள் மூலம் பெற்று இயங்கி வருகின்றன. ஏற்கனவே பல அரசு நிறுவனங்கள் தனியார் முதலாளியுடன் இணைந்து கூட்டுத்துறை நிறுவனமாக வேறு செயல்படுகின்றன. இந்நிறுவனங்கள் படிப்படியாக தனியார் கைக்கு மாறியும் விடுகின்றன. இதுவன்றி இன்று அரசுத்துறை நிறுவனங்கள் பங்கு மார்க்கெட்டில் தங்கள் பங்குகளை தனியாருக்கு விற்கவும் தொடங்கிவிட்டன.

சுருக்கமாகச் சொல்லப்போனால் அரசின் ஏகபோக உற்பத்தி சீர்குலைந்து வருகிறது; நிலைகுலைந்து போயுள்ளது. ஏறக்குறைய 70 சதவிகித பொதுத்துறை நிறுவனங்கள் அரசின் வரிச் சலுகை, கடன்ரத்து, கடன் கால நீட்டிப்பு, இலவச உதவி, இலவச சர்வீஸ், குறிப்பாக மானியங்கள் மூலமே உயிர் வாழ்கின்றன. இவையில்லாவிட்டால் அரசின் உற்பத்தி பாதி முடங்கிவிடும்.

அரசு உற்பத்தி செய்யும் அதே பொருளை தயாரிக்கும் சில தனியார் கம்பெனிகள் லாபம் ஈட்டி வருகின்றன. இதன் முதலாளிகள் மேலும் மேலும் கொழுத்துக் கொண்டு போகிறார்கள். உதாரணத்திற்கு சிமிண்ட் கம்பெனி முதலாளிகள் அண்மையில் பம்பாயில் ஒன்றுகூடி சிமிண்ட் மூட்டைகள் இருப்பு இருக்கும் போதே விலையேற்றிக் கொண்டதோடு, பல ஆயிரக்கணக்கான கோடி ரூபாய்க்கான இந்திய சந்தையை தம்மிடையே பங்கிட்டும் கொண்டனர். ஆனால் அரசு சிமிண்ட் நிறுவனங்கள் நட்டமடைந்து தனியாருக்கு விற்கப்படுகிறதே ஏன்? எப்படி நிகழ்ந்தது இது? ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் உழைத்துக் குவித்த செல்வங்கள் எங்கே? அதன் வருமானம் என்ன ஆயிற்று? அரசின் உற்பத்தி

அரசு சிமெண்ட் ஆலை டால்மியாவுக்கு! தட்டிக் கேட்ட தொழிலாளர்களுக்கு துப்பாக்கிச்சூடு!





படிப்பகம்

www.padippakam.com

## மாயனூர் - டான்செம் நிறுவனம்:

# நிர்வாகத்தின் பாதந்தாங்கும் தொழிற்சங்க துரோகிகள்

மாயனூர் - 'டான்செம்' நிறுவனம், தொழிலாளர்களுக்குரிய சம்பள உயர்வு ஒப்ந்தம் 1990 மார்ச் மாதத்துடன் முடிவடைந்தும் புதிய ஒப்பந்தம் போடாமல் இழுத்தடித்து வந்தது பற்றியும், ஆலைக்கு வாங்கும் பொருள்களிலெல்லாம் கமிஷன், தங்கள் பினாமி பெயரில் 19 வகையான காண்டிராக்ட் என அதிகாரிகள் அடித்துவரும் கொள்ளையைப் பற்றியும் ஏற்கனவே புதிய ஜனநாயகத்தில் எழுதியுள்ளோம்.

ஆலங்குளம் 'ஆஸ்பெஸ்டாஸ் ஷீட் கம்பெனி'யிலும் இதேபோல் தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வு ஒப்பந்தம் போடப்படாமல் இருந்தது. இங்குள்ள தொழிலாளர்கள் இதற்கெதிராக போராடி 250 ரூபாய் வரையிலான புதிய சம்பள உயர்வு ஒப்பந்தம் போட்டுள்ளார்கள். இதுவரை, ஆலங்குளம் கம்பெனியில் ஒப்பந்தம் போடப்பட்டதும், அதை வைத்து இங்கு ஒப்பந்தம் போட்டுத் தருகிறோம் என சாக்கு கூறி வந்தது மாயனூர் நிர்வாகம். கடந்த மாதம் 8ம் தேதி தொழிற்சங்கங்களுடன் ஒப்பந்தமும் போட்டது. ஆனால், ஆலங்குளம் ஆலையில் கொடுத்த 250 ரூபாயும் அல்லாமல் 160 ரூபாய் வரையே அனுமதித்து ஒப்பந்தம் போட்டுள்ளது நிர்வாகம். இதுவல்லாமல் கொடுக்க வேண்டிய 'அரியர்ஸ்' தொகையிலும் 750 ரூபாயே கொடுத்துள்ளது. தொழிற்சங்கங்கள் அனைத்தும் இத்துரோக ஒப்பந்தத்தில் வாயே திறக்காமல் கையெழுத்து போட்டுள்ளன.

மேலும் 1987 ஆம் ஆண்டு தொழிலாளர்கள் சட்டபூர்வமாக வேலை நிறுத்தம் செய்தபோதும் சம்பளம் மற்றும் சம்பள உயர்வு பிடித்தம் செய்து பழிவாங்கியது நிர்வாகம். அனைத்து தொழிலாளர்களுக்கும் 8 நாள் சம்பளத்தையும் தி.மு.க. தொழிற்சங்க தொழிலாளர்களுக்கு ஒன்றரை வருட சம்பள உயர்வையும், போலி கம்யூனிஸ்டு டி.கே.ரங்கராஜ் தலைமையிலான பொதுத் தொழிற்சங்கத் தொழிலாளர்களுக்கு ஒரு வருட சம்பள உயர்வையும் பிடித்துக் கொண்டது. நிர்வாகத்துடன் ஒப்பந்தம் போடப்போன தொழிற்சங்கத் தலைமைகள் இவற்றைப் பற்றியும் எதுவும் பேசாமல் வந்துள்ளன. இதில் அ.தி.மு.க. தொழிற்சங்கம் மட்டும் (கருங்காலி வேலை செய்து வருவதால்) நிர்வாகத்துடன் பேரம் பேசி தமது தொழிலாளர்களுக்கு ஒரு வருட சம்பள உயர்வை பெற்றதுதான் பச்சை துரோகம். பொது சங்கமும் சரி, ஸ்டாப் அசோசியேசனும் சரி தத்தம் பாணியில் நிர்வாகத்திற்கு விசுவாசியாக செயல்பட்டு தொழிலாளர்களுக்கு துரோகமிழைக்கிறார்கள்.

கூடவே நிர்வாகமும் தொழிலாளர்களிடையே கருங்காலிகளை உருவாக்குவதையும் அவர்களுக்கு பதவி உயர்வு மற்றும் பிற சலுகைகள் கொடுப்பதையும் தொடர்ந்து நடைமுறைப்படுத்துகிறது. அண்மையில் கூட ராமதுரை என்கிற கருங்காலியை கண்துடைப்பு நேர்முகத் தேர்வு எல்லாம் நடத்தி காலியாயிருந்த 'ஆப்ரேட்டர்' வேலையில் அமர்த்த சட்ட விரோதமாக முயற்சிக்கிறது.

ஆக... இழப்பதற்கு ஏதுமற்ற தொழிலாளர்களுக்கு எஞ்சியிருக்கும் பழியும், துரோகமும், அவமானமும் மட்டும் எதற்கு? தூக்கியெறிந்துவிட்டு வாருங்கள்; இழந்த உரிமையை மீட்டெடுப்போம்! இன்று ஆலை தனியாருக்கு தாரை வார்க்கப்படும் என்கிற இடி வேறு தொழிலாளர்கள் தலையில் விழுந்துள்ளது. இனியும் தாமதிக்காமல் புரட்சிகர தொழிற்சங்கத்தை கட்டியமைப்போம்! போராட்டத்தை முன்னெடுப்போம்!

— புதிய ஜனநாயக வாசகர் வட்டம், மாயனூர்.

துறை நிலைகுலைந்து போவதற்கு யார் காரணம்?

அரசுத்துறை நிறுவனங்களின் பெரும் பகுதி வருமானம், 'வெள்ளை யானை' எனும் அதிகார வர்க்கத்தின் கொள்ளை வாய்க்கு இரையாகின்றன.

- அதிகார வர்க்கத்தின் கொள்ளையில் முக்கியமானது காண்டிராக்ட் முறை. பெரிய கனரக உற்பத்தி நிறுவனம் முதல் சோப்பு -ரொட்டி முதலியவை தயாரிக்கும் சிறிய கூட்டுறவு நிறுவனம் வரை காண்டிராக்ட் முறை கையாளப்படுகிறது. சப் காண்டிராக்ட், ஜாப் காண்டிராக்ட், லேபர் காண்டிராக்ட் என பல பெயரில் சிறிய சிறிய வேலைகளுக்கும் காண்டிராக்ட் விட்டு கொள்ளையடிக்கிறார்கள். காண்டிராக்ட் பெரும்பாலும் அதிகாரிகளின் உறவினர்கள், ஆளுங்கட்சிக் காரர்கள் அல்லது அவர்களது பினாமிகள் பெயரில்தான் இருக்கும்.
- கனரக உற்பத்தி நிறுவனங்கள் தமக்கு தேவையான உதிரிபாகங்களை - உதிரி வேலைகளை பல கிளை நிறுவனங்கள் (Ancillary Unit) மூலம் செய்கின்றன. இத்தகைய நிறுவனங்களை அனுமதிப்பது, பொய்கணக்கு எழுதுவது, பினாமி பெயரில் நடத்துவது போன்றவை மூலம் ஏராளமாக கொள்ளையடிக்கிறது இக்கும்பல்.
- உற்பத்திக்கான கச்சாப்பொருள் இறக்குமதி, உற்பத்தியான பொருள் ஏற்றுமதிக்காக அந்நிய - பன்னாட்டு நிறுவனங்களுடன் செய்துகொள்ளும் ஒப்பந்தந்தத்தில் பேரம் நடத்தி கமிஷன் பெற்று கோடிக்கணக்கில் சுருட்டுகிறது இக்கும்பல்.
- புதிய ஆலை கட்டுமானப் பணி, விரிவாக்கப்பணி மூலம் தனியார் நிறுவனங்களுடன் கூட்டு வைத்தும் ஏராளமாக கொள்ளையடிக்கிறார்கள் அதிகாரிகள்.
- இயந்திரங்களை, உதிரிபாகங்களை வாங்குவது அல்லது பழுதுபார்ப்பதில் தரகு முதலாளிகளுடன் சேர்ந்து கொள்ளையடிக்கிறார்கள்.
- இதுவன்றி விற்பனை, விநியோக ரகசியங்களை கடத்துவது, வேலைக்கு ஆள் எடுப்பது, பதவி உயர்வு கொடுப்பது, சலுகைகள், முன்னுரிமைகளுக்காகவும் கமிஷன், லஞ்சம் வாங்கித் தின்கிறது!
- தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் பாதுகாப்பு பொருள்கள், சீருடைகளையும் கூட சுருட்டிக் கொள்கிறது அதிகார வர்க்கம்.

அடுத்து ஆளுங்கட்சிகள்! ஆட்சியைப் பிடிக்கும் கட்சிகள் அனைத்தும் அதிகாரிகளுடன் சேர்ந்து கூட்டு கொள்ளையடிக்கின்றன. காண்டிராக்ட் எடுப்பது மூலமும், ஆர்டர் வேலை, பதவிஉயர்வு முதலியவற்றை சிபாரிசு செய்து வாங்கித் தருவதன் மூலமும் அதிகாரிகளுடன் சேர்ந்து கொள்ளையடிக்கிறார்கள். அதிகாரிகளின் ஊழலுக்கு வசதியாகவும், தரகு முதலாளிகளின், நிலப்பிரபுக்களின் நலன்களுக்கேற்பவும் சட்டங்களை நிறைவேற்றித் தந்தும் பேரம் பேசி சுருட்டுகிறார்கள் அல்லது சலுகைகளை - வசதிகளை பெறுகின்றார்கள். இதன் மூலம் பொதுத் துறை நிறுவனங்களை கொள்ளையடிக்க தரகு முதலாளிகளுக்கு வழிவகை செய்து தருகிறார்கள். அரசின் கனரக உற்பத்தி பெரும்பாலும் தரகு முதலாளிகளின் நலன்களுக்கே பயன்படுகின்றன.

தேவையற்ற உற்பத்தியிலேயே மூலதனத்தைக் மீண்டும் மீண்டும் கொட்டுவது, அடிப்படை உற்பத்தியைப் புறக்கணிப்பது, ஆயுதங்கள் வாங்குவதற்கு கணிசமாக பணம் ஒதுக்குவது போன்ற ஆளுங்கட்சிகளின் உருப்படியற்ற திட்டங்களும் அரசுத் துறை நிறுவனங்களின் சீர்குலைவுக்கு ஒரு காரணம். இதுவன்றி அதிகாரிகளின் அலட்சியப்போக்கு, அரசு செலவில் ஆடம்பர - உல்லாச வாழ்க்கை, நிறுவனத்தின் சொத்தை (வாகனம், பொருள், ஆள், முதலியவை) சொந்த நிகழ்ச்சிக்கும், கேளிக்கைக்கும், ஊர்சுற்றுவதற்கும் பயன்படுத்துவது போன்ற உதாரிதனத்தாலும் அரசின் பணம் கணிசமான அளவு விரயமாகிறது.

அரசுத்துறையின் நிலைகுலைவிற்கு இவை மட்டுமே காரணமல்ல; இதன் உற்பத்திக்கு தேவையான கச்சாப்பொருள் -தொழில் நுட்பம் - மூலதனத்துக்கும் அந்நிய ஏகாதிபத்தியங்களை சார்ந்திருப்பதும் ஒரு காரணம். ஏகாதிபத்தியங்கள் இம்மூன்றிற்கும் கை விரித்து விட்டால் இங்கு உற்பத்தி நின்று போவதையும் காணலாம். கல்

- என்.டி.சி.க்கு மூடுவிழா!
- நிலக்கரி சுரங்கங்களில் ஆட்குறைப்பு!
- 20 லட்சம் தொழிலாளர் நிலை என்ன?



படிப்பகம்

www.padippakam.com

பாக்கம் அணு உலை இதற்கு சான்று.

— இவற்றில் பலவற்றை அதிகார வர்க்கமும், ஆளுங்கட்சியினருமே ஒத்துக் கொள்கிறார்கள். அதிகாரப் போட்டி, பதவி போட்டியின் போது இவற்றை துருப்புச்சீட்டாகவும் பயன்படுத்திக் கொள்கிறார்கள். ஆனால் முந்தைய அதிகாரியையோ ஆளுங்கட்சியையோ குற்றம் சொல்லி தங்களை ஒழுக்கசீலனாக காட்ட முயல்கிறார்கள். நிர்வாக சீர்திருத்தம், ஆட்களை மாற்றுவது, திறமையானவர் - பொறுப்பானவர்களைப் பொருத்துவது, போலி சோசலிச - வளர்ச்சித் திட்டங்கள் போன்றவற்றையே இப்பிரச்சினைக்கு தீர்வாக வைக்கிறார்கள். ஆனால், கிராமப்புற கூட்டுறவுத்துறை சிறிய தொழிற்சாலைகள் - கைத்தொழிற்கூடங்கள் மூலமே சாதாரண மக்களும் கூட அரசுத்துறை என்பது இக்கும்பலின் கொள்ளை கூடாரம்தான் என்பதை உணர்ந்திருக்கிறார்கள்.

ஆட்சியாளர்கள் பஸ், வங்கி, மீன், முட்டை, பால், கறி, முதலியவற்றை அரசுடமையாகவும், அரசு மலிவு விலை கடைகளாகவும் மாற்றிய பொழுது ''முற்போக்கு'' என வரவேற்றார்கள், போலி கம்யூனிஸ்டுகள். ''இது சோசலிசத்திற்கான வளர்ச்சிப்பாதை'' எனக் கூறி தனியார் துறையை அரசுடமையாக்கக் கோரி போராட்டமும் நடத்தினர். இன்று அரசுத்துறையே தனியாருக்கு தாரை வார்ப்பதைப் பார்த்து என்ன சொல்வது என்று தெரியாமல் முழிக்கிறார்கள்.

ஆனால் உண்மை என்ன? அரசுத்துறையும் ஒருவகை முதலாளித்துவமே. அதாவது அதிகாரவர்க்க ஏகபோக முதலாளித்துவமே! தனியார் துறையிலும் அரசுத்துறையிலும் தொழிலாளர்கள் மீதான சுரண்டலும், அடிமை விலங்கும், அடக்குமுறையும் நீடிக்கவே செய்கின்றன. இரண்டிலும் தொழிலாளர் விரோத நலன்தான் அடங்கியுள்ளது.

தனியாருக்கு தாரைவார்ப்பதன் மூலம் தொழிலாளர்கள் மீதான தனது பொறுப்பை அரசு தட்டிக்கழிக்கிறது. காண்டிராக்ட் தொழிலாளர் மட்டுமல்லாமல் நிரந்தர மற்றும் பயிற்சி தொழிலாளர் உட்பட எவரது வேலைக்கும் அரசு உத்திரவாதம் தருவதில்லை. அவர்களது சம்பள பாக்கி, சம்பள உயர்வு பிடித்தம், பிராவிடண்ட் பண்ட் முதலான எதற்கும் தான் பொறுப்பில்லாதவாறு கைகழுவுகிறது.

அரசு ஆலையை வாங்கும் தனியார் முதலாளியோ தேவைக்கதிகமான ஆள் என எண்ணற்ற தொழிலாளர்களை வீதியில் வீசுகிறான். குறைந்த தொழிலாளர்களை வைத்து வேலைப்பளுவைச் சுமத்தி, போனஸ், சம்பள உயர்வு, சங்கம் தொடங்குவது போன்ற அனைத்து உரிமைகளையும் சலுகைகளையும் பறிக்கிறான். வீதியில் வீசப்பட்ட தொழிலாளர்கள் போராடினால் துப்பாக்கிச் சூடு நடத்தத்தான் அரசு ஓடிவருகிறதே ஒழிய, நிரந்தர தொழிலாளர்களது வேலை பறிபோயிருந்தாலும் அதற்கு கவலையில்லை. அரசுத்துறை தனியார் மயமாக்குவது என்பது தொழிலாளர் வாழ்க்கைக்கே குழிபறிப்பதால் அவற்றை நாம் எதிர்க்க வேண்டும். போராடும் தொழிலாளருக்கு கைகொடுக்கவும் வேண்டும்.

● மணி

# ''முஸ்லீம் பிணம் இந்து கோயில் வழியே செல்லக்கூடாது''

# இந்து வெறியர்களின் அட்டகாசம்!

சாதிக் கலவரம் நடந்து பல உயிர்களைப் பலிகொண்ட ஊர் தேவாரம். சாதிவெறியர்கள் மட்டுமல்ல; இந்துமத வெறியர்களுக்கும் இங்கு பஞ்சமில்லை! அண்மையில் நடந்த இச்சம்பவம் இந்து மதவெறியர்கள் மற்றும் போலீசின் அக்கிரமத்திற்கு சாட்சியமளிக்கிறது.

தேவாரத்தில் நூறு குடும்பத்தினரே வசிக்கும் சிறுபான்மை முஸ்லீம்களில் இமாம் மாகான் என்பவரின் மனைவி பூமா என்பவர் 25.6.91 அன்று காலமானார். வழக்கமாக சுடுகாட்டுக்குச் செல்லும் ரெங்கநாதன் கோவில் தெருவழியே இவரது சடலமும் முஸ்லீம் மக்களால் எடுத்துச் செல்லப்பட்டது. அப்பொழுது போலீசு கும்பல் இடைமறித்து ''ரெங்கநாதன் கோவில் ஒரு சொர்க்க வாசல்; இதன் வழியாக முஸ்லீம்கள் பிணத்தைக் கொண்டு செல்லக் கூடாது என்று இந்துக்கள் கூறுகிறார்கள்'' என தடுத்து நிறுத்தியது. முஸ்லீம்கள் எவ்வளவோ எடுத்துக் கூறியும் கெஞ்சியும் கூட அனுமதிக்க மறுத்தது. எனவே பிணத்தை அங்கேயே வைத்துவிட்டு முஸ்லீம்கள் ஊருக்குத் திரும்பினர்.

ஜமீன்தார் தங்கபாண்டியன் மற்றும் ஆர்.எஸ்.எஸ். கும்பல் கொடுத்த தூண்டுதலின் பேரிலேயே போலீசு வந்து இவ்வாறு அடாவடித்தனமாக நடந்து கொண்டது. தங்கபாண்டியன் ஒரு இந்து வெறியன் மட்டுமல்ல; ஆதிக்க வெறியனும் கூட. தன்னை சந்திக்க வருபவர்களையெல்லாம் அடிமை போல் நடத்துவான். இவனை சாமி என்றுதான் கூப்பிட வேண்டும்! இவனை சட்டை செய்யாமல் முஸ்லீம் மக்கள் இருந்ததனால் அவர்களை தாக்க - பழிவாங்க தருணம் பார்த்துக் கொண்டிருந்தான். இப்பொழுது முஸ்லீம் பிணம் இந்து கோவில் வழியே செல்வதை பிரச்சினையாகக் கிளப்பி போலீசு துணையோடு இந்து மதவெறியை கக்கினான்.

இப்பகுதியில் செயல்பட்டு வரும் விவசாயிகள் விடுதலை முன்னணி இப்பிரச்சினையில் தலையிட்டது. பாதிக்கப்பட்ட மக்களை சந்தித்து பிணத்தோடு பஸ் மறியல் செய்ய அழைப்பு விடுக்கவே அவர்கள் ஏற்றுக்கொண்டு முன்வந்தனர். மேலும் சர்வகட்சியினரையும் ஈடுபடுத்த முயன்ற போதிலும், பாட்டாளி மக்கள் கட்சியினரை மட்டுமே சந்தித்து பேச வாய்ப்புக் கிட்டியது. பா.ம.க.வினர் கூட்டு நடவடிக்கைக்கு ஒத்துக் கொண்டதன் பேரில் இரு அமைப்பின் சார்பாக பஸ் மறியல் அறிவிப்பு சுவரொட்டி தயாரித்து ஒட்டப்பட்டது. இதற்கிடையில் தி.மு.க.வைத் தவிர மற்ற கட்சியினர் பிரச்சினையில் தலையிட்டனர். இதில் 'மார்க்சிஸ்டு' கட்சியினரைத் தவிர ஏனையவர்கள் போலீசுக்கும் இந்து வெறியர்களும் வக்காலத்து வாங்கி பேசினர். குறிப்பாக மாயாண்டி (அ.தி.மு.க.), ராசாங்கம் (இ.காங்.) போன்றவர்கள் தங்கபாண்டியனின் எடுபிடிகள் என தாமே நிரூபித்தனர்.

பேருந்து நிலையத்தில் வி.வி.மு. தோழர் பாக்யராஜை சுவரொட்டி ஒட்டிக் கொண்டிருந்தபொழுது போலீசு கைது செய்தது. தோழரின் வேட்டி சட்டையை கழற்றி கிரிமினல் கைதியைப் போல் லாக்கப்பில் அடைத்தது. அதன்பின் எஸ்.ஐ. நடராஜன் தேவாரத்தில் பெரிய கலவரம் நடக்கப் போவதாக போலீசு உயரதிகாரிகளுக்கு தகவல் கொடுத்தார். டி.ஐ.ஜி.கோபால கிருஷ்ணன், எஸ்.பி.ராஜேந்திரன் ஆகியோர் தலைமையில் 600க்கும் மேற்பட்ட போலீசு பட்டாளம் வந்திறங்கியது. உண்மையில் அமைதியாக இருந்த ஊரை கலக்கி மக்களை பீதிக்குள்ளாக்கியது போலீசுதான்.

இரவு எட்டு மணிக்கு பேச்சுவார்த்தை என்ற பெயரில் முஸ்லீம்களை அழைத்து (ஒப்புக்கு ஆர்.எஸ்.எஸ்.காரர்களையும் அழைத்து) வைத்து மிரட்டினார்கள் உயர் போலீசு அதிகாரிகள். ''நீங்கள் சொல்வது என்னதான் நியாயம் என்றாலும் நாங்கள் பெரும்பான்மையாக உள்ள இந்துக்கள் பக்கம்தான் பேசமுடியும்'' என திமிரோடு பேசியது போலீசு. ஆயுதமேந்திய போலீசு மத்தியில் முஸ்லீம்களை பலவாறாக மிரட்டி பணியவைத்தது. பிணத்தை வேறு வழியே எடுத்துச் செல்வதற்குரிய ஒப்புதலை எழுதி வாங்கிக் கொண்டது. வேறு வழியில்லாமல் முஸ்லீம்கள் அன்று இரவு 11 மணியளவிலும் பிணத்தை எடுத்துக் கொண்டு போய் அடக்கம் செய்தனர்.

இதற்குப் பின்னும் கைதுசெய்த வி.வி.மு. தோழரை விடுவிக்காததால் பிற தோழர்கள் சென்று கேட்டனர். போலீசு விடுவிக்க மறுத்ததோடு, கேஸ் போடப் போவதாகவும் நாளை வந்து கோர்ட்டில் எடுத்துக் கொள்ளும்படியும் கூறியது. அன்று இரவே தோழரை விடுதலை செய்யக் கோரியும், போலீசின் அடக்குமுறையை கண்டித்தும், போலீசு இந்துமத வெறியர்களுக்கு சாதகமாக செயல்பட்டதை அம்பலப்படுத்தியும் சுவரொட்டி ஒட்டப்பட்டது.

மறுநாள் தோழர் பாக்யராஜை கோர்ட்டுக்கு கொண்டு செல்லாமல் வைத்திருந்ததால், பிற தோழர்கள் மீண்டும் சென்று கேட்டனர். முதலில் மறுதது பின்னர் சிறிது நேரம் கழித்து தோழரை போலீசு தாமாகவே விடுவித்துவிட்டது. ஆனால், அதற்குப் பின் போலீசு கும்பல் வி.வி.மு. சுவரொட்டியை எல்லாம் தேடி கிழித்துப் போட்டது குறிப்பிடத்தக்கது.

தகவல்: வி.வி.மு. உத்தமபாளையம்.

ஆசிரியரும் வெளியிடுபவரும்: இரா.சண்முகராசு, 21, பாலாஜிசிங் தெரு, சைதாப்பேட்டை, சென்னை - 600 015.
அச்சிடுபவர் : நீட் பிரிண்டர்ஸ், 2 ஔலியா சாகிப் முதல் சந்து, எல்லிஸ் சாலை, சென்னை - 600 002.

படிப்பகம்

www.padippakam.com



# இதுதான் இன்றைய இந்தியா

நினைவிருக்கிறதா? டிசம்பர் 2, 1984. பத்தாயிரம் பேரைக் கொன்று ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட மக்களை நிரந்தர மாக முடமாக்கிய போபால் விஷவாயுப் படுகொலை! போபால் புறநகர் சேரிப் பகுதி யில் வாழும் கூலி - ஏழைத் தொழிலாளர் குடும்பங்கள்தான் இதில் பெரிதும் பாதிக்கப் பட்டன. ஒட்டுத் துணியும் ஓட்டைக் கூரையு மாக வாழ்க்கைப் போராட்டத்தில் இறங்கிய சாமானிய மக்கள் அவர்கள். பாதிக்கப்பட் டது அவர்கள் மட்டுமல்ல; பிறக்கும் ஒவ் வொரு குழந்தையும் உடல் அங்கங்கள் பாதிக்கப்பட்டு விகாரமாகவே பிறக்கின் றன. உரிய மருத்துவ வசதியோ, நிவாரண உதவியோ இன்றுவரை அவர்களுக்குக் கிடைக்கவில்லை.

ஆண்டுகள் ஆறாகியது. ஆட்சிகள் மாறின. ஒவ்வொரு முறையும் நிவாரண உத விகள் செய்வதாக ஓட்டுக் கட்சிகள் வாக்கு றுதி மழையில் அவர்களை நனைத்தன. ஆனால் அவர்களின் அவலம் மட்டும் மாற வில்லை.

பின்னர் ஆட்சிக்கு வந்த பாரதீய ஜன தாவின் பட்வா அரசு அவர்களுக்கு எந்த நிவாரண உதவியும் செய்யாததோடு, நகரை அழகுபடுத்துவது என்ற பெயரில் இதோ, அவர்களின் குடிசைகளையே புல்டோசரை வைத்து இடித்துத் தள்ளுகிறது. சிவப்புத் தோலும் பெருத்த தொப்பையுடனும் திரியும் மேட்டுக்குடி கும்பலுக்கு விஷவாயுவால் தாக்கப்பட்ட இவர்களை ்க் கண்டாலே அரு வெறுப்பாக இருக்கிறது. இக்கோமான்க ளின் உல்லாச களிவெறியாட்ட நகரில் அவ லட்சணமான இவர்களை அதுவும் சேரி வாழ் மக்களை எப்படி அனுமதிக்க முடி யும்? எனவே மனிதாபிமான உணர்வற்ற வக்கிரம் பிடித்த இக்கும்பல் அவர்களை ஊரைவிட்டே ஏன், உலகத்தை விட்டே விரட்டக் கிளம்பிவிட்டது.

கடந்த மே மாத இறுதியில் ஷாகிர்நகர், ஷாஜிதா நகர், ஃபடேகார் முதலான சேரிப் பகுதிகளை புல்டோசரால் இடித்து 60,000 மக்களை அப்பகுதியிலிருந்தே விரட்டியடித் துள்ளது பாரதீய ஜனதா அரசு. முறையான வாடகை ரசீது, நிலப்பட்டா ஆகிய சட்ட பூர்வ உரிமையைக் காட்டியும்கூட அவற்றை ஏற்க அரசு மறுக்கிறது. இதற்கெதி ரான உச்சநீதி மன்றத்தில் தடை உத்திரவு வாங்கியுள்ள போதிலும் ம.பி. அரசு அதை மதிக்கவில்லை.

நொந்த மாட்டை காக்கை கொத்துவது போல, ம.பி. அரசின் இம்மக்கள் விரோத நடவடிக்கையை சகிக்க முடியாமல் இரு தாய்மார்கள் தற்கொலை செய்து கொண்ட னர். ஆயிரக்கணக்கான மக்கள் குடிசை இடிப்புக்கு எதிராகத் திரண்டு தடுத்தபோது ஆயுதப் போலீசுப்படையைக் குவித்து அவர்களை மிருகத்தனமாக தாக்கியது அரசு. அப்பகுதிவாழ் மக்களை லாரிகளில் நாய்களைப் போல் அடைத்து, தொலை தூரத்தில், பாம்புகள் நிறைந்த காட்டுப் பகுதி யில் இறக்கிவிட்டு அங்கே குடியமருமாறு அரசு உத்திரவிட்டுள்ளது.

நேற்று அவர்களுக்கு குந்த ஒரு குடிசை இருந்தது. இன்று அதுவும் பறிக்கப்பட்டு இதோ, அவர்கள் காட்டுப் பகுதியில் தமது குடும்பத்துடன் பரிதவிக்கிறார்கள். மருத்து வமனையிலிருந்து வெகுதொலைவில் இருத்தி வைக்கப்பட்டுள்ள அவர்கள் இனி தொடர்ந்து சிகிச்சை பெறவும் வழியில்லா மல் கொஞ்சம் கொஞ்சமாக சாகடிக்கப் படு கிறார்கள்.

வக்கிரம் பிடித்த இம்மக்கள் விரோத ஆட்சியாளர்களை தண்டிப்பது எப்போது? மக்கள் வாழ்வது எப்போது?



படிப்பகம்